குண்டூசி

மே 1953.....எட்டு அணா

713

"இது உண்மை...

லக்ஸ் டாய்லட் சோப்

உபயோகித்தால்
நீங்கள் அதிக
அழகோடு
விளங்குவீர்கள்"
என்று கூறுகிறார்

மங்களம்

மங்களம் கூறுவதாவது: "லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புத மாறுதலை ஏற்படுத்தியி ருப்பதைக் காண்கிறேன். இந்த சுத்தமான, வெண்மையான டாய்லட் சோப்பை நான் தினமும் உபயோகிப்பதால் என் சருமம் மிகவும் மென்மையாக இருக்கிறது."

லக்ஸ்
டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 373-50 TM


லிப்டன்
ஹிமாலயன்
ப்ளெண்ட்
டீ
LIPTON'S
HIMALAYAN BLEND
DARJEELING
FLOWERY ORANGE PEKOE
ലിപ്ടൺ
വജ്ര ജൂബിലി
60 കൊല്ലങ്ങളായി ഇന്ത്യയിൽ
டார்ஜிலிங் குணம் நிறைந்த டீ
LHLX 9 TM

விநாயகர்
சுருட்டுகள்
ஷெல் பிராண்டு

TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி. 18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.

N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும்.... எம்மிடம் கிடைக்கும்....

சோல் டிஸ்டிரிபியூட்டர்ஸ் :

M. P. S. ரத்தினசாமி நாடார் & பிரதர்ஸ்

மளிகை, அரிசி & பருப்பு நவதானிய மொத்த வியாபாரம்

107-108, ஆச்சரப்பன் தெருவு :: :: மதராஸ்—1.

"Theatre chairs with Dunlopillo cushions and arm rests provide the maximum of seating comfort, and at the same time the highest acoustic absorption yet reached

Latex foam cinema seating

in theatre seats"—Ideal Kinema. Dunlopillo cinema seating is most economical. It has no springs or separate pieces and therefore needs no repairs. Being self-ventilating with millions of cells, it is COOL. It repels bugs. What could be more suitable for a climate such as ours?



DUNLOPILLO

NOW MADE IN INDIA
BY

DUNLOP

FOUNDERS OF THE LATEX FOAM INDUSTRY

இந்த ஊசியில்

மே 1953

கண்ணைராவிகள்! ...	தலையங்கம்	5
இது செய்தி	செய்திகள்	6
படத்திற்கொரு நடிகன் பாரதி	...	8
''தந்தை'' ...	பட விமர்சனம்	13
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	14
டைரெக்டர் பிரஸாத்	பேனாச் சித்திரம்	19
எம். வி. ராஜம்மா	மூவர்ணப் படம்	21
நரசிம்ம பாரதி ...	... ஆர்ட் படம்	22
சென்னை யாருக்கு?	டி. எஸ். பாலய்யா	23
பிரேரா	பேட்டி	27
''மனிதன்'' ...	படக் காட்சிகள்	31
நுனிப்புல் ...	'வெட்டுக்கிளி'	35
''குமாஸ்தா'' ...	பட விமர்சனம்	39
பெற்ற தாய் ...	படக் காட்சிகள்	42
பொதுஜனம் பேசுகிறார் ...	கடிதங்கள்	44
புஸ்தகப் பொழுது	புஸ்தக விமர்சனம்	48
வீரத்தேவன் கோட்டை	தொடர் கதை	51
ஜமுனா ...	... ஆர்ட் படம்	63
டி. ஆர். ராஜகுமாரி	... ஆர்ட் படம்	64
நாட்டிய முத்திரைகள் ...	அ. ரா. கி.	66
''சத்திய சோதனை''	பட விமர்சனம்	68
சென்னையில் கலை விழாக்கள்	செய்தி	72
மர்மமாலா ...	... 'கிருஷ்ணா'	72
பிரம்மலோகம் ...	படச் செய்திகள்	79

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6

வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா

இலங்கை ... ... 50 சதம்

வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

''குண்டூசி''யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப் படுபவைகளுக்குத் தக்க சன்மானம் உண்டு.

அங்கீகரிக்கப் படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர் வைத்து அனுப்ப வேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு :—''குண்டூசி''யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் எவரையுமே குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

மே, 1953

பட்டை—6 ஊசி—8 பிரதி—68

கண்ணராவிகள்!

சென்ற ஒரு வருஷ காலத்தில் சினிமாத் தொழிலைத் தாக்காத வர்க்கத்தினரே யில்லை என்று சொல்லாம். ஏன், சினிமாவை மட்டுமா? சினிமா சம்பந்தமான விளம்பரப் போஸ்டர்கள், பேனர்கள் முதலியவைகளையும்கூட இப்பொழுது தாக்கத் தொடங்கியுள்ளனர்.

சென்ற மாதம், சென்னை சட்டசபையில் டாக்டர். ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், "சென்னைச் சுவர்களை அசங்கியப் படுத்தும் ஆபாசப் போஸ்டர்களை ஒழிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

சிலர் படங்களைத் தாக்குகிறார்கள்; சிலர் போஸ்டர்களைத் தாக்குகிறார்கள்; வேறு சிலர் சினிமா சம்பந்தப்பட்டவர்களைத் தாக்குகின்றனர். மிகுந்த சிரமத்தின் பேரில், ஏராளமான தொகைகளைச் செலவழித்துப் படத்தை வெளியிடும் படமுதலாளிகளையோ படுதோல்வி தாக்குகிறது! இவ்வளவு தாக்குதல்களுக்கும் தாக்குப் பிடித்துக்கொண்டு நம் படத்தொழில் பயங்கரமான நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அநேக படங்களில் ஆபாசக் காட்சிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆபாசக் காட்சிகளை படங்களுடன் நிறுத்திக் கொள்ளாமல் போஸ்டரிலும் எடுத்து விளம்பரப்படுத்தி விடுகிறார்கள்.

சில வருஷங்களுக்கு முன் ஒரு ஆம்வார் படம் வெளிவந்தது. அதன் போஸ்டர்களில் முழுக்க ஒரு நடிகையின் ஆபாசக் காட்சியேதான் சித்தரிக்கப்பட்டிருந்தது! இவைகளைப் பார்க்கும்போது, "நாங்கள் காட்ட விரும்புவது அசல் படமல்ல; இதுமாதிரி ஆபாசக் காட்சிகள் தாம்" என்று அறைகூவுவதுபோலவே இருக்கிறது.

சிலர் தங்கள் படங்களில், கவர்ந்திழுக்கும் தன்மையுடைய காமக் காட்சிகள் இல்லையென்றாலும், அவைகளை போஸ்டரில் மட்டும் வரையச் செய்து ஜனங்களைக் கவர்ந்து வருகிறார்கள்.

இந்தியப் படமுதலாளிகள் மட்டுமே இப்படிச் செய்து வருவதாக நினைக்க வேண்டாம்; ஆங்கிலப்பட விநியோகஸ்தர்களும் இதேபோல்தான் செய்து வருகிறார்கள். மொத்தத்தில், நகரத்தில் எங்கு திரும்பினாலும் காமக் கிளர்ச்சி உண்டு பண்ணும் படங்கள் காணப்படுகின்றன.

பட முதலாளிகள் தங்கள் படங்களிலுள்ள ஆபாசக் காட்சிகளை இவ்வளவு விரிவான முறையில் விளம்பரப்படுத்திவிட்டு, "நாங்கள் தயாரிக்கும் படங்களில் ஆபாசக் காட்சிகளே கிடையாது" என்று சொன்னால் யார்தான் நம்புவார்கள்? எனவே. நம் படத்தொழிலுள்ளவர்கள் இத்தொழிலைப்பற்றி நல்லெண்ணத்தைப் பரப்ப விரும்புவார்களானால் ஆபாசமான போஸ்டர்கள், பானர்கள் முதலியவைகளை முதலில் கைவிட வேண்டும்.

இது செய்தி

எதிர்ப்பும்-வெற்றியும்

டெல்லியில், ஆதர்ச மகில சபா என்ற பெண்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. சினிமாக்கள் பொது மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கின்றன என்றும். ஆபாசப் படங்களைத் தடுக்க அரசாங்கத்தால் ஆகவில்லை யென்றும் பலர் பேசினார்கள். கூட்டத்தின் இறுதியில் அவர்கள் பின்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். பெண்கள் சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து, ஆபாசப் படங்களைத் திரையிடக் கூடாதெனக் கிளர்ச்சி செய்யவேண்டும். மாணவர்களைக் கெடுக்கும் மாட்டினிக் காட்சிகளையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாளையங்கோட்டை நகரில் ஒரு தியேட்டரில் ''பாலித் தீவின் கன்னிகள்'' என்ற ஆங்கிலப் படம் சென்ற மாதம் 9ம் தேதி திரையிடப்படுவதாக இருந்தது. ஆனால் அங்குள்ள மாதர் சங்கம் முன்வந்து மேற்படி படத்தைத் திரையிடக் கூடாதெனக் கிளர்ச்சி செய்ததுடன், கலெக்டருக்கும் வேண்டுகோள் விடுத்தது. அதன் பயனாக கலெக்டர் தியேட்டர் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்ள, மேற்படி படம் திரையிடப்படாது நிறுத்தப்பட்டது.

உதயசங்கர் விளக்கினார்

பிரபல நாட்டிக்காரரான உதயசங்கரும், அவரது மனைவி அமலா தேவியும் இந்தியாவின் பல பாகங்களிலும் நடனமாடிவிட்டு சென்னை திரும்பியவர்கள் சென்ற மாதம் 14ம் தேதி பத்திரிகாசிரியர்களைத் தம்பங்களாவுக்கு அழைத்திருந்தார். அனைவருக்கும் தேநீர் விருந்து அளித்து, பல சாஸ்திரீய நடனங்களை ஆதாரமாகக் கொண்டு, பழைய பரம்பரையைக் கைவிடாமல், நடனத்தில் புதிய அம்சத்தை சிருஷ்டித்து ஜனரஞ்சகமாகச் செய்வதே தமது நோக்கம் என்பதைக் கூறினார். சீக்கிரமாகவே தமது கோஷ்டியுடன் கிழக்கு ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்குப் போகப் போவதாகவும் அவர் கூறினார். இறுதியில் அவரது வாத்திய கோஷ்டியினர், புதுமுறையில் தயாரித்த சங்கீதத்தை வாசித்துக் காட்டினார்கள்.

சலுகை நீடிப்பு

இந்த வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, நாடகங்களுக்கு தமாஷா வரியிலிருந்து விலக்களித்து வரும் சலுகையை, மேலும் ஒரு வருஷத்திற்கு சென்னை சர்க்கார் நீடித்திருக்கின்றனர். பதிவு செய்யப்பட்ட சபாக்களால் நடத்தப்படும் நாடகங்களுக்கு மட்டும் இச் சலுகை அளிக்கப்படும் என்று தங்கள் உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த சபாக்கள் லாபம் கருதாது நாடகக் கலையை அபிவிருத்தி செய்பவைகளாக இருக்க வேண்டுமாம்.

தடை நீக்கம்

சினிமா தியேட்டர்களுக்கு கட்டட சாமான்களை உபயோகிப்பதைத் தடை செய்து இருந்து வந்த சட்டத்தை, சென்னை சர்க்கார் இம்மாதம் 7-ம் தேதி நீக்கிவிட்டிருக்கின்றனர்.

மின்சார வெட்டு

சென்னையில் சென்ற மாதம் ஏற்பட்டுள்ள மின்சாரவெட்டு காரணமாக நகரிலுள்ள பல தியேட்டர்களில் நடைபெறும் காட்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல தியேட்டர்களில் வாரம் இரண்டு நாட்கள் மட்டுமே மாட்டினி காட்சிகள் நடைபெறுகின்றன. மற்றும் சில தியேட்டர்களில் அத்துடன் வாரம் ஒரு நாள் தியேட்டரில் காட்சிகளே கிடையாது.

கலைஞர்களுக்கு கட்டண சலுகை

வெளியூர்களில் கச்சேரிகள் நடத்த, ரயிலில் பிரயாணம் செய்யும் நாட்டிய கோஷ்டி, நாடக கோஷ்டி, ஸர்க்கஸ் கோஷ்டி, சங்கீத கோஷ்டி ஆகியவைகளுக்கு கட்டணத்தில் சலுகை அளிக்க ரெயில்வே போர்டு தீர்மானித்துள்ளது. அதேபோல அவர்கள் எடுத்துச் செல்லும் சாமான்களுக்கும் கட்டணத்தில் சலுகை அளிக்கும். கோஷ்டியில் ஐந்து பேருக்குக் குறையக் கூடாது என்றும்,

குறைந்தது நூறு மைல்களாவது பிரயாண தூரம் இருக்க வேண்டுமென்றும் நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்னைக்கு மாற்றலாகி வந்துள்ள, தணிக்கை போர்டின், புதிய பிராந்திய ஆபீஸர் எஸ். ஏ. அய்யருக்கு, சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர், சென்ற மாதம் 4ம் தேதி வரவேற்பளித்தனர். சங்கத்தின் தலைவர் வி. ஸி. கோபால்ரத்னம், எஸ். ஏ. அய்யரை வரவேற்றுப் பேசினார். எஸ். ஏ. அய்யர், சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

சென்ற மாதம் 12ம் தேதி நடைபெற்ற சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் புது வருஷத்திற்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. மீண்டும் வி. ஸி. கோபால்ரத்னமே தலைவராகவும், ஏ. அருணாசலம், ராஜம்மாள் அனந்தராமன் இருவரும் உப தலைவர்களாகவும், இ. டி. சாமுவல் காரியதரிசியாகவும், என். ராஜரத்னம் கூட்டுக் காரியதரிசியாகவும், இது தவிர ஒன்பது கமிட்டி அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேம்பர் வரவேற்பு

சென்னைக்கு விஜயம் செய்திருந்த, மத்திய தணிக்கை போர்டு தலைவர் அகர்வாலாவுக்கும், மற்றும் நான்கு அங்கத்தினர்களுக்கும், தென்னிந்திய பிலிம் சேம்பர் சென்ற மாதம் 22ம் தேதி ஒரு வரவேற்பு அளித்தது. சேம்பரின் தலைவர் ஏ. ராமய்யா அவர்களை வரவேற்றுப் பேசுகையில், சினிமாத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றிக் குறிப்பிட்டு, தணிக்கை கடுமையாக இருப்பது கூடாது என்று கூறினார். வரவேற்புக்கு பதிலளித்த, போர்டு தலைவர் அகர்வாலா 'மனிதனுடைய கீழ்த்தர உணர்ச்சிகளை கிளறக்கூடாது. படங்களில் அத்தகைய போக்கு உள்ளவரை தணிக்கை அவசியம்' என்று சொன்னார்.

ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கம்

ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா மார்ச் மாதம் 29ம் தேதி தியாகராயநகர் ஹிந்தி பிரசார சபையில் நடைபெற்றது. இதற்கு நிதிமந்திரி ஸி. சுப்ரமண்யம் தலைமை வகித்தார். சங்கக் காரியதரிசி. என். கிருஷ்ணசாமி, நக்ஷத்திர கிரிக்கெட் மூலம் வசூலான தொகையை, சென்னை நகரமேயர், டி. செங்கல்வராயனிடம் அளித்தார். மேயர் வந்தனம் தெரிவித்துப் பேசுகையில், சென்னை நகரம் பற்றி ஒரு கதை எழுதப்பட்டு வருதவாயும் அதைப் படமாக்கித் தரும்படியும் சங்கத்தினரைக் கேட்டுக் கொண்டார்.

இச் சங்கத்தின் மூன்றாவது கன்வென்ஷன் அதே தினம் பிற்பகல் நடைபெற்றது. வாஹினி ஒலிப்பதிவு எஞ்சினியர் ஏ. கிருஷ்ணன் பி.ஏ, தலைமை வகித்தார்.



''வாங்க! வாங்க! எங்கே நட்ட நடுராத்திரியிலே இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க!''
''ஒண்ணுமில்லிங்க....... என்கிட்ட புகையிலை ஆயிடுத்து. நேரம் ஆயிட்டதினாலே கடைகள் எல்லாம் மூடிட்டாங்க. நீங்களும் ''மைதீன்'' புகையிலை போடுகிறவர்ங்கரது ஞாபகத்திற்கு வந்தது. உடனே காரை எடுத்துண்டு வந்துட்டேன்!''

Advt

படத்திற்கொரு நடிகன்

பாரதி...!

மதன மோகினி

முன்காலத்தில், "படத்துடன் 'ஸ்டேஜ் டான்ஸு'ம் உண்டு" என்று விளம்பரப்படுத்துவார்கள். இதன் அர்த்தம் என்னவென்பது மௌனப்பட ரஸிகர்களுக்குத் தெரியும். அதாவது, மௌனப் படங்கள் காட்டப்படும் தியேட்டரில் இடைவேளையிலோ, அல்லது படம் காட்டப்படுவதற்கு முன்போ மேடையில் நடனக் காட்சிகள் நடைபெறும் என்பதே இதற்கு அர்த்தம். சில சமயம் நடனத்திற்குப் பதில் காமிக், அல்லது சிறிய நாடகம், அல்லது சங்கீதக் கச்சேரி, இதுமாதிரி ஏதாவது நடப்பதும் உண்டு. கண்ணிற்கு மட்டுமே விருந்தளிக்கக் கூடிய சக்தியைப் பெற்றிருந்த மௌனப் படங்களுக்கு அதிகமான பொதுஜன ஆதரவைப் பெறுவதற்

கிருஷ்ண விஜயம்

காக தியேட்டர்காரர்கள் இந்த முறைகளைக் கையாண்டு வந்தார்கள்.

பேசும் படங்கள் வெளிவரத் தொடங்கியதும், மெதுவாக இந்த இடைவேளை அயிட்டம் பேசும் படங்களையும் பற்றிக் கொண்டன. மட்டமான பேசும் படங்களுக்கு வசூல் ஏற்படுத்துவதற்கு இம் முறை கையாளப்

பொன்முடி

படலாயின. இந்த மாதிரியான 'இடைவேளை அயிட்டங்'கள் மூலம் சில ஆண் பெண்கள் பொது ஜன ஆதரவைப் பெற்று 'நக்ஷத்திரங்களாக'வும் மாறினார்கள். பிறகு இந்த நக்ஷத்திரங்களில் சிலர் சினிமா நக்ஷத்திரங்களாகவும் மாறினார்கள். இதெல்லாம் நம் சினிமாத் தொழிலின் வளர்ச்சியை சென்ற கால் நூற்றாண்டு காலமாக கவனித்து வந்தவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும் செய்தி அல்லதான். ஆனால், அவர்கள்கூட ஆச்சரியப் படத்தக்க செய்தி ஒன்றை நான் இப்பொழுது கூறப் போகிறேன். பேசும் பட ஆரம்ப காலத்தில் இடைவேளை நடன நக்ஷத்திரப் புகழுடன் விளங்கிய ஒரு 'பெண்மணி' இப்பொழுது பேசும் படங்களில் ஒரு பிரபல கதாநாயகனாக இருந்து வருகிறார் என்பதே அது! அவர் வேறு யாருமில்லை— நம் பிரபல சினிமா நக்ஷத்திரமான நரசிம்ம பாரதி தான் அவர்!



பூகம்பம்

மாப்பிள்ளை

"என்ன, நரசிம்ம பாரதியா ! பெண் வேஷத்திலா ! நடனம் ஆடி வந்தாரா!" என்று நீங்கள் மூச்சுத் திணறக் கேட்கிறீர்களல்லவா! ஆதலால், நான் "ஆம்; அவரே தான்" என்று அழுத்தமாக இன்னெரு முறையும் சொல்லுகிறேன். ஏன், சினிமாவில்கூட அவர் சேர்ந்த புதிதில் இரண்டொரு படங்களில் நடனம் ஆடியிருப்பதை நீங்கள் மறந்து விட்டீர்களா!

பார்ப்பவர்களை ஆச்சரியப்படச் செய்யும் அழகுடன், துந்துபி வருஷம் பங்குனி மாதம் 11ந் தேதி (1923 மார்ச் கடைசி வாரத்தில்) மதுரையில் மிகுந்த செல்வாக்குடன் நெசவுத் தொழில் நடத்தி வந்தவரான வெங்கடாசலபதி அய்யருக்கும், அவரது மனைவி ஹரிலக்ஷ்மி அம்மாளுக்கும் பிள்ளையாகப் பிறந்தார் நரசிம்ம பாரதி. மூத்த மனைவிக்கு ஒரு ஆண்; இரண்டு பெண்; ஆக மூன்று குழந்தைகள் பிறந்தனர். அவள் இறந்த பின்



மாப்பிள்ளை

வெங்கடாசலபதி அய்யர் ஹரிலக்ஷ்மியை மணந்துகொண்டார். அவர் 'பாரதி'யைத் தவிர அவரது தம்பியான நன்னுசாமி என்பவரையும் பெற்றெடுத்தார்.

குழந்தை பார்க்கச் சகிக்காமல் இருந்தால்கூட தாய்மார்கள் அதனுடன் கொஞ்சாமல் இருப்பதில்லை. அப்படியிருக்க, பாரதி மூக்கும் விழியு

மாய் நல்ல அழகுடன் பிறந்திருந்தார் என்றால்சொல்ல வேண்டுமா? சதா குழந்தையைக் கொஞ்சுவதும், அதற்கு திருஷ்டி சுற்றிப் போடுவதுமே தாயாருக்கு வேலையாக இருந்து வந்ததாம்.

இதுபோல செல்லமாக வளர்க்கப்படும் குழந்தைகள் படிப்பில் பூஜ்யமாகி விடுகின்றனர் என்பதற்கு பாரதியே ஒரு உதாரணம் ஆவார். வழக்கத்தையொட்டி பாரதி ஐந்தாம் வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அவர் நிறையப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று தகப்பனார் ஆசைப்பட்டார். தாயாருக்கோ தன் குழந்தையைப் பிரிந்து பள்ளிக்கு அனுப்ப மனமில்லை. இந்த நிலையில் பாரதிக்கோ படிப்பு ஏறவே யில்லை. ஆதலால் அப்படியும் இப்படியுமாய் அவர் இரண்டு வருஷ காலத்தை பள்ளிக்கூட நிழலில் கழித்துவிட்டு, படிப்பிற்கு ஒரேயடியாய் முழுக்குப் போட்டுவிட்டார். எப்படியாவது அவரை மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று தகப்பனார் செய்த முயற்சிகள் முழுத் தோல்வியாகவே முடிந்தன. பையன் படிப்பிற்குப் பதில் நெசவுத் தொழிலில் ஈடுபட

அபிமன்யு

என் தங்கை

விரும்புவதாகச் சொன்னான். "சரி, படிப்பு இல்லா விட்டாலும் தொழிலையாவது கவனிப்பதாகச் சொல்லுகிறானே" என்று சந்தோஷப் பட்டுக்கொண்டு சம்மதித்தார் தகப்பனார். தம் பதினோருவது வயதில் தம் தகப்பனாரின் சொந்தத் தறியிலேயே நெசவுத் தொழிலைக் கற்றுக் கொள்ள முற்பட்டான் பையன். ஆரம்பத்தில் நெசவுத் தொழில் பாரதிக்கு விளையாட்டா

கத் தோன்றியது. ஆனால், அதைச் செய்வதற்கு அத்தியாவசியமான பொறுமைதான் அவரிடம் இல்லை. ஆதலால் அதை அவர் சீக்கிரத்திலேயே வெறுக்கத் தொடங்கி விட்டார்.

பாரதிக்கு இயற்கையான சாரீர வசதி இருந்ததால் அப்பொழுது இசைத் தட்டுகள் மூலம் வெளிவந்த நாடகப் பாட்டுகளைக் கேட்டுத் திரும்ப அப்படியே பாடி வந்தார். பிறகு அந்த ஊரில் நடந்து வந்த செளராஷ்டிர திருப்புகழ் கோஷ்டியிலும் அவருக்கு இடம் கிடைத்தது. அந்தக் காலத்தில் மதுரை சுற்றுப் புறங்களில் எங்கு கோவில் கும்பாபிஷேகங்கள் நடந்த போதிலும் அங்கு மேற்சொன்ன திருப்புகழ் கோஷ்டி ஆஜராகி விடும். அதில் ஒருவராக இருப்பார் பாரதி. இப்படியாக அவர் செட்டி நாட்டில் பல ஊர்களில் திருப்புகழ் பாடி விட்டுத் திரும்பி யிருக்கிறார்.

பாட்டிலும், கோஷ்டியிலும் முதலில் ஏற்பட்ட நாட்டம் பிறகு நாடகத்தின் பால் சென்றது. அந்த சமயத்தில் மதுரையில் செளராஷ்டிர வகுப்பினர் சுகுணோதய சபா என்ற நாடகக் கம்பெனியை ஆரம்பித்தனர். பாரதி இந்தக் கம்பெனியில் சேர்ந்து, செளராஷ்டிர பாஷை நாடகங்களில் அடிக்கடி நடிக்கத் தொடங்கினார். பதிபக்தி நாடகத்தில் அவர் பாரதியின் வேஷத்தை நடித்து மிகப் புகழ் பெற்றதால் அவரை 'நரசிம்மன்' என்பதற்குப் பதில் 'பாரதி' என்றே எல்லோரும் அழைக்கத் தொடங்கி விட்டனர்.

இப்படியாக இரண்டு வருஷ காலம் கழிந்தது. இதற்குள் பாரதியின் ரத்தத்தில் நாடக எண்ணம் நன்கு ஊறிப் போய் விட்டது. தமிழ் நாடகங்களில் நடிக்க வேண்டுமென்று ஆசை கொண்டார். நாடகத்தையே தம் தொழிலாக ஆக்கிக் கொண்டுவிட வேண்டுமென்றும் அவர் தீர்மானித்தார். தம் தீர்மானத்தை பக்குவமாகப் பெற்றோர்களிடமும் தெரிவித்து அவர்களுடைய அனுமதியையும் எப்படியோ அவர் பெற்றுவிட்டார்.

அந்தக் காலத்தில், வள்ளியம்குன்றம் ஜமீன்தார் ஒரு நாடகக் கம்பெனியை ஆரம்பித்து நடத்தி வந்தார். அந்தக் கம்பெனியில் பாரதி தம் பதிமூன்றாம் வயதில் மூன்று வருஷ ஒப்பந்தம் செய்து கொண்டு ஒரு நடிகனாய்ச் சேர்ந்தார். அவர் சேர்ந்த சில மாதங்களுக்கெல்லாம் கம்பெனி வெளியூர்

[தொடர்ச்சி 82-ம் பக்கத்தில்]

ரஸிகர்களை ஏமாற்றிவிட்ட "தந்தை"

உணர்ச்சிமிக்க கதையும்—நடிப்பும்

ஒரு படம் 'நன்ருக இருக்காது' என்ற எண்ணத்துடன் அதைப் பார்க்கப் போகிருன் ஒரு ரஸிகன். ஆனல், அவன் எதிர்பார்த்ததற்கு நேர் மாருக, படம் ரஸிக்கும்படி யிருந்து விட்டால் அப் படம் அவனை ஏமாற்றி விட்டது என்று தானே சொல்ல வேண்டும்! எக்ஸெல் புரொடக்ஷன்ஸாரின் "தந்தை" அப் படித்தான் ரஸிகர்களை ஏமாற்றி விட்டது.

இப்படத்தின் வெற்றிக்கு முதல் காரணமாகக் கதையையும், வசனத்தையும் கூறவேண்டும். புது மாதிரியான சமூகக் கதை. தந்தை ஒருவன் தன் தநயன் மீது வைத்த பாசத்தை விளக்குவதாக அமைந்து விட்டிருக்கிறது கதை. தநயனுக்காகத் தந்தை படும் அவஸ்தைகள், அவன் சுகத்திற்காகத் தன் சுகத்தையும் பொருட்படுத்தாமை ஆகிய பல வருத்தமான சம்பவங்களைக் கொண்டிருக்கிறது. உணர்ச்சி மிக்க கதைக்கு அனுசரணையாக கருத்தோய்ந்த "கம்பதாஸனி"ன் வசனங்கள் அமைந்திருக்கின்றன.

சந்திரனின் அண்ணனுக்கு விவாகமாகாமல் சந்திரனுக்கு எப்படி விவாகம் ஆயிற்று! முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு நாட்டியக்காரி, சந்திரனிடம் வந்து அவன் அளித்த மோதிரத்தை வாங்கிக் கொள்வது நடக்கக் கூடியதா? மானேஜர் "எங்காவது ஓடிப் போய்விடலாம் வா" என்று அழைக்கும்போது "உங்கள் இஷ்டம்" என்று உஷா கூறுகிருள். அப்படியிருக்க அவளைக் குற்றமற்றவள் என்று எப்படிக் கூறமுடியும். இப்படியாகக் கதையில் சிற்சில குறைகள் காணப்படுகின்றன.

பாட்டுகள் ("கம்பதாஸன்") அனைத்துமே நல்ல கருத்துடன் எழுதப்பட்டுள் ளன. முக்கியமாக "நாமே முதலாளி நமக்கினி நாமே தொழிலாளி", "சுடர் விடும் பொன் விளக்கு", "கேளுங்கோ" ஆகியவைகளைக் குறிப்பிடலாம். பதினேழு பாட்டுகள் மிகவும் அதிகம். சில பாட்டுகளை நீக்கி படத்தின் நீளத்தையும் 15,950 அடிகளிலிருந்து குறைத்து படத்தையும் மேலும் விறுவிறுப்பாக்கி யிருக்கலாம்.

இப் படத்தைப் பார்த்தபின், "அந்த மான் கைதி" பட விமர்சனத்தில், நான் தீக்குரிச்சியைக் குறித்துக் கூறிய அபிப்பிராயத்தை ஓர் அளவு மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது. இந்தப் படத்திலேயே தந்தையாக நடிக்கும் தீக்குரிச்சி சுகுமாரன் நாயரின் நடிப்புத்தான் பிரமாதமாக இருக்கிறது. படத்திற்கே அவரது நடிப்புத்தான் ஜீவனுக இருக்கிறது. தநயனிடம் பாசம் கொண்ட தந்தையாக ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ச்சியுடன் நடித்திருக்கிருர். "உன் மகன் உனக்கு வேண்டும். என் மகன் எனக்கு வேண்டும்" என்று கூறும் கடைசி கட்டத்தில் அவரது நடிப்பு பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது. இவர் இம்மாதிரி பாத்திரங்களையே ஏற்று நடித்தாரானுல் இவருக்கும் நலம்; ரஸிகர்களுக்கும் விருந்து. இன்னும் நிறையத் திருந்த வேண்டுமென்ருலும், இவரது தமிழ் உச்சரிப்பில் கூட அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. தந்தையைக் கலங்க வைக்கும் தநயனுக வரும் பிரேம் நஸீரிடம் நடிப்புத்திறமை இருக்கிறது. ஆனல், உடம்பிலே கொஞ்சம் சதைப் பிடிப்பு இருந்தால் நன்ருயிருக்கும்.

நாடகக்காரி உஷாவாக பி. எஸ். சரோஜா நன்ருக நடித்திருக்கிருர். இவர் ஆடியுள்ள அனர்க்கலி, மேனகா நடனங்கள் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. மற்ற நடிகர், நடிகைகள் அனைவருமே சுமார்தான். இப்படத்தின் ஹாஸ்ய கட்டங்கள் ரஸிக்கும்படி யில்லை.

டைரெக்ஷனைப் பற்றிப் பிரமாதமாகப் புகழும்படி ஒன்றுமில்லை. என்ருலும், முக்கியமான காட்சிகளில் விறுவிறுப்பு இருக்கும்படி பார்த்துக் கொண்டிருக்கிருர். குன்றுகள் சூழ்ந்த ஒரு இடத்தில் உஷா பாடும்போது, எதிரொலியும் கூடவே பாடுவதைக் காட்டியிருப்பது டைரக்ஷனில் போற்றத்தக்க ஓர் நல்ல அம்சம்.

ஒளி—ஒலிப்பதிவுகள் பரவாயில்லை. கனவுக் காட்சி சிறப்பாகப் படமாக்கப் பட்டிருக்கிறது. படத்தில் கண் நிறைந்த இயற்கைக் காட்சிகளை நிறையக் காண முடிகிறது.

மொத்தத்தில், "தந்தை" ஒரு முறை பார்த்து ரஸிக்க வேண்டிய உணர்ச்சி மிக்க ஒரு படம். —"ஜாம்பவான்".

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

டி. ஆர். நாராயணன் (முசிறி)

"குண்டூசி"யாரே உங்கள் பெயர் என்ன? சொந்த ஊர் எது? படிப்பு எது மட்டிலும்?

என் பெயரை நீரே சொல்லிவிட்டீர். சொந்த ஊர்—'பின் குஷன்'; படிப்பு—ஹாஸ்ய முறையில் குத்திக் காட்டிப் பதிலளிப்பது.

பி. பெரியசாமி (நோர்ட்டன் பிரிட்ஜ், இலங்கை)

மண்ணுலகில் பெண்ணாகப் பிறந்து ஆண் வேஷத்தில் நடித்துப் புகழ் பெற்ற மாதுரிதேவி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

"சொந்தப் படம் தயாரிப்பது சுலபமான வேலையல்ல" என்ற பிரத்தியட்சமான அனுபவத்தை அவர் பெற்று வருகிறார்!

எம். கே. காதர்மீரா (இலங்கை)

"குண்டூசி"யில் தொடர் கதையாக வெளிவரும் "வீரத்தேவன் கோட்டை"

பரணியின் தமிழ் - தெலுங்கு - ஹிந்திப் படமான "சண்டிராணி"யில் இக் காட்சி வருகிறது.





கண்ணோடு கண் சேரும்போது பேச்சுக்கு இடமேது? அதனால்தான் டி. ஆர். ராமச்சந்திரனும் அஞ்சலி தேவியும் சும்மா நிற்கிறார்கள் போலிருக்கிறது. ஜெயந்தி புரொடக்ஷன்ஸாரின் "பொன் வயல்" தமிழ்ப் படத்தில் இக்காட்சியைக் காணலாம்.

எப்பொழுது சினிமாப் படமாக வெளி வரும்?

கொஞ்சம் இரும்; பத்திரிகையில் கதை முடிவதற்குள்ளாகவே நீர் படத்திற்குப் போய்விட்டீரே!

பி. கே. கருப்பண்ணன் (பெரியகுளத்துப்பாளையம்)

தமிழ்ப் பட முதலாளிகள் ஏன் 'டெக்னிக் கலரி'ல் படம் எடுக்க முற்படவில்லை?

அவர்கள் முதலில் தோல்வியுறாத தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்குக் கற்றுக் கொள்ளட்டும். பிறகு, 'டெக்னிக் கலர்'க் கொள்ளையில் இறங்கலாம்!

எம். ஆர். வி. நடராஜன் (கமுதி)

ஒரு நடிகை, கணவர் தேர்தல் நடத்தினால், மேக்கப்மேன், டைரெக்டர், பட முதலாளி இவர்களில் யாரை அதிகம் விரும்புவார்?

பணம் உள்ள இடத்தில் பசையிருக்கும் என்பார்கள். படமுதலாளி கொடுப்பவர்; மற்ற இரு சாரரும் வாங்கிக் கொள்ளுபவர்கள். ஆதலால், நடிகை பட முதலாளிக்கே முதல் ஸ்தானம் அளிப்பார் என்று கூறவும் வேண்டுமா?

எம். எஸ். சூசைமாணிக்கம் (கொழும்பு)

டி. ஆர். மஹாலிங்கம், நாகேஸ்வர ராவ், ஸ்ரீராம், என். டி. ராமராவ், எம். ஜி. ராமச்சந்திரன், நரசிம்மபாரதி இவர்களுடன் எந்தெந்த நடிகைகளை ஜோடியாக நடிக்கச் செய்யலாம்?

முறையே வைஜயந்திமாலா, அஞ்சலி தேவி, பத்மினி, ஜி. வரலக்ஷ்மி, பி. எஸ். சரோஜா, மாதுரி தேவி ஆகியோரை ஜோடி சேர்க்கலாம். முன்பே சிலர் இது போல் ஜோடி சேர்ந்துமிருக்கிறார்கள்.

பி. கந்தசாமி (திருச்செங்கோடு)

என். எஸ். கிருஷ்ணனின் விலாஸத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தாண்டவராயன் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14" என எழுதும்.

எம். பி. நடராஜன் (கோயமுத்தூர்)

நரசிம்ம பாரதியின் விலாஸம் எனக்குத் தேவையாக இருக்கிறது. தெரிவிக்க முடியுமா?

முடியும்; "நல்லண்ணன் தெரு, மயிலாப்பூர், சென்னை-4" என்பது அவர் விலாஸம்.

பி. பச்சமுத்து (திருவண்ணாமலை)

பி. யூ. சின்னப்பா எத்தனை குழந்தைகளை விட்டுப் போயிருக்கிறார் என்பதைத் தெரிவிக்கவும்.

ராஜா பகதூர் என்ற ஒரே ஒரு புத்திரனை மட்டும் தான் அவர் விட்டுப் போயிருக்கிறார்.

டி. எஸ். சின்னசாமி (இலங்கை)

அஞ்சலி தேவி, டி. ஆர். ராஜகுமாரி இவ்விருவருள் நடிப்பிலும், அழகிலும், வசனம் பேசுவதிலும் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

சென்ற பத்து வருஷ காலத்தில் அஞ்சலி போன்ற எத்தனையோ புதுப்புது நக்ஷத்திரங்கள் தோன்றியிருக்கின்றனர்; மறைந்திருக்கின்றனர். ஆனால், ராஜகுமாரி இன்னமும் படவுலகில் மதிப்புடனேயே இருந்து கொண்டிருப்பதிலிருந்து அவருக்குத் தான் முதல் ஸ்தானம் அளிக்கவேண்டுமென்று கூறுகிறேன்.

வி. டி. நடராஜன் (கொழும்பு)

சினிமா உலகின் நோக்கமென்ன? சமூகத்தை சீர்திருத்துவதா? அல்லது ஆபாசக் காட்சிகளைக் காட்டி ரஸிகர்களின் மனதைக் கெடுப்பதா?

சமூகத்தை சீர்திருத்துப் நோக்கத்துடனே, ரஸிகர்களைக் கெடுக்கும் நோக்கத்துடனே படமுதலாளிகள் படம் தயாரிப்பதாகத் தெரியவில்லை. முதலில் லக்ஷக்கணக்கான ரூபாய்களை அவர்கள் செலவழிக்கிறார்கள். பிறகு இந்த பிரம்மாண்டமான தொகைகளை ஏராளமான லாபத்துடன் திரும்பப் பெறுவதற்கு என்ன வழி என்று யோசிக்கிறார்கள். அதன் விளைவு தான் இந்த ஆபாசக் காட்சிகள்!

பி. சண்முகசுந்தரம் (ஊர்காம்)

உண்மைக் காதல் நிறைவேறாவிடின் காதலனே சகோதரனா? "நாம்" படத்தில் குமாரனைக் காதலிக்கும் பிரேமாவதி, காதல் வெற்றி பெறாததால் அவனை சகோதரனாகக் கருதுவது சரியா?

காதலன்—சகோதரன், இந்த உறவு முறைகளைக் கண்டு, பாவம், நீர் கலங்கிப் போயிருக்கிறீர். நாங்கள் அப்படியல்ல. நடிகைகளின் வீடுகளில் காணப்படும் ஆண் நபர்களின் உறவு முறைகள் அடிக்கடி மாறிக்கொண்டேயிருப்பதைப் பார்த்து நாங்கள் பழக்கப்பட்டிருக்கிறோம்.

பிரேமகீதம் பாட ஸ்ருதி மீட்டுகின்றனர். "வாழப் பிறந்தவள்" தமிழ்ப் படத்தில் ஸ்ரீராமும்—பி. எஸ். சரோஜாவும்.



வெகு குதூகலமாக இருக்கும இந்த நால்வரையும் (குமரப்பா, கண்ணப்பா, கிருஷ்ணன், எஸ். ஆர். ஜானகி) சங்கீதா பிக்சர்ஸின் ''நால்வர்'' தமிழ்ப் படத்தில் காணலாம.

எஸ். வெங்கட்டராமன் (கோடவாசல்)

பி. கே. சரஸ்வதிக்குப் பாடத் தெரியுமா? அல்லது இரவல் குரலா?

ஆம்; இரவல் குரல்தான். படங்களில் தோன்றத் தொடங்கிய பின்னர் அவர் வெகு காலம்வரை பேசாமல்கூட இருந்தாரே, தெரியுமா!

ஏ. சங்கரன் (பாப்பாநாடு)

''சொர்க்க வாசலு''ம், ''ஔவையாரும்''ம் எப்பொழுது வரும் என்று ரஸிகர்கள் ஏங்கும்படி ஏன் செய்து வருகிறார்கள்?

இவையிரண்டும் இவ்வுலகிலில்லாத விஷயங்கள் பாரும். ஆதலால் ரஸிகர்கள் ஏங்கிப் பெறவேண்டியிருப்பது பொருத்தமே!

எம். எல். ஏ. மஜீத்

நம் நக்ஷத்திரங்கள் எல்லோரும் இப்பொழுது சொந்தத்தில் படம் தயாரிக்க முற்பட்டிருக்கிறார்களே. டி. எஸ். பாலய்யா மட்டும் ஏன் இன்னும் சொந்தப் படம் தயாரிக்கவில்லை?

உம் போன்றவர்களின் குறையை சீக்கிரமே நீக்கி விடுவதற்காகத்தான் இப்பொழுது அவர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்.

இந்துமதி (மயிலாப்பூர்)

தியேட்டர்களில் காட்டப்படும் செய்திப் படங்களை யார் தயாரிக்கிறார்கள்?

இந்திய சர்க்காரின் செய்திப்பட இலாகா இப்படங்களைத் தயாரித்து அனுப்புகிறது.

என். எம். ஆலோகம்ரதன் (கண்டி)

''சின்னதுரை''யில் கிருஷ்ணன்-மதுரம் நடித்திருக்கிறார்கள் - என்று ''வீரகேசரி'' பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். இது தவறுதானே?

இது முழுப் பொய். ''வீரகேசரி'' போன்ற ஒரு பிரபல பத்திரிகை இது மாதிரி ஒரு முழுப் பொய்யை வெளியிட்டது வருந்தத்தக்க விஷயம்தான்.

ச. கந்தசாமி (கொழும்பு-11)

''மனைவி''படத்தில் நடிக்கும் கிருஷ்ணவேணியும், பின்னணி பாடும் பி. ஜி. கிருஷ்ணவேணியும் ஒருவரே — என்று நான் என் நண்பனிடம் கூறினேன். அது சரியா?

அசோகா புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் "பத்மினி" தமிழ்ப் படத்தில் எஸ். மேனகா தலைக்கு வந்த ஆபத்திலிருந்து தலைக்கட்டுடன் தப்பியிருக்கிறார்.

தவறு. முந்தியவர் நடிகை. பிந்தியவர் பின்னணிப் பாடகி. தோற்றத்தில்கூட இருவருக்கும் நேர்மாறான வித்தியாசம் உண்டு. நடிகை கிருஷ்ணவேணி நல்ல உயரமானவர்; பாடகி கிருஷ்ணவேணியோ மிகக் குள்ளமானவர்.

குமாரி இந்திராதேவி (திருச்சி)

வி. நாகய்யாவின் விலாஸத்தை தயை செய்து தெரிவிக்கவும்.

C/o அவர் இந்தியா பில்ம்ஸ், கோபதி நாராயணசாமி செட்டி ரோடு, தியாகராயநகர், சென்னை-17-அவரது விலாஸம்.

எஸ். கிருஷ்ணன் (கொழும்பு)

ஜெமினி படங்களில் நடித்துவந்த ஆர். ரஞ்சன் ஏன் தமிழ்ப் படமெதிலும் நடிக்கக் காணோம்?

ரஞ்சன் பம்பாய் சென்று ஹிந்திப் படங்களில் வியாபகம் செய்து கொண்டிருக்கிறார். அதனால் தான் அவரைத் தமிழ்ப் படங்களில் காணமுடியவில்லை.

"ஓயிட்லென்ஸ்"(பாளையங்கோட்டை)

அரசியல், சினிமா இவ்விரண்டும் மக்களிடையே தற்சமயம் எவ்வாறு இருக்கிறது?

அர்த்தமற்ற ஒரே குழப்பமான நிலையில் இருக்கிறது என்பது தெரிந்த விஷயந்தானே!

ஆர்.கே.சுந்தரேசன் (திருநாகேஸ்வரம்)

டைரெக்டர் எம். வி. ராமனும், நடிகை எம். வி. ராஜம்மாவும் உடன் பிறந்தவர்களா?

நல்ல போடு போட்டீரே! நீர் கேட்பது உண்மை ஆகிவிட வேண்டுமென்றால் நீர் ஆர். கே. சண்முகஞ் செட்டியாரின் சகோதரராகத்தான் இருக்க வேண்டும்!

* * *

ரேலங்கியின் ஹாஸ்யம் தமிழ்ப்பட உலகை விட்டுச் சீக்கிரமே "அவுட் பாஸ்" வாங்கிக் கொண்டுவிடும் என்கிறார் என் நண்பர். நீர் என்ன சொல்லுகிறீர்?

உம் நண்பர் இந்த அளவுக்கு ஜோஸ்யம் சொல்லக் கூடுமானால், "சீக்கிரமே தமிழ்ப்பட உலகிலிருந்து அபத்தம் நீங்கிவிடும்" என்று நான் ஏன் ஆரூடம் சொல்லக் கூடாது?

வி. முத்துசாமி (கும்பகோணம்)

பி. எஸ். கோவிந்தன் தற்போது நடிக்கும் படம் எது?

அசோகா புரொடக்ஷன்ஸாரின் "பத்மினி"யில் தற்போது கோவிந்தன் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஏ. கோபால் (அவிசாவிலை, இலங்கை)

கே. ஆர். ராமசாமிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?

வெகு காலத்திற்கு முன்பே அவர் வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொண்டு விட்டார்.

கே. பிள்ளை (தம்பாலை, இலங்கை)

"மூன்று பிள்ளைகள்" படத்தில் வனஜா கார் ஓட்டுகிறாரே, அவருக்கு நிஜமாகவே கார் ஓட்டத் தெரியுமா?

ஓட்டத் தெரியுமாம்.

டைரெக்டர் பிரஸாத்

'குதூகலன்'

"எங்கள் தொழில் குயவன் தொழில் போன்றது; எல்லாமே சரியாக அமைந்துவிடாது" என்று டைரெக்டர் எல். வி. பிரஸாத், நான் அவரை சந்தித்துப் பேசியபோது சொன்னார். அவர் சொன்னது எப்படிப்பட்ட ஒரு மகத்தான உண்மை! ஒரு நக்ஷத்திரம் நடித்த படம் எல்லாமே வெற்றிகரமாக அமைந்து விடுவதில்லை. ஒரு டைரெக்டருக்கு அவர் டைரெக்ட் செய்யும் எல்லாப் படங்களுமே புகழ் தேடித் தந்துவிடுவதில்லை. ஏன், பிரஸாத் விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். அதற்கு முன் பல வருஷங்களாக இத்துறையில் அவர் இருந்து வந்தும், "சம்சாரம்" படம் வெளிவந்த பிறகுதான் பிரஸாத் என்ற பெயர் படத் தயாரிப்பாளர்களிடையே வரப் பிரஸாதம் மாதிரி ஆகிவிட்டது. அக்கினேன லக்ஷ்மி வரப்பிரஸாதராவ் என்ற முழுப் பெயர் கொண்ட எல். வி. பிரஸாத்தின் சொந்த கிராமம் பெத்தவேகி என்பதாகும். அவர், நெல்லூருக்கு அருகிலுள்ள சோமவரப்பாடு என்ற கிராமத்தில் 1908-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதி பிறந்தவர். அவரது தந்தையான அக்கினேன ஸ்ரீராமுலு அந்த ஊரில் ஒரு மிராசுதார். பிரஸாத், எல்லூரிலுள்ள ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தார். பள்ளிக்கூட நாட்களில் அவர் பல பள்ளிக்கூட நாடகங்களிலும், வெளி நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்திருக்கிறார்.

1929-ம் வருஷம், நம் நாட்டிலேயே ஒரு மந்தம் ஏற்பட்டு எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடியது. நன்றாக வாழ்ந்த பிரஸாத் குடும்பத்தினருக்கு மிகவும் சிரம தசை ஏற்பட்டது. அவரது தந்தை 'இன்ஸால்வெண்ட்' கொடுத்தார். அந்த அவமானம் தாங்காது, பிரஸாத் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊரைவிட்டே கிளம்பி விட்டார்.

அந்த வருஷ முடிவில், பிரஸாத் பம்பாய் போய்ச் சேர்ந்தார். அங்கு நடைபெற்றுவந்த இரண்டொரு 'கார்னிவால்'களில் 'புக்கிங் கிளார்க்' போன்ற வேலைகள் பார்த்து ஜீவனம் நடத்தினார். 1931ம் வருஷம்தான் அவர் முதன்முதலாக பில்ம் தொழிலில் காலடி வைத்தார். இம்பீரியல் பில்ம் கம்பெனியில் ஒரு நடிகராகச் சேர்ந்து, அவர்களது பல மௌனப் படங்களில் நடித்தார். நடித்ததுடன்கூட டைரெக்டருக்கு உதவியாளராகவும் வேலை செய்து, அந்தத் துறையில் பயிற்சி பெற்றார். அப்படிப்பட்ட படங்களில் "கமலூர் ஜமான்" என்பதுதான் முதல் படம். கலீந்தர் அலிஷா என்பவரிடம்தான் முதன் முதலில் அவர் உதவி டைரெக்டராக வேலை பார்த்தார். இப்படியாக இரண்டரை வருஷங்கள் அக்கம்பெனியில் வேலை பார்த்த பின், கம்பெனியில் ஏற்பட்ட ஆள் குறைப்பின் காரணமாக அவர் வெளியேவந்து வேலை தேட வேண்டியதாகி விட்டது.

அதன் பிறகு, பம்பாயில் நடந்து வந்த கிருஷ்ணா சினிமா என்ற சினிமாத் தியேட்டரில் ஒரு 'கேட் கீப்பரா'கக்கூட வேலை ஏற்க வேண்டிய நிலை வந்துவிட்டது. சில மாதங்களே இந்த வேலையில் அவர் இருந்தார். சீக்கிரமே அங்கிருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது. கிருஷ்ணா பிக்சர் கம்பெனியார் தயாரித்த "பக்த பிரஹ்லாதா", "சாவித்திரி" ஆகிய பேசும் படங்களில் பிரஸாத் நடித்தார். இப்படங்கள் எச். எம். ரெட்டியால் டைரெக்ட் செய்யப்பட்டவை. இக்கம்பெனியும் நிலைக்கவில்லை, பிறகு, பம்பாயிலேயே விஜயா ஸினிடோன், நியூ ஈரா பிக்சர்ஸ்,

ரேணுகா பில்ம்ஸ் ஆகிய படக் கம்பெனிகளில் வேலை செய்தார். நியூ ஈரா பிக்சர்ஸில் இருக்கும்போது ஜெகன்னாத தாஸ் கபாடியா என்பவரிடம் ஒளிப்பதிவு வேலையைக் கற்றுக் கொண்டு, அக் கம்பெனியின் படங்களிலும், ரேணுகா பில்ம்ஸ் படங்களிலும் புரொடக்ஷன் மானேஜராகவும், காமிராமேனாகவும் இருந்து வந்தார்.

1940-ம் வருஷம், பிரஸாத் பம்பாயை விட்டு சென்னைக்கு வந்தார். எச். எம். ரெட்டி டைரெக்ஷனில் தயாரிக்கப்பட்ட ''யோக்யனை போக்கிரி'', ''தெனாலி ராமகிருஷ்ணா'' ஆகிய இரு படங்களிலும் முக்கிய பாத்திரத்தில் நடித்ததுடன், எச். எம். ரெட்டிக்கு டைரெக்ஷனிலும் உதவியாளராக இருந்து வந்தார். அவரது சென்னை வாசம் இந்த இரண்டு படங்களுடன் முடிந்துவிட்டது.

மீண்டும், 1942-ம் வருஷம், பம்பாய்க்கே திரும்பிப் போனார் பிரஸாத். அங்கு கீதாஞ்சலி மூவிடோன் என்ற கம்பெனியின் இரண்டு படங்களில் நடிகராகவும், உதவி டைரெக்டராகவும் வேலை செய்தார். அது முடிந்ததும் டைரெக்டர் எஸ். எம். யூஸுப்புடன் மூன்று படங்களில் வேலை செய்தார். அவைகளில் அவர் நடிக்கவும் செய்தார். இப்படியாக மூன்று வருஷங்களில் பம்பாயில் ஐந்து படங்களில் வேலை செய்தார் பிரஸாத்.

பிரஸாத், சென்னைக்கு 1945-ம் வருஷம் மீண்டும் திரும்பினார். அப்பொழுது அவரை, கே. எஸ். பிரகாஷ் ராவ் என்பவர் ஸாரதி பில்ம்ஸாருக்கு அறிமுகப்படுத்தினார். அக்கம்பெனியாருக்காக ''கிரஹப் பிரவேசம்'' என்ற தெலுங்குப் படத்தைத் தயாரித்துக் கொடுத்தார் பிரஸாத். ''கிரஹப் பிரவேசம்'' படத்தில் அவர் கதாநாயகனாக நடித்தார்.

நடிகர் டைரெக்டர் பிரஸாத்

அதுதான் அவர் முதன் முதல் முழுப் பொறுப்பேற்று டைரெக்ட் செய்த படமாகும். முதல் படத்திலேயே சிறந்த டைரெக்டர் என்ற பெயரை ஏற்படுத்திக் கொண்டார்.

இப்படத்தை அடுத்து அதே கம்பெனிக்காக ''பல்நாடு யுத்தம்'' என்ற படத்தையும் அவரே டைரெக்ட் செய்து கொடுத்தார். அதைத் தொடர்ந்து ''துரோகி'', ''மனதேசம்'' ஆகிய படங்களையும் அவர் டைரெக்ட் செய்தார். இவ்விரண்டு படங்களிலும் ''துரோகி''க்கு நல்ல பெயர். அப்படத்தில் அவர் நடிக்கவும் நடித்திருக்கிறார்.

''சம்சாரம்'' தெலுங்குப் படம்தான் அவருக்குப் பட உலகில் நிரந்தரமான புகழைத் தேடித் தந்தது. இப்படத்தில் அவரது டைரெக்ஷன் திறமையை கவனித்த பல பட முதலாளிகள் போட்டி போட்டுக் கொண்டு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டனர். பல படங்களையும் ஒரே சமயத்தில் டைரெக்ட் செய்ய ஒப்புக் கொண்டுவிட்டால் பூரணமாகப் பாடுபட முடியாது என்ற உண்மையை நன்றாக உணர்ந்து கொண்ட பிரஸாத் சில ஒப்பந்தங்களை ஒப்புக்கொள்ளவில்லை. சிலரிடம், அவர்களது படங்களின் தயாரிப்பைத் தம் மேற்பார்வையில் தம் சிஷ்யர்களைக் கொண்டு தயாரித்துக் கொடுப்பதாகவும் சம்மதித்தார்.

''சம்சார''த்திற்குப் பிறகு, ''சௌகார்'' (தெலுங்கு). ''பெண்ட்லி சேசி சூடு'' (தெலுங்கு), ''கல்யாணம் பண்ணிப் பார்'' (தமிழ்), ''பரதேசி'' (தெலுங்கு), ''பூங்கோதை'' (தமிழ்) ஆகிய படங்களை டைரெக்ட் செய்தார். இவைகளில் ''பூங்கோதை''யைத் தவிர மற்றவைகள் அமோகமான வெற்றி பெற்

[தொடர்ச்சி 65ம் பக்கத்தில்]

மூனுலின். ஸொசைட்டி பிக்சர்ஸ் தயாரித்துவரும் "பிரபஞ்சம்" (தெலுங்கு), "உலகம்" (தமிழ்) படங்களிலும், ஜம்பு புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் "மனைவியின் மகன்" தமிழ்ப் படத்திலும் எம். வி. ராஜம்மா நடித்துவருகிறார்.



நரசிம்ம பாரதி

சென்னை யாருக்கு!

டி. எஸ். பாலய்யா

"நல்ல காலம் பொறக்குது!! நல்ல காலம் பொறக்குது. நல்ல சேதி வரப்போகுது. நல்ல சேதி வரப் போகுது. ஒன்பது கம்பளத்தாள் ஓடி வா. குட்டிச் சாத்தான் ஓடி வா, ஓடி வா. ஓடி வா. குடுகுடுகுடு. குடுகுடுகுடு."

இந்த சத்தத்தை, இரவு முழுவதும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி, எட்டாத பேராசைக் கோட்டை கட்டியபடி, தூங்காமலிருந்த தின்னையா கேட்டார். உடனே ஓடிப்போய் வாசல் கதவைத் திறந்து குடுகுடுப்பைக் காரனை உள்ளே அழைத்து வந்து உட்காரச் செய்து, "அப்பா, எனக்கு என்ன வரப்போகிறது? நல்ல சேதி என்ன! யார் கொடுக்கப் போகிறார்கள்?" என்று ஆவல் ததும்பக் குடுகுடுப்பைக் காரனிடம் கேட்டார்.

குடுகுடுப்பைக்காரன் தின்னையாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டு, "அய்யா, கேக்குறுங்க. அம்மா சொல்லு, ஒன்பது கம்பளத்தாள் ஓடி வந்து சொல்லு. சாமீ, உங்களுக்குப் பணச் செலவில்லாம எல்லாக் காரியமும் நடக்கப் போகுது. அய்யா சிட்டிகை போட்டா செலவு பண்ண ஆளு வராங்க ஆனா கொஞ்சம் மோசம் செய்யணும். மோசம் செஞ்சாத்தான் காசு வரும். ஸாமி, கொஞ்ச தூரத்திலிருந்து இன்னைக்கோ, நாளைக்கோ, நாளையன்னைக்கோ பணம் வருது. அய்யா, நான் சொன்னபடி நடந்தா எனக்கு என்ன கொடுப்பே?" என்ற கேள்வியோடு தன் வாக்கை முடித்தான்.

"அப்பா, நீ சொல்லுகிற மாதிரி எனக்கு நல்ல காலம் வந்துவிட்டால் கை நிறையக் காசு அள்ளிக் கொடுப்பேன். கவலைப்படாதே" என்றார் தின்னையா.

"அய்யா ஸாமி. எனக்கு காசு வேணும் பணம் வேணும். ஒண்ணும் வேணும். நீங்க கட்டிக் கிழிச்ச பழைய வேஷ்டி ஒண்ணு கொடுத்தாப் போதும்." என்று தன் கோரிக்கையை வெளியிட்டான் குடுகுடுப்பைக்காரன்.

நல்ல வேளையாக காசு செலவில்லையே என்று கருதி, தனக்கு இருந்த இரண்டு வேஷ்டியில் ஒன்றை அவன் கையில் கொடுத்து அனுப்பினார் தின்னையா.

தின்னையாவிற்கோ ஆனந்தம் தாங்கவில்லை. எப்பொழுது விடியும் என்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த வண்ணம் இருந்தார். கதிரவனும் மெதுவாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தான். அடித்துப் புரண்டு எழுந்தார் தின்னையா. காலைக் கடன்களை சடுதில் முடித்தார். ஒரு டம்ளர் பழைய சோற்றுத் தண்ணீரை உள்ளே தள்ளினார். உடனே புறப்பட்டார் வெளியே.

அடி வயிற்றிலிருந்து குரல் கிளப்பி கத்தியது ஒரு கழுதை. "கழுதை யுரு வந்தாலும், ஆவெனக் கத்தினால் கைகண்ட சகுன மென் பார்" என்று பாடிக்கொண்டே போய்க் கொண்டிருந்தார் தின்னையா. தெரிந்த ஒருவராவது எதிர்ப்படவில்லை. வேறு திக்கில் திரும்பி, நடந்தார் குஷாலாக. எதிரே யிருந்து ஒரு ஸ்டுடியோ கார் ஒன்று நடிகர் நடிகைகளை ஏற்றிக்கொண்டு வந்தது. அதைப் பார்த்ததும் அவர் கால்கள் 'சடன்பிரேக்' போடப்பட்டு நின்றன.

'குடுகுடுப்பைக்காரன் சொன்ன மாதிரி எனக்கு அதிர்ஷ்டம் வந்தால் இதைப்போல பத்து கார்களில் நடிகர் நடிகைகளை ஏற்றிக் கொண்டு ஸ்டுடியோவுக்குப் போவேன். என் எண்ணம் ஈடேறட்டும். அப்பனே, கடவுளே! நான் படம் எடுத்து முடிந்ததும் உன் கோயிலுக்குவந்து, காணிக்கையைச் செலுத்தி, பிறகு அந்தப் படத்தைத் திரையிடச் செய்வேன். அருள் புரியப்பா அருணாசலமே" என்று கைகூப்பி வணங்கி விட்டு கால்களுக்கு வேலை கொடுத்தார் தின்னையா.

சற்று தூரத்தில் 'பெனிபிட் பாங்க்' கட்டிடம் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன், தன்னுடன் பள்ளியில் படித்த பழைய நண்பன் அங்கு 'காஷியரா'க

இருப்பது நினைவுக்கு வந்தது. வேகமாக உள்ளே நுழைந்தார். நண்பனைக் கண்டார். தன் எண்ணம் ஈடேற அவன் தான் சரியான கருவி என்று அவர் இதயம் சொல்லிக் கொண்டிருந்தது. தன்னை வரவேற்ற நண்பனை ஓர் ஓரமாக அழைத்துச் சென்று, "நான் ஒரு சினிமாப் படம் பிடிக்கப் போகிறேன். எனக்கு உன்னால் ஒரு பெரிய காரியம் ஆகவேண்டும். அதை நீ செய்தால் உனக்குப் படம் முடிந்தவுடன் ஒரு ஜில்லாவை இனாமாகக் கொடுத்துவிடுவேன்" என்று தன் பேச்சை மெதுவாக ஆரம்பித்து, தான் விரும்பும் விஷயத்தையும் வெளியிட்டார்.

ஏற்கெனவே அந்த நண்பன் கைநீட்டி வாங்கி ருசி கண்டவன. "ஏதோ ஏஜண்டைக் கண்டு என்னால் இயன்றவரை முயற்சி செய்து ஏற்பாடு செய்கிறேன். இப்போது பாங்க் நேரம். அதிக நேரம் நின்று பேச முடியாது. சாவகாசமாக சாயந்திரம் ஐந்து மணிக்கு வா" என்று சொல்லிவிட்டுப் போனான். தின்னையாவும் மகிழ்ச்சி அலைகளில் மிதந்தவராய் வீடு வந்து சேர்ந்தார்.

பசி வயிற்றைக் கிள்ளியது. மனைவியைக் கூப்பிட்டு சாப்பாடு பரிமாறச் சொன்னார். "சாப்பாட்டுக்கு எங்கே போவது. நீங்கள் ஏதாவது கொண்டு வருவீர்கள் என்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறேன். குழந்தைகளுக்கு பக்கத்து வீட்டிலிருந்து சாப்பாடு வாங்கிக் கொடுத்தேன்" என்று சொன்னாள் மனைவி "சரிதான். காலையில் கொடுத்த நீராகாரம் இன்னும் ஒரு டம்ளர் கொடு," என்று சொல்லி, மனைவி கொண்டு வந்து கொடுத்த நீராகாரத்தைச் சாப்பிட்டார். "பண விஷயமாக ஒருவர் என்னை வரச் சொல்லியிருக்கிறார். என்னை ஐந்து மணிக்கெல்லாம் எழுப்பிவிடு" என்று மனைவியிடம் சொல்லிவிட்டு படுக்கையில் படுத்தார். தூக்கம் எங்கிருந்து வரும். புரண்டு புரண்டு படுத்துப் பொழுதை ஒருவிதமாக ஓட்டினார் நம் தின்னையா.

மணி நாலரை ஆயிற்று. பெட்டியைத் திறந்து பார்த்தார். நல்ல உடை ஒன்றுமே இல்லை. நடந்தார் வண்ணான் வீட்டிற்கு. ஜோரான ஒரு உடையை வாடகைக்கு வாங்கி அணிந்து கொண்டு 'பெனிபிட் பாங்க்' நோக்கி விரைந்தார்.

அவர் வரவை எதிர்பார்த்தவனாய் நண்பன் நின்று கொண்டிருந்தான். "ஏஜண்டிடம் பக்குவமாகப் பேசி முடித்துவைத்திருக்கிறேன். உன்னைச் சந்திக்க வேண்டும்என்றார். வா" என்று ஏஜண்ட் அறைக்குள் அழைத்துச் சென்றான் நண்பன். அங்கு பண சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. "நாங்கள் சினிமாக் கம்பெனிகளை நம்புவதில்லை. இதற்கு முன் பணம் கொடுத்த கம்பெனிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்து இதோ வைத்திருக்கிறேன் பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே ஏஜண்டு அறையைத் திறந்தார். அதில் நிறைய பீரோக்களும், மேஜை நாற்காலிகளும், பிலிம் பெட்டிகளும் இருந்தன. "இப்படியிருக்கையில் உங்கள் கம்பெனியை நம்பி நான் எப்படிப் பணம் கொடுக்க முடியும்?" என்ற கேள்வியாஸ்திரத்தைத் தொடுத்தார் ஏஜண்ட்.

தின்னையா கொஞ்சம் திகைத்துவிட்ட போதிலும்உடனே தன்னை சமாளித்துக்கொண்டு "என்னுடைய நாணயம் உங்களுக்குத் தெரியாது. உங்கள்காஷியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நான் ஒரு காரியத்தில் இறங்கினால் அதை முடிக்காது விடுவதில்லை. இதுவரை யாரிடமும் கடன் வாங்கியதில்லை. இம் முறை எனக்குக் கொடுத்துப் பாருங்கள். பிறகு நீங்களே என்னைத் தேடி வந்து 'பணம் வேண்டுமா. பணம் வேண்டுமா' என்று கேட்பீர்கள்" என்று நாக்குக்கு ஓய்வு கொடுக்காது பேசினான்.

"உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை?" என்று கேட்டார் ஏஜண்ட்.

"ஒரு லட்சம் போதும். பணத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எனக்குத் தேவையானபோது அப்போ

தைக்கப்போது என்னிடம் கொடுத்தால் போதும்.''

"எதை ஆதாரமாகக் கொண்டு கொடுப்பது ?''

''படத்தின் சென்னை நகர உரிமையை இப்போதே எழுதிக் கொடுக்கிறேன். நீங்கள் என் விஷயத்தில் எடுத்துக் கொள்ளும் சிரத்தைக்காக எனக்கு வரும் லாபத்தில் உங்களுக்குத் தனியாக ரூபாய்க்கு நாலணா வீதம் தருகிறேன்.''

'' உங்களுக்காக இல்லாவிட்டாலும், எங்கள் காரியஸ்தர் வார்த்தைக்கு நான் கட்டாயம் மதிப்புக் கொடுக்கவேண்டும். அவரையும் கவனித்துக் கொள்ளுங்கள். இப்போதைக்கு உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை ?''

''ஐயாயிரம் போதும்.''

பத்திரங்கள் எழுதி முடிக்கப்பட்டன. தின்னையாவின் கையில் பணமும் ஏறியது. இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார், தின்னையா. நேராக அச்சாபீஸுக்குப் போனார். 'லெட்டர் பேட், விஸிட்டிங் கார்டு' முதலியவைகளை 'அர்ஜெண்டாக' அடிக்கச் சொன்னார். அச்சாபீஸ்காரர் கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டு, வீடு சேர்ந்தார். தன் மனைவியைக் கூப்பிட்டு அவளிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் அனைத்தையும் தாராளமாக வாங்கிக் கொள்ளும்படி உத்தரவு போட்டார்.

மறுநாள் காலை அச்சாபீஸிலிருந்து வந்த 'லெட்டர் பேடு'களில் மூன்றையும் சில 'விஸிட்டிங் கார்டு'களையும் ஒரு தோல் பையில் போட்டுக் கொண்டு, ஸ்டுடியோவுக்கு டாக்ஸியில் கிளம்பினார் தின்னையா. ஸ்டுடியோ முதலாளிக்கு தன் 'விஸிட்டிங்' கார்டைக் கொடுத்து வருகைக்கு அனுமதி பெற்றுக் கொண்டு, அவர் மேஜையின் முன்னால் போய் அமர்ந்தார். தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டு பேச்சை ஆரம்பித்தார். ''நான் பல படங்கள் எடுக்கப் போகிறேன். எல்லாம் உங்கள் ஸ்டுடியோவிலேயே எடுப்பதாகத் தான் உத்தேசம். உங்கள் உதவியும் ஒத்துழைப்பும்தான் தேவை. ஆரம்பத்தில் நான் அதிகப் பணம் போடவில்லை. எனக்காக நீங்கள் 'ஸ்பெஷல் செட்' எதுவும் போடவேண்டாம். மற்



ரோஹினி பிக்சர்ஸார் பெயரிடாமலே தயாரித்துவரும் "புரொடக்ஷன் நெ. 9 (தமிழ்ப் படத்தில்)" என். டி. ராமராவும், ஜமுனாவும் நடிக்கும் ஒரு கட்டம்.

றவர்கள் போட்டிருக்கும் 'செட்'டிலேயே என் படத்தை முடித்துக் கொள்கிறேன். உங்களுக்குச் சேரவேண்டிய பணத்துக்கு, நான் சென்னையை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினார் தின்னையா. ஸ்டுடியோ முதலாளியும் அதற்கு இணங்கவே ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

"இன்று நல்ல நாள். கதாநாயகியையும் இன்றே போய்ப் பார்த்து 'எக்ரிமெண்ட்' செய்யவேண்டும். நான் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு ஸ்டுடியோவிலிருந்து கிளம்பினார் தின்னையா.

அவருடைய கார் நக்ஷத்திர நடிகை ரதிதேவியின் பங்களாவை அடைகிறது. இறங்கிப் போய் 'காலிங் பெல்'லை அழுத்துகிறார். கதாநாயகியின் தாயார் வந்து திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு, யாரென்று கேட்க, தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார் தின்னையா. அந்த அம்மாள், "உள்ளே வாருங்கள்" என்று கூறிவிட்டு, சரேல் என்று மறைந்தாள். தின்னையா உள்ளே போய் ஆசனத்தில் அமர்ந்தார். அவரை ரதிதேவியும், அவளுடைய தாயாரும் வரவேற்றனர். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பேசி, தான் எடுக்கப் போகும் எல்லாப் படங்களிலும் ரதிதேவியைக் கதாநாயகியாகப் போடுவதாகவும், முதல் படத்திற்கு மட்டும் பணத்திற்குப் பதிலாக ஒரு ஜில்லாவை எடுத்துக் கொள்ளும்படியும் தின்னையா கூற, தனக்கு சென்னை நகரம் வேண்டும் என்று ரதிதேவி கேட்கிறாள். தின்னையாவும் இல்லையென்னாது சென்னை உரிமையைக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டு, அவர்கள் கொடுத்த காப்பியையும் அருந்திவிட்டு அங்கிருந்து புறப்படுகிறார்.

(தொடர்ச்சி 59-ம் பக்கத்தில்)

காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

(கதவு திறக்கப்படுகிறது. பிரேம்நாத் உள்ளே வருகிறார்.)

பிரேம்நாத்:—குட் ஈவினிங் சந்தர்!

சந்திரன்:—குட் ஈவினிங் பிரேம்நாத்! பீணாராய் எங்கே! உங்களுடன் அழைத்து வருவதாக நீங்கள் சொன்னீர்களே?

பிரேம்:— ஆமாம் சந்தர். சொன்னேன், ஆனால்......

பால்ராஜ்:—என்ன, பிரேம்நாத்? பீணாஜி வரப்போவதேயில்லையா?

பிரேம்:—பால்ராஜ்! இன்று எனது பேட்டியை வைத்துக் கொள்ளுங்கள் அடுத்த மாதம் பீணாவின் பேட்டியை வைத்துக்கொள்ளலாம்.

பால்:—அதெப்படி முடியும்? பீணாவை பேட்டி காணப்போவதாக ஏற்கெனவே அறிவித்து விட்டோமே. அப்படியிருக்க உங்களை எப்படி பேட்டி காண்பது?

பிரேம்:—சரி, வீணாக அலட்டிக்கொள்ள வேண்டாம் பால்ராஜ்.

பால்:—அலட்டிக்கொள்ளவில்லை; நீங்கள் அழைத்து வந்திருக்கிறீர்கள், இல்லையா?

பிரேம்:— சந்தேகமே வேண்டாம். நானும் பீணாவும் சேர்ந்துதான் வந்திருக்கிறோம்.

பால்:—அப்படியானால் அவர் எங்கே?

பிரேம்:—அவர் காரில் காத்திருக்கிறார்.

பால்:—நான் போய் அவரை அழைத்து வருகிறேன்.

பிரேம்:—நீங்கள் சிரமப்பட வேண்டாம். சந்திரன்! நீங்கள் போய் அழைத்து வருகிறீர்களா?

சந்திரன்:—பேஷாக அழைத்து வருகிறேன். சீக்கிரமே அவருடன் திரும்பி வருகிறேன்.

பிரேம்:—பால்ராஜ் அதற்குள் நீங்கள் என்னுடன் பேசலாமே!

பால்:—லிப்டன் ரஸிகர்கள் பீணாஜி பேட்டியைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கும் போது, உங்களுடன் நான் என்ன பேச முடியும்!

பிரேம்:—சரி, அப்படியானால் அந்தப் பேச்சு வேண்டாம். அது சரி "காற்றினிலே நக்ஷத்திர பேட்டி" என்ற இந்த நிகழ்ச்சியை நீங்கள் எப்பொழுது ஆரம்பித்தீர்கள்?

பால்:—இந்த நிகழ்ச்சி சென்ற ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. உங்களுடன் "பர்ஸாத்" படத்தில் நடித்த நிம்மியின் பேட்டிதான் முதன் முதலாக நடந்தது.

பிரேம்:—என்னை நீங்கள் எப்பொழுது நிச்சயமாக பேட்டி காணப் போகிறீர்கள்! நிச்சயமான தேதி சொல்லுங்கள்.

பால்:—மார்ச் மாதம் 29ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 6-30 மணிக்கு,



பீணா ராய்

நீங்கள் தவறக்கூடாது; இன்றுபோல அன்றும் குழப்பிவிடாதீர்கள். (இருவரும் சிரிக்கிறார்கள். சதவு திறக்கப்படுகிறது. பீனாராயும் சந்திரனும் உள்ளே வருகிறார்கள்.)

பிரேம்:—இதோ வருகிறாள் என் மனைவி. நீங்கள் இனிமேல் உங்கள் பேட்டியை ஆரம்பிக்கலாம்.

பால்:—வந்தனம். பீனாஜி தயவுசெய்து உட்கார்ந்து கொள்ளுங்கள். படத்தொழிலில் நீங்கள் விரும்பி சேர்ந்தீர்களா? அல்லது சேரும்படி சந்தர்ப்பம் ஏற்பட்டதா?

பீனா:—என் குழந்தைப் பருவத்திலிருந்தே நடிப்பதில் எனக்கு ரொம்பவும் பிரியம். ஆகவே, நான் நக்ஷத்திரமாவதையே விரும்பினேன்.

பால்:—அப்படியானால் சிறு வயதிலிருந்தே படம் பார்ப்பதில் உங்களுக்கு ஆவல் ஏற்பட்டு, நீங்கள் நிறையப் படங்கள் பார்த்திருக்க வேண்டுமே!

பீனா:—ஆம். நான் நிறையப் படங்கள் பார்த்திருக்கிறேன். ஆனால், எப்பொழுதுமே நான் நல்ல படங்களுக்கே போவேன்.

பால்:—நீங்கள் பிறந்தது எங்கே?

பீனா:—நான் லாகூரில் பிறந்தேன்.

பால்:—உங்கள் பால்யப் பிராயத்தில் நீங்கள் லாகூரில் இருந்தீர்களா, அல்லது வேறு எங்கேயாவதா?

பீனா:—அநேகமாக லாகூரில் தான்.

பால்:—உங்களுடன் கூடப் பிறந்த சகோதர சகோதரிகள் எவ்வளவு பேர்கள்?

பீனா:—எனக்கு மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர்.

பால்:—நீங்கள்தான் அனைவரிலும் மூத்தவரா?

பீனா:—நான் ஐந்தாவது.

பால்:—உங்கள் தந்தை என்ன செய்துகொண்டிருந்தார்?

பீனா:—வடமேற்கு ரயில்வேயில் எனது தந்தை ஒரு ஆபீஸராக இருந்தார்.

பால்:—பள்ளிக்கூட நாட்களில் உங்களை என்ன பெயர் சொல்லி அழைத்தார்கள்?

பீனா:—அனைவரும் என்னை கிருஷ்ணா என்று அழைத்தார்கள்.

பால்:—வீட்டில்?

பீனா:—வீட்டில் என்னை அனைவரும் கிட்டு என அழைத்தார்கள்.

பால்:—அப்படியானால் உங்கள் உண்மைப் பெயர் பீனாராய் இல்லை?

பீனா:—இல்லை. என் முதல் பெயர் க்ரிஷிஸிரன்; இப்பொழுது நான் பீனா மல்ஹோட்ரா.

பால்:—லக்னௌ, இஸபெல்லா தோப்ரன் கல்லூரியில் நீங்கள் எப்பொழுது சேர்ந்தீர்கள்?

பீனா:—பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகுதான்.

பால்:—அப்படியானால் உங்களுக்கு இந்திரா பண்சலைத் தெரிந்திருக்க வேண்டுமே!

பீனா:—ஆமாம், அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்தான் அப்பொழுது லக்னௌவில் எங்கள் பேராசிரியர். பால்ராஜ், அவரை உங்களுக்கு எப்படித் தெரியும்?

பால்:—"காளி கடா"வில் உங்களுடன் அவரைப் பார்த்ததனால்தான்.

பீனா:—ரொம்ப சரி.

பால்:—பள்ளிக்கூட நாட்களில் நீங்கள் நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டது உண்டா?



கேரளத்தில் தயாராகி, தமிழ் நாட்டில் ஓடிக் கொண்டிருக்கும் "தந்தை" தமிழ்ப் படத்தில் நடித்திருக்கிறார் பிரேம் நஸீர்.



கோவையில் அசோகா புரொடக்ஷன்ஸார் தயாரித்துக் கொண்டிருக்கும் ''பத்மினி'' யில் தாயும் மகளுமாய் நடித்துவரும்—எஸ். ஆர். ஜானகியும், எஸ். மேனகாவும்.

பீனா:—ஆம். எனக்கு அப்பொழுதே நடிப்பதில் மிகவும் பிரியமாகையால், காலேஜில் படிக்கும் காலத்திலேயே பத்து நாடகங்களில் நடித்திருக்கிறேன்.

பால்:—ஆட்டம், பந்தயம் இவைகளில் நீங்கள் கெட்டிக்காரராக இருந்தீர்களா?

பீனா:—ஆம், காலேஜ் நாட்களில் நான் சில ஆட்டங்களில் கலந்து கொண்டது உண்டு.

பால்:—உங்களுக்கு மிகப் பிடித்த விளையாட்டுகள் எவை?

பீனா:—பாட்மிண்டன், 'பேஸ் பால்', டென்னிஸ், இவைகள் தவிர நீஞ்சல் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

பால்:—முதன் முதல் காமிரா முன் நின்றபோது உங்களுக்கு எப்படி இருந்தது. அது உங்களால் மறக்க முடியாத ஒரு சம்பவமாக இருக்கக் கூடுமென நினைக்கிறேன்.

பீனா:—ஆம், நான் அதை எப்படி மறக்க முடியும்? கிஷோர் சாஹுவுடன் ஒரு காதல் காட்சியில், காமிரா முன் மட்டுமின்றி, நான் பயந்து நடுங்கும் என் தந்தையின் முன் நடிக்க வேண்டியிருந்தது. ஆனால் நடிக்க ஆரம்பித்ததும் நான் அனைத்தையும் மறந்து என் நடிப்பில் மூழ்கிவிட்டேன். இப்படியாக நடந்தது என் படத்தொழில் பிரவேசம்.

பால்:—''காளி கடா''வுக்குப் பின் நீங்கள் என்னென்ன படங்களில் நடித்தீர்கள்?

பீனா:—அதன் பின் ''சப்னா'', ''அனார்க்கலி''. ''அவுரத்'', ''ஷோல்'' ஆகியவைகளில் நடித்தேன். இப்பொழுது ''ஷகுவா'' என்ற படத்தில் நடிப்பதில் மும்முரமாக இநக்கிறேன். இது என் கணவர் தயாரிக்நம் படம்.

பால்:—இப்படம் எப்பொழுது தயாராகி முடிவடையும்?

பீனா:—அநேகமாக ஏப்ரல் மாதத்தில் முடித்துவிடலாமென நினைக்கிறோம்.

பால்:—அதற்குப் பின் என்ன செய்வதாக எண்ணம்?

சேனைகளை என். டி. ராமராவிடம் ஒப்படைத்திருக்கும்போது "சண்டிராணி"க்கு வெற்றியைப் பற்றிய கவலை ஏது?

பீனு:—அதற்குப்பின், ஒரு சிறந்த கதையில், எனக்குப் பொருத்தமான கதா பாத்திரமாகக் கிடைத்தாலன்றி நான் எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளப் போவதில்லை.

பால்:—நீங்கள் எப்பொழுதுமே "அவுரத்" என்ற படத்தை மறக்க மாட்டீர்களென நினைக்கிறேன்.

பீனு:—ஏன்?

பால்:—ஏனெனில், உங்கள் ஆத்மார்த்த விஷயம் ஒன்று அப்பொழுது தானே ஆரம்பித்தது!

பீனு:—அப்படியா! அது என்ன?

பால்:—காதல் விஷயம்.

பீனு:—உங்களுக்கு எப்படித் தெரியும்?

பால்:—நான் மட்டுமென்ன, உங்களைத் தெரிந்த பல ஆயிரக் கணக்கான ரஸிகர்களும் அறிவார்கள். இப்படம் தயாராகிவரும்போது தான் உங்களுக்கும் பிரேம்நாத்துக்கும் காதல் ஏற்பட்டது என்பது உண்மையா?

பீனு:—அதிலென்ன சந்தேகமா?

பால்:—இல்லவே இல்லை. உங்கள் திருமணம் எப்பொழுது நடந்தது?

பீனு:—சென்ற வருஷம், செப்டம்பர் மாதம் 2ம் தேதி.

பால்:—அது ரொம்பப் பிரமாதமான ஒரு விழாவாக இருந்தது, இல்லையா?

பீனு:—அந்தச் சமயத்தில் நீங்கள் பம்பாயில் இல்லையா, என்ன?

பால்:—அந்த சமயம் நான் வெளியூர் போயிருந்தேன். ஆனால் நான் அனைத்தும் செய்திப் படம் மூலம் பார்த்தேன். அதன் பிறகு நீங்கள் தூது கோஷ்டியில் போய் வந்தீர்கள். அந்த சமயம் அதற்காக நீங்கள் பார்த்த நகரங்களைப் பற்றிக் கூறமுடியுமா!

பீனு:—இந்தியா விட்டு இங்கிலாந்துக்குப் போனோம். அங்கு பிலிம் தொழிலின் பிரதான பிரமுகர்களைச் சந்தித்தோம். அதன் பிறகு ஹாலிவுட்டுக்குச் சென்று அங்கு பல ஸ்டுடியோக்களைப் பார்த்ததுடன், பல நக்ஷத்திரங்களையும், பல டைரெக்டர்களையும் சந்தித்தோம். ஸ்ரீமதி ரூஸ்வெல்டிடம், அப்பொழுதைய ஜனாதிபதி ட்ரூமனையும் சந்திக்கும் பாக்கியம் கிட்டியது. நாங்கள் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியிலும் பங்கெடுத்துக் கொண்டோம். அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குப் போனோம். இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் ஹாங்காங், ஹானலூலு ஆகிய இரு நகரங்களுக்கும்கூட போகும் வாய்ப்புக் கிட்டியது.

(தொடர்ச்சி 69-ம் பக்கத்தில்)

ஜூபிடர்-
லாவண்யா
தயாரிப்பு
மனிதன்
டைரெக்ஷன்:
K.ராம்நாத்
ஸ்டுடியோ:
நெப்ட்யூன்

மேடையில் பிரபலமாகி திரைக்கு வந்துள்ள-தமிழ் நாடெங்கும் தற்போது ஓடிக்கொண்டிருக்கும்-"மனிதன்"-அனைவரும் பார்த்து மகிழவேண்டிய ஒரு நல்ல படம். நல்ல நடிப்பும், கானமும் சிறந்த டைரக்ஷனும் பொருந்திய படம்





டி. கே. ஷண்முகம்,
டி. கே. பகவதி, 'பிர
ண்ட்' ராமசாமி, ஸி.
வி. வி. பந்துலு, எஸ்.
ஏ. நடராஜன், மாதுரி
தேவி, பண்டரிபாய்,
கிருஷ்ண குமாரி, முத
லியோர் நடித்திருக்கும்
இப் படத்தில் வஸந்த
குமாரி, ரத்னம், லீலா,
ஜிக்கி, ஆகியோரின்
பாடல்களை கேட்கலாம்


Parthan,

நுனிப்புல்

வெட்டுக்கிளி

ஹாஸ்ய நடிகர் கே. சாரங்கபாணிக்குக் கோபம் வந்து பார்க்க வேண்டுமென்பது என் நெடுநாளைய ஆசை. ஏனெனில், என்னைப்போல அவருடன் நெருங்கிப் பழகும் பலரும்கூட அவருக்குக் கோபம் வந்து பார்த்தது கிடையாது. என்னுடைய ஆசை கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற நக்ஷத்திர கிரிக்கெட் விழா அன்று பூர்த்தி ஆயிற்று. பத்திரிகைக்காரர்களுக்காக ''ஒதுக்கப்பட்டி''ருந்த ஓர் இடத்தில், சாரங்கபாணியின் நெருங்கிய நண்பரும், பிரபல வாரப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருப்பவருமான ஒருவர் உட்கார்ந்திருந்தார். மைதானத்தைச் சுற்றிக் கொண்டு வந்தார் சாரங்கபாணி. அவர் கண்களில் மேற்கூறிய ஆசாமி பட்டதும், ஆட்டக்காரர்கள் அனைவரும் சேர்ந்திருந்த இடத்திற்கு அந்த நண்பரை அழைத்துச் சென்றார் சாரங்கபாணி. ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கக் காரியதரிசிகளில் ஒருவரின் அனுமதி பெற்றுத்தான் அவர் அப்படிச் செய்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கு வந்த ஒரு வாலண்டியர் ''வாலாட்டி'' யாக மாறி ஒரு சிறு குழப்பத்தை உண்டு பண்ணினார். சாரங்கபாணியின் வேண்டுகோளின்படி, காரியதரிசியின் அனுமதியின் மேலேயே தாம் அங்கு இருப்பதாக அந்த ஆசாமி நியாயமாக எவ்வளவோ எடுத்துக் கூறியும், அவரை அங்கிருந்து போகும்படி அவர் பிடிவாதமாகக் கூறினார். அப்பொழுது தான் சாரங்கபாணியின் ரௌத்ராகாரத்தை நான் காண நேர்ந்தது. சாரங்கபாணி, ஆங்கிலமும் தமிழும் கலந்து மணிப் பிரவாளமாகக் கொடுத்த 'டோஸி'ல், அந்த வாலண்டியர் அடங்கிப் போனதுடன் மட்டுமின்றி அதன் பிறகு அந்தப் பக்கமே அவர் தலைகாட்டவில்லை.

* * *

சாரங்கபாணியினால் அடிக்கடி மூக்குப் பொடி போடாமல் இருக்க முடியாது. அவர் அன்று அணிந்திருந்த கிரிக்கெட் உடைகளில் பாக்கெட் ஒன்று கூடக் கிடையாது. ஆகவே, அவர் பொடி மட்டையை எங்கே வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரியாமல் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு குட்டு வெளிப்படாமல் போகவில்லை. ஒரு 'ஓசி' பொடிப் பேர்வழி அவரிடம் கையை நீட்டியபோதுதான் பொடி மட்டையின் மறைவிடம் வெளிப்பட்டது. சாரங்கபாணி சட்டென்று தம் தலையிலிருந்த குல்லாயை எடுத்தார். அதற்குள்

சென்னை மாகாணமெங்கிலும் சென்ற மாதம் வெளிவந்து, ஓடிக் கொண்டிருக்கும் ''வாழப் பிறந்தவள்'' படத்தில் பி. எஸ். சரோஜா.

இலங்கையில் தற்போது காண்பிக்கப்பட்டு வரும் "பிரேமதரங்காயா" என்ற சிங்கள பாஷைப் படத்தில் அழகி அயேஷா வீராகூன் கதாநாயகியாக நடிக்கிறார்.

ளிருந்த பொடி மட்டையை எடுத்துத் திறந்து, தாம் ஒரு இழுப்பு இழுத்து விட்டு, நண்பரிடம் மட்டையை நீட்டினார். 'பொடி' விஷயமானாலும் ரஸமான விஷயம் இது என்று, உங்களுக்குக் கூற உடனேயே மனதில் போட்டு வைத்துக் கொண்டேன்.

* * *

அன்று விழாவில் கலந்து கொண்ட நமது நடிகை நக்ஷத்திரங்கள் அன்று பந்து வீசிய காட்சி மிகவும் தமாஷாக இருந்தது. அந்தக் காட்சியைப் பார்த்த போது, எனக்கு நமது (ஹிந்து) விவாகங்களில் நடைபெறும் "நலங்கு" என்ற நிகழ்ச்சிதான் சட்டென்று நினைவுக்கு வந்தது. அந்த நலங்கு நிகழ்ச்சியின்போது மணமகனும், மணப்பெண்ணும் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டு, பந்து (ஒரு தேங்காய்) உருட்டிக் கொள்வது வழக்கம். அதைப் போலத்தான் இருந்தது நமது நடிகை நக்ஷத்திரங்கள் பந்து வீசிய கோலம். கையை மேலே தூக்கி, ஓங்கி பந்தை வீசுவதை விட்டு, பூமியோடு பூமியாகச் சேர்த்து பந்தை உருட்டி விட்டார்கள். "ஸெக்ஸ் அப்பீ"லுக்காக எப்படி எப்படியோ நடிக்கும் நமது நடிகை நக்ஷத்திரங்கள் சங்கோஜப்பட்டு அப்படி நடந்து கொண்டது ஏன் என்பது எனக்கு இன்றுகூட வியப்பாகவே இருக்கிறது.

* * *

அன்று நமது நக்ஷத்திரங்களின் கோஷ்டியில் ஆடிய இருவரைப்பற்றி ரஸிகர்களிடை அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அன்று பலர் அதை என்னிடம் வெளிப்படையாகவே சொல்லி வருத்தப் பட்டார்கள். ஸி. ஜி. விஸ்வநாதன், பலராமன் என்ற இருவரும் நமது நக்ஷத்திரங்களின் கட்சியில் இருந்ததுதான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "இவர்கள் யார்? இவர்களுக்கும் சினிமாத் தொழிலுக்கும் சம்பந்தம் உண்டா?" என்பது அவர்கள் கேள்வி. கிரிக்கெட் ஆடத் தெரிந்த வேறு நக்ஷத்திரங்கள் இருந்தும், ஏன், அங்கேயே வந்திருந்தும், அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காது, ஊர் பேர் தெரியாத அவ்விருவரையும் சேர்த்துக் கொண்டது ரஸிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தது நியாயம் தானே! ஸி. ஜி. விஸ்வநாதன் நல்ல கிரிக்கெட் ஆட்டக்காரராக இருக்கலாம்; சிறந்த அமெச்சூர் நாடக நடிகராக இருக்கலாம்; "ரோஹிணி" என்ற படத்தில் அவர் நடிப்பதாக இருந்தார் என்பதைத்

தவிர அவருக்கும் பிலிம் தொழிலுக்கும் ஸ்நானப்ராப்தி கூடக் கிடையாதே! அதேபோலத்தான் டலராமன் விஷயமும். அவர் ரஸிகர்கள் நினைவிலிருக்கும்படி எந்தப் படத்தில் முக்கிய பாகத்தில் நடித்திருக்கிறார்! அன்று அங்கு வந்திருந்து நக்ஷத்திர பவனியில் கலந்து கொண்ட ஹாஸ்ய நடிகர் சந்திரபாபுவைப் பார்த்தபோது, 'இவரைச் சேர்த்துக் கொண்டிருக்கலாமே' என்றுதான் பலரைப்போல எனக்கும் தோன்றியது.

*   *   *

அன்று ரஸிகர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்த ஒரு விஷயம், "பராசக்தி" கணேசன் ஆட்டத்தில் கலந்துகொண்டு ஆடியதுதான். "பராசக்தி" படத்தைப் பார்த்த பலரும், கணேசனைப் பற்றி 'ஒரு மாதிரி'யாகத்தான் நினைத்தார்கள். ஆனால், அவர் ஒரு பத்திரிகாசிரியருக்கு அளித்த பேட்டியில் 'தாம் எந்த ஒரு குறிப்பிட்ட கட்சியையும் சேர்ந்தவரல்ல' என்று கூறியிருப்பது பலருக்குத் தெரியாது. ஆகவே, 'மறியல் கோஷ்டி'யின் தூண்டுதலால் அவர்கள் சதியில் சிக்கி, எங்கே அவர் ஆட வராமல் இருந்து விடுவாரோ என்று ரஸிகர்கள் பலர் பயந்தார்கள். ஆனால், அப்படியில்லாமல், அவரை மைதானத்தில் பார்த்தபோது அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது சகஜம்தானே? அவர் என்னவோ, மறியல் கோஷ்டியின் சூழ்ச்சியில் சிக்காமல் பெருந்தன்மையாக நடந்துகொண்டு விட்டார் அன்று. ஆனால், அந்த விஷயமாக ஒரு நக்ஷத்திரம் பின்னால் வியாக்கியானம் செய்ததை நினைக்கும்போதுதான் அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை! கணேசனுக்கு—அவர் ஆட்டத்தில் கலந்துகொண்டதற்குக் காரணங்கள் கூறி, சப்பைக் கட்டுக் கட்டினார் இப்பொழுது மாஜி ஆகிவிட்ட அந்தப் பிரபல நக்ஷத்திரம், வெளியூரில் நடந்த ஒரு கூட்டத்திலே?

*   *   *

தமிழ்ப் பட உலகிலே பள்ளிக்கூட வாத்தியார் என்று யாரைக் குறிப்பிடலாம் எனக் கேட்டால், ஜெமினி ஸ்டுடியோவின் அதிபர் எஸ். எஸ். வாஸன் ஒருவரைத்தான் சொல்ல முடியும். அவர் சிறந்த ஹிந்திப் படங்கள் எடுத்து வடநாட்டினருக்கும், பம்பாய் சர்க்காருக்கும் சரியான 'பாடம்' கற்பித்தார் என்பதற்காக மட்டும் நான் இப்படிச் சொல்லவில்லை. அவரை வெறுமனே வாத்தியார் என்று குறிப்பிடுவதைவிட, 'கணக்கு வாத்தியார்' என்று சொல்வதே சாலப் பொருந்தும். அவர் ஏற்கெனவே இரு தடவைகள்—அடிப் பிரச்னை விஷயமாக—கரும் பலகையில் புள்ளி விபரங்கள் போட்டு காரசாரமாகப் பேசியிருக்கிறார். கிரிக்கெட் விழா அன்று இரவு, டெக்னீஷயன்கள் சங்கத்தார் அளித்த அருமையான விருந்தின் போது, தலைமை வகித்த எஸ். எஸ்.

கோவை ஸென்ட்ரல் ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாராகிவரும் அசோகா புரடக்ஷன்ஸின் "பத்மினி" தமிழ்ப் படத்தில் பி. எஸ். கோவிந்தன் பிரதம பாகத்தில் இவ்விதம் தோன்றி நடிக்கிறார்.

இப்பொழுது நகாஸ் வேலைகள் பெற்றுவரும் ஏவி. எம்.மின் "செல்லப்பிள்ளை"யில் சகஸ்ரநாமமும், பண்டரி பாயும் இப்படித் தோன்றி நடிக்கிறார்கள்.

வாஸன், படத் தயாரிப்பு விநியோகம்—வரிச்சுமை—நிகர லாப—நஷ்டம் — இப்படியாக லாப நஷ்டக் கணக்குப் போட்டுப் பேசியதைக் கேட்ட பலருக்கும் சட்டென்று கணக்கு வாத்தியார் ஞாபகம் தான் வந்து விட்டது.

*　　　*　　　*

அன்று அவர் கொடுத்த புள்ளி விபரங்கள் 'சரியானவை அல்ல; மிகைபடுத்திக் கூறியவை' என்று, கூடியிருந்தவர்களில் சிலர் முணுமுணுத்தார்கள் என்றாலும், ஏனோ, ஒருவராவது எழுந்திருந்து அதை மறுத்துப் பேசவில்லை. விடுமுறை கிடைத்ததே என்று பள்ளிக்கூடப் பையன்கள் 'உல்லாஸப் பிரயாணம்' கிளம்பிப் போகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப் போகிற இடத்தில்,உடன் வந்த அவர்களது வாத்தியார் பள்ளிக்கூட பாடங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் பையன்களுக்கு எவ்வளவு கசப்பாக இருக்கும். அன்று வாஸன் பேச்சைக் கேட்டதும் அப்படித்தான் ஆகிவிட்டது அன்று அங்கு கூடியிருந்த பலரது மனோ நிலையும். தொழிலின் கஷ்ட நஷ்டங்களை மறந்து, கொஞ்ச நேரமாவது நிம்மதியாக, தமாஷாகப் பொழுது போகும் என்று விருந்துக்கு வந்தால் அங்கேயும் தாங்கள் அதே பிரச்னையைப் பற்றிக் கேட்கவேண்டியிருக்கிறது என்றால் அவர்களுக்குத்தான் எப்படியிருக்கும், பாவம்!

*　　　*　　　*

கடைசியாக, இந்த கிரிக்கெட் விழாவை ஏற்பாடு செய்த ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தாருக்கும் ஒன்று கூறாமல் என்னால் முடிக்க முடியவில்லை. ஒரு அரிய பெரிய காரியத்தைத்தான் அவர்கள் சாதித்தார்கள். அவர்களை அதற்காக எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆனால், அவர்கள் பத்திரிகாசிரியர்களுக்கு இடம் ஏற்பாடு செய்து கொடுத்திருந்ததுதான் அவ்வளவு திருப்திகரமாயில்லை. பத்திரிகாசிரியர்கள் அனைவரும் இச்சங்கத்திற்கு எப்பொழுதும் தங்கள் ஆதரவை அளித்து வருகிறார்கள். அவர்கள் தங்கள், அரிய நேரத்தையும் பொருட்படுத்தாது அங்கு வரும்போது, அவர்களுக்கு செளகரியமாக உட்கார்ந்து, நன்றாகப் பார்க்கும்படி செளகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும். இனி நடைபெறும் தங்கள் சங்க நிகழ்ச்சிகளில் இதை அவர்கள் மறக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். மற்றொரு விஷயம், அன்று இரண்டொரு 'வாலண்டியர்'கள் கௌரவமான பலரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களை 'வாலண்டியர்'களாகப் போட வேண்டாம்; அல்லது அவர்களைப் போட்டுத்தான் ஆகவேண்டுமென்றால், முதலில் அவர்களுக்கு மரியாதையாக நடந்து கொள்வது எப்படி என்று பாடமாவது சொல்லிக் கொடுக்க வேண்டும்!

"குமாஸ்தா"—ஒரு பாலைவனப் பூஞ்சோலை

அனைவரும் பார்க்கக்கூடிய நல்ல படம்

கடும் கோடையிலே, பொட்டல் ஒன்றில் அகப்பட்டு நா வரண்டுபோன ஒருவன் கண்களில் தண்ணீர்ப் பந்தல் ஒன்று எதிர்ப்பட்டு, அங்கு நீர் மோரும் கிடைக்குமானால், அவனுக்கு எத்தகைய மகிழ்ச்சி ஏற்படும்! அந்த மனிதனின் நிலையைத் தான் சினிமா ரஸிகர்கள் அடைந்திருப்பார்கள் "குமாஸ்தா" படம் மூலம். சமீபகாலமாக வெளிவந்த சில சமூகப் படங்களைப் பார்த்து சலித்துப்போன அவர்களுக்கு அருணா பிலிம்ஸார் "குமாஸ்தா"வின் மூலம் ஆறுதல் அளித்திருக்கிறார்கள்.

கஞ்சிக்கு ஏங்கி நிற்கும் ஏழையுமில்லை; மஞ்சத்திலே படுத்து உருளும் பணம் படைத்தவனுமில்லை; நடுத்தர வகுப்பினர்தான் நம் நாட்டில் அதிகம். அப்படிப் பட்டவர்களின் வாழ்க்கையையே பிரதிபலிக்கிறது "குமாஸ்தா" படக்கதை. தேவையான கதாபாத்திரங்களைக் கொண்டு, சம்பவங்கள் சில பழையவை என்றாலும், புதிய முறையிலே கொண்டு சென்றிருக்கிறார் கதாசிரியர். அதைச் சிறந்த முறையிலே கையாண்டிருக்கிறார் டைரெக்டர். கதையில், டைரி மூலம் உண்மை வெளிப்படும் கட்டம் மட்டும் சரியானபடி வளர்த்தப்படவில்லை. சமூகத்தைக் கண்டு அஞ்சும் மானமுள்ள குமாஸ்தா; அதை எதிர்க்கத் துணியும் சீர்திருத்த வாதியான அவர் தம்பி கோபு; அவர்கள் தங்கை சுசீலா—இம்மூவரையும் முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டு அழகாகப் பின்னப்பட்டிருக்கிறது கதை.

கதையின் சிறப்பை மேலும் உயர்த்துகிறது வசனம். படம் முழுவதுமே வசனம் உணர்ச்சியுடனும், கருத்துடனும் அமைந்திருக்கிறது. உதாரணமாக, இரண்டொன்றை மட்டும் குறிப்பிடுகிறேன், "சின்ன ஜெயிலிலிருந்து பெரிய ஜெயிலுக்குப் போகிறேன்"; "இலை முள் மீது பட்டாலும், முள் இலை மீது பட்டாலும் இலைக்குத்தான் ஆபத்து."

இப் படத்தின் சிறப்புக்கு கதை-வசனத்திற்கு அடுத்தபடி காரணமாயிருப்பது நடிப்பு அம்சம்தான். இந்தப் படத்தில் ஒவ்வொருவரும் தமது பாத்திரத்தை உணர்ந்து நன்கு நடித்திருக்கிறார்கள். நாம் தினசரி வாழ்க்கையில் சந்திக்கும் பல குமாஸ்தாக்களைக் கண் முன்னே கொண்டுவரும் முறையில் நடித்திருக்கிறார் அந்தப் பாத்திரமாக வரும் நாகய்யா. தம் தங்கையைக் கண்டிக்கும் கட்டங்களிலும், தம்பியிடம் வாதாடும் கட்டங்களிலும் மிகவும் உயர்வாக இருக்கிறது அவரது நடிப்பு. சீர்திருத்தவாதியாக வரும் மனோஹர் இப் படத்தின் மூலம் தாம் ஒரு நல்ல நடிகர் என்பதை நிரூபித்திருக்கிறார். இதுவரை அவர் நடித்துள்ள படங்களை யெல்லாம்விட இதில் தான் அவரது நடிப்பு நன்கு சோபிக்கிறது. துடிதுடிப்பான—கோபக் காரனை இளைஞனாகவும், சகோதரி வாஞ்சை மிக்க அண்ணனாகவும் இயற்கையாகவும் உணர்ச்சியுடனும் நடித்திருக்கிறார்.

அல்பாயுசு மாப்பிள்ளை ரவியாக நடிக்கும் நரசிம்ம பாரதிக்கு இப் படத்தில் அதிக சந்தர்ப்பமில்லை. எனினும், தம் வரையில் நன்கு நடித்துவிட்டார். ரவி

"குமாஸ்தா"

தயாரிப்பு	—	அருணா பில்ம்ஸ்
திரைக்கதை	—	ஆச்சார்யா ஆத்ரேயா
வசனம்	—	ஏ. டி. கிருஷ்ண சாமி, பி.ஏ.
நடனம்	—	மாதவன்
டைரெக்டர்	—	ஆர். எம். கிருஷ்ணசாமி
ஸ்டுடியோ	—	பில்ம் சென்டர்
நீளம்	—	16,912 அடிகள்

நடிகர்கள் :

நாகய்யா, மனோஹர், நரசிம்ம பாரதி, பிரண்ட் ராமசாமி, சிவதாணு, பண்டரிபாய், ஐயம்மா, மேனகா, மற்றும் பலர்.

ஆர். ஆர். பிக்சர்ஸார் வெளியிட்டிருக்கும் ''வாழப் பிறந்தவளி''ல் நடனம் ஆடுகிருர் இந்தக் குசலகுமாரி.

யின் தந்தையாக வரும் சிவதாணு இயற்கையாகவே நடித்திருக்கிருர். பேச்சுக்குப் பேச்சு "இத்ரு இத்ரு" என்று ஆரம்பித்து "நான் வேணுமானுல் எழுதித் தரேன்" என்று முடிப்பதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டிருக்கலாம். ஆரம்ப முதல் இறுதிவரையில் சோகமாக ஓடும் கதை, பிரதராக வரும் பிரண்ட் ராமசாமியின் சிறந்த ஹாஸ்ய நடிப்பினுல்தான் அலுப்புத் தட்டாமல் இருக்கிறது. ஆனுல், அவர் டான்ஸ் ஆடியிருக்க வேண்டியதில்லை.

குமாஸ்தாவின் மனைவியாக வரும் ஐயம்மாவின் நடிப்பு, வெகு இயற்கையாக இருக்கிறது. சரீரம்தான் பாத்திரத்திற்கு ஏற்றபடியில்லையே தவிர, நடிப்பும் பாட்டும் நன்ருக இருக்கின்றன. சுசீலாவாக வரும் பண்டரிபாய் உருக்கமாகப் பேசி தம் பாகத்தைத் திறம்பட நடித்திருக்கிருர். நடுநிசியில் தன்னைத் தேடி வந்த கணவனை அன்புடன் கண்டிக்கும் கட்டத்திலும், இறுதியில் தன் அண்ணனிடம் மன்ருடும் கட்டத்திலும் அவரது நடிப்பு நன்கு சோபித்திருக்கிறது. எம். சரோஜாவும், மேனகாவும் தமது பாகங்களைக் குற்றம் கூற முடியாத முறையில் நடித்திருக்கின்றனர்.

நடனங்கள் சற்று அதிகம்தான். எனினும், யாவுமே கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டுள்ளன. பாட்டுகள் சிலவற்றில் நல்ல கருத்துகள் இருக்கின்றன. நலங்குப் பாட்டு, சம்பந்திப் பாட்டு இவைகள் நன்ருக இருக்கின்றன. எனினும், அலுப்புத் தட்டும் அளவுக்கு நீண்டு விட்டிருக்கின்றன. பாட்டு ஒன்றுமே மனதில் நிலைத்து நிற்பதாக இல்லை. பின்னணி இசை நன்கு அமைக்கப் பட்டுள்ளது.

டைரெக்டர். சிரமம் எடுத்துக் கொண்டு தம் பணியை சிரத்தையுடன் முடித்திருக்கிருர். அற்பாயுசு ரவியின் அறை நீண்ட நாட்களாகப் பூட்டியே கிடக்கிறது என்பதைத் தூசி மூலம் விளக்கியிருப்பதும், குமாஸ்தாவின் அந்தராத்மா பேசுவதை நிழல் மூலம் விளக்கியிருப்பதும் சிறப்பாக இருக்கின்றன. சிற்சில குறைகளையும் கவனித்திருக்கலாம். கல்கத்தா, ஹைதராபாத் இப்படிப் பல இடங்களுக்கும் ஆடப் போகும் பப்பிக்கு வெவ்வேறு உடைகளை மாற்றியிருக்கலாம். பால்காரி ஒருத்தி காரியாலயத்தில் போய் கூச்சல் போடுவது அசம்பாவித மில்லையா? 'டைரி' விஷயம் இன்னும் சற்று தெளிவாக இருக்கலாம். 'பிரதர்' தன் முயற்சியின் இடையிடையே 'டைரி' யைத் தேடவும் முயற்சிகள் செய்வதாகக் காட்டியிருக்கலாம். கோபு ஊறுகாய் வியாபாரியாகி பணக்காரனுவதைக் காட்ட அவ்வளவு வளர்த்தியிருக்க வேண்டாம்.

முக்கியமாக மேக்-அப் விஷயத்தில் கவனம் செலுத்தப்படவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் கூட சுசீலா கோபு இவர்கள் வயதானவர்களாகக் காட்சியளிக்க வில்லை. மேனகாவும். பண்டரிபாயும் சேர்ந்து வரும் காட்சிகளில் தாயும் மகளும் என்று நம்பவே முடியாதபடி இருக்கிறது.

ஒலி—ஒளிப் பதிவுகள் திருப்திகரமாய் இருக்கின்றன. சில இடங்களில் கதைப்படி கூறப்படும் நேரத்திற்கு எதிர்மாருக நிழல்கள் தரையில் விழுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். மொத்தத்தில், "குமாஸ்தா" குடும்பத்தோடு சென்று அனைவரும் பார்க்கக்கூடிய ஆபாசமற்ற ஒரு நல்ல படம்.

—''ஜாம்பவான்.''

உங்களுக்குத் தெரியும் நக்ஷத்திரங்கள் படங்களில் நீங்கள் காணும் நடிக, நடிகைகள் தான். உங்களைச் சிரிக்கவோ அழவோ செய்பவர்கள் அவர்கள் தான். ஆயினும் அவர்கள், டைரக்டர் ஆட்டி வைக்கும் பொம்மைகளே. இவர்தான் நக்ஷத்திரங்களுக்கு அவசியமும், அர்த்தமும் கொடுப்பவர், நாம் படத்தில் பார்க்காமலும் பாடாமலும் இருக்கும் இவர்தான் உண்மையான நக்ஷத்திரம்.

படத்தில் இல்லாத நக்ஷத்திரம்



தேனீரின் குணங்களும் இதுபோன்றதுதான் அதைப்பற்றி யாரும் பாடாவிட்டாலும் உலகிலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள், புத்துயிரளிப்பதும் எப்பொழுதும் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான தேனீரை அருந்தி ஊக்கமும் இன்பமும் பெறுகின்றனர்.

உங்களுக்கு அதிக இன்பத்தை கொடுக்கிறது

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB—

தமிழ்-தெலுங்கு பாஷைக ளில் காட்சிக்குத் தயாராகி யிருக்கும் ''பெற்ற தாய்'' படத்தில் ஜி. வரலக்ஷ்மி, நாகேஸ்வரராவ், நம்பியார், வஸந்தா, கே. ஆர். செல்லம் முதலியோர் நடித்திருக்கின்றனர். வரலக்ஷ்மி பிரமாதமாய் நடித்துள்ளாராம்.



Parthan


பிரகாஷ் புரட்க்ஷன்ஸ்
பெற்ற தாய்
டைரெக்ஷன் : பிரகாஷ் ராவ்
ஸ்டுடியோ—பிரகாஷ்
స్టూడియో ప్రకాశ్

பொதுஜனம் பேசுகிறர்

★ சில தமிழ்ப் படமுதலாளிகள் சமூகப் படம் எடுப்பதென்றால் ''குதிரைப் பந்தயம்'' போன்ற கட்டங்கள் இல்லாமல் படம் எடுப்பதில்லை. ''ஓர் இரவி''ல் ஆரம்பித்த இந்தக் குதிரைப் பந்தயப் பணச் சுரண்டல் நோயானது ''தாயுள்ளம்'', ''மூன்று பிள்ளைகள்'', ''என் தங்கை'', ''என் வீடு'', ''மாமியார்'' போன்ற படங்களில் பரவியிருக்கிறது. அந்தச் சில முதலாளிகளும் இதைத் தவிர்க்க முன்வரவேண்டும். பணக்காரனும் படம் பார்க்கச் செல்கிறுன், ஏழையும் செல்கிறுன். ஏழை குதிரைப் பந்தயக் கட்டங்களைக் காணும் பொழுது அவன் மனம், ''ஐந்து ரூபாய் கட்டு, ஐயாயிரம் ரூபாய் வரும்'' என்று கூறுகிறது. இதைப் போன்ற படங்களை எடுப்பதால் சமூகம் முன்னேறும் என்று எண்கின்றனர் படமுதலாளிகள்! சமூகம் சீர்கேடு அடையும்—ஏன், சினிமா பார்க்க வருவோர் வாழ்க்கையே சீர்கேடு அடையும். தனக்காக இரவு பகல் பாராது உழைக்கும் மனைவி என்று தெரிந்தும் மாங்கல்யத்தையே 'மணி மார்க்கெட்டாக' நினைத்து, அவள் மறுத்தாலும் மண்டையில் அடித்து அதை வாங்குவதை நாம் ''என் தங்கை'' படத்தில் கண்கூடாகக் காண்கிறேம். என்னே நமது நாட்டின், நமது படமுதலாளிகளின் அறிவு ஆற்றல்! என்ன சமூக சேவை! அரசாங்கம் கட்குடி ஒழித்ததைப்போல, குதிரைப் பந்தயக் காட்சிகளைப் படத்தில் சேர்ப்பதைத் தடுக்க ஒரு சட்டம் ஏற்படுத்தினுல்தான் நாட்டிற்கு நலம் ஏற்படும்.

கே. விமலா,
சென்னை-17.

கலை எதற்காக?

இப்பொழுதெல்லாம் திரைப் படங்களில் ஆபாசக் காட்சிகளும், அசம்பாவித சம்புவங்களும், பொருத்தமற்ற கதைகளும் அர்த்தமற்ற வசனங்களும் நிறைந்து விட்டன? இதனுல், சிறிதுநேரம் நிம்மதியாக பொழுது போக்கலாமென்று சினிமா பார்க்கச் செல்வோர்க்குப் பெருத்த 'தலைவேதனை' விளைவிக்கப்படுகிறது என்பதோடு மட்டுமல்ல; மக்களின் ஒழுக்கமும், குறிப்பாக இளைஞர்களின் சீலம் கெட்டுப் போகிறது. இன்றைய இளைஞர்கள் நாளை நம் நாட்டின் பொக்கிஷங்கள்; எதிர்கால இந்தியாவை ஆளப் போகிறவர்கள்; அறிஞர்களாகத் திகழவேண்டியவர்கள். இன்று இவர்களுடைய ஒழுக்கம், பண்பு, அறிவு பாழ்படுத்தப் பட்டால், நாட்டின் வருங்காலம் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக இராது; வரண்ட பாலைவனமாகத்தா னிருக்கும். இன்றைய சினிமாப் படங்கள் அந்த விபரீத நிலையை உண்டுபண்ணி விடுமோ என்ற அச்சம்தான் இன்று நம் நாட்டு அறிஞர்களிடையே எழுந்துள்ளது. எனவேதான் அவர்கள் மக்களை நோக்கி 'சினிமாப் படங்களைப் பார்க்காதீர்!' என்று அறவுரை கூறி வருவதில் ஆச்சரியமொன்றுமில்லை. அந்த அளவுக்கு நம் சினிமாப் படங்கள் மோசமாகிக்கொண்டு வருகின்றன. சினிமா ஒரு கலைதான்—அதிலும் பல கலைகள் சேர்ந்த ஒரு மாபெரும் கலையென்பதில் சந்தேகமில்லை. அதை நல் வழியில் பயன்படுத்திக்கொண்டால் அதனுல் நம் மக்களுக்கு எவ்வளவோ நன்மையுண்டு; அதன் மூலம் அவர்களும் அமோக ஆதரவையும் நன்மதிப்பையும் பெறலாம். அதை விட்டு விட்டு, மக்களுடைய பண்பை – ஒழுக்கத்தைக் கெடுக்கும் வகையில் படங்கள் எடுக்கப்படுமேயானுல் அது நம் நாட்டிற்கே செய்யும் துரோகமாகும்! கலையென்பது பொழுது போக்கிற்காகவும் அறிவை வளர்ப்பதற் காகவுமேயன்றி, மக்களுடைய ஒழுக்கத்தைக் குலைப்பதற்கல்ல என்

★ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

கே. விமலா,
11, பிஞ்சால சுப்ரமண்யம் ரோடு,
சென்னை—17.

பதைப் படத் தயாரிப்பாளர்கள் உணரவேண்டும். கலையைக் கொண்டு ஒரு நாட்டை உருப்படவும் செய்யலாம்; உருக் குலைக்கவும் செய்யலாம். இன்றைக்கு நம் சினிமாப் படங்கள் பின்னதைத் தான் பணியாகக் கொண்டிருக்கின்றன! எனவேதான், அவை மக்களின் கண்டனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் இன்று ஆளாகி வருவது கண்கூடு. இனிமேலாவது நம் பட உற்பத்தியாளர்கள் நல்ல தரமான படங்களைத் தயாரிப்பதன் மூலம் நாட்டு மக்களுக்கு நற்பணி புரிய முன் வருவார்கள் என்று நம்பலாமா?

பி. எம். இஸ்மாயில்,
இரவாஞ்சேரி.

இது வெய்யில் காலமல்லவா? அதனால் வீட்டைக் குளிரச் செய்வதற்கு (பி. கே.) சாஸ்வதியின் முகத்திலுள்ள குளுமை போதவில்லை போலிருக்கிறது! பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸின் "பெற்ற மனம்" படத்தில் இக் காட்சியை நீங்கள் சீக்கிரம் கண்டு மனங் குளிரலாம்.

இன்றையத் தேவை

துன்பம் செய்தவர்க்கும் நன்மை செய்யும் அரிய பண்பை—வள்ளுவர் வாய்மொழியை—புத்தரும் காந்தி அடிகளும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறியை வற்புறுத்துவதாக அமைந்துள்ளது "மருமகள்'. மருமகள் உஷா, வெறுத்து இன்னல் செய்தார்க்கும் விரும்பி இனிய செய்தாள்; இழிமொழி கூறிப் பழி சுமத்தியோரிடத்தும் அன்பும் பொறுமையும் பூண்டு வாழ்ந்தாள். தீச்செயல் செய்வோரைக் கண்டு அஞ்சி ஒதுங்கி ஒடாமல் அவர்கள்பால் இரக்கம் பூண்டு அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்னும் அசையா நம்பிக்கையோடு முயன்று வெற்றியும் பெற்ருள். அவள் பெண்களில் ஒருத்தி அன்று; பெண்கள் கண்டு பின் பற்றத்தக்க ஒருத்தி. விண்மீன்களிடையே ஒரு நிலா. பெண்ணினத்திலே ஓர் உஷா. அவளிடம் "இற்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனப் படுவதொன்றும் களிநடம் புரியக்" காண்கிறேம். "மருமகள்" போன்ற சமூகப் படங்களைப் பார்ப்பதால் ஒரு சில நன்மனங்கள்—'வாழ்க்கையில் அல்லற்பட்டு, உலகில் காணும் குற்றங்களும் கொடுமைகளும் தவிர்க்க முடியாதன; அவையின்றித் தாமும் வாழமுடியாது' என்றெண்ணிக் கல்லாகி விடாத சில இள மனங்கள் – ஊக்கம் பெறக்கூடும். ஆன்ருேர் காட்டிய நல் வழி செல்ல நம்பிக்கை பெறக் கூடும். ஆகவே, கீழ்த்தரமான விலங்குணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு மக்களில் சிலர் செய்யும் அருவருக்கத் தக்க செயல்களைக் காட்டும் சமூகப் படங்களைவிட "மருமகள்" போன்ற வாழ்க்கைக்கு வழி காட்டியான படங்கள் சீர்செட்டு வரும் இன்றைய சமுதாயத்துச்குத் தேவை—மிகமிகத் தேவை.

தி. கு. நடராஜன், திருமகளூர்.

கவனிப்பார்களா?

இன்று நம் நாட்டிலே, சினிமாவைக் கண்டித்துப் பேசாத தலைவர்களே

கிடையாது. 'மக்கள் மதியிழந்து, நிதியிழந்த, பண்பிழந்து தவிக்கிறார்கள், சினிமாப் பார்ப்பதனால், சினிமா சீரிய ஒழுக்கத்தைக் கற்பிக்காமல், ஏழைகளின் பணத்தைப் பறித்து அவர்களைப் படுகுழியில் தள்ளிவிடுகிறது'—இவ்வாறெல்லாம் காரணம் கூறுகிறார்கள். ஆனால், கண்ணைக் குத்திற்று என்பதற்காகக் கை விரலை நறுக்கி விடுவார்களா? தவறாக ஒரு சிலர் சினிமாவைப் பயன்படுத்துவதால் சினிமாவே நாட்டிற்குக் கேடு பயக்கும் என்று கூறிவிடலாமா? ஏழைகளின் பணத்தைப் பறிக்கும் சாதனம் சினிமா என்று அதைத் தடைசெய்தால், இன்று குறுக்கெழுத்துப் போட்டியிலே தலையிட்டுத் தவிப்பவரைப் பற்றி என்ன சொல்வது! கிண்டியிலே கொண்டு போய்க் கொடுக்கிறார்களே ஆயிரமாயிரம், அங்கெல்லாம் மக்கள் பணத்தைப் பறிகொடுக்கவில்லையா, பண்பை இழக்கவில்லையா? எங்கு நன்மையிருந்தாலும் எடுத்துக்கொண்டு, தீமையிருந்தால் திருத்தி நல்வழிப் படுத்துதல் தானே மனிதப் பண்பு. அண்மையிலே வெளியிடப்பட்ட "மருமகள்" படம் நல்ல கருத்தை, ஆபாசம் கொஞ்சமும் இல்லாமல் எடுத்துக் கூறியிருப்பதே இதற்குத் தக்க சான்று—இம்மாதிரிப் படங்கள் வெளி வந்தால் பணம் கொடுத்தாலும் கூட மக்கள் பண்பு, ஒழுக்கம், நீதி முதலியவைகளை அடைகிறார்களே. அது தானே நமக்குத் தேவை. இதனைத் தலைவர்கள் சற்றே கவனிப்பார்களா?

ஜி. கிருஷ்ணமூர்த்தி,
கும்பகோணம்.

"கலையும் மொழியும்"

திரைக் கலையால் நாடு நன்னிலை அடைய முடியும், மொழி வளர்ச்சி பெறலாம்; சமூகம் திருத்தப்பட்டு வாழ்வில் மலர்ச்சி ஏற்படலாம். ஆனால் தற்போதைய தமிழ்ப் படங்களால் நாட்டின் பெருமை கிண்டல் செய்யப்படுகிறது; மொழி கொலை செய்யப்படுகிறது; "சமூக சீர்திருத்தம்" என்ற பெயரில் 'கீழான' கட்சிக் கொள்கைகள் புகுத்தப் படுகின்றன; வாழ்வில் மலர்ச்சிக்குப் பதிலாக 'பெண்மைக்கு அவமானம்' ஏற்படுத்தப்படுகிறது! மொத்தத்தில் மற்றவைகளைவிட 'மொழிக் கொலை'யைக் காணச் சகிக்க முடியாது; சகிக்க முடியவில்லை. தமிழ் மொழி சரியாகத் தெரியாதவரெல்லாம் தமிழ்ப் படத்தில் நடிக்கத் துவங்கிவிட்டார்கள்! அவர்கள்

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!

காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்

முயற்சி பாராட்டத் தக்கதாயி னும் அவர்களின் 'வாய் மொழி களை'க் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை! மலையாள நடிகர் திக்குரிச்சி நாயர் வந்தார்; தெலுங்கு நடிகர் நாகேஸ்வர ராவ் நுழைந்தார்; கடைசியில் ரேலங்கி விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டு விட்டார். 'ஆன்' பட நடிகர்கள் வேறு தமிழ் மொழிக் கொலையில் தலையிட ஆரம்பித்தார்கள்.

ரேலங்கி தன் சீஸனை உண்டாக்கிக் கொண்டு விட்டார். அவர் நடிக்கும் படமெல்லாம். அவரைப் பொருத்தமட்டில், ஒரே தமிழ்க் கொலை! 'சியாமளாம்பிகே' என்பதை 'சியாமளாபீகிங்' என்கிருர். இவர்களெல்லாம் தமிழ்ப்பட உலகிற்கு வேண்டாம் என்று நான் கூறவில்லை. நன்றுகப் பேச பழகிக் கொண்டு நடித்தால் என்ன மோசமாகும் என்று கேட்கிறேன்? மொழிக்குச் சாதகம் செய்யா விட்டாலும், பாதகம் செய்யாமலாவது நடிக்கலாம் அல்லவா?

சுத்தமாக தமிழ்ப் பேசும் புது முகங்களுக்கு நம் படத் தயாரிப்பாளர்கள் ஏன் சந்தர்ப்பம் அளிக்க தயங்கவேண்டும்?

ஆர். தங்கவேலன், திருச்சி.

''சண்டி ராணி'' படம் பானுமதியின் நடிப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்—எனத் தோன்றுகிறதல்லவா!

பட முதலாளிகள் கவனிக்கட்டும்!

கிருஷ்ணு பிக்சர்ஸ் ''மருமகளை''ப் பார்த்தபோது அதனுள் இருக்கும் உன்னதக் கருத்துக்களை கண்டு, உள்ளம் மகிழ்ச்சி கொண்டது, ஆனுல், அதில் ஒரு காட்சி மட்டும் விரும்பத் தக்கது அல்ல. அக்காட்சி பள்ளி மாணவிகளின் மனத்தை மாசுபடுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

இந்தப் படத்தில் ரூபா என்ற பெண்மணி நடிப்புக் கலையில் விருப்பம் கொண்டு டைரெக்டர் சூரியை நாடுகிருள். சூரி அவளைக் காதலிக்கிருன். பள்ளிக்குச் செல்ல வேண்டிய ரூபா அவன் இருப்பிடத்திற்கு வருகிருள். அப்பொழுது சூரி, ''நீ எப்படி இங்கு வந்தாய்?'' என்று வினவுகிருன். அதற்கு அவள். ''பள்ளிக்குச் செல்வதாக வீட்டில் கூறிவிட்டு வந்ததாக''ச் சொல்லுகிருள். அதை சூரி ஆமோதித்து, ''இப்பொழுது நீ செய்த 'ட்ரிக்' சினிமாவில் ஆக்ட் பண்ண சரியான அஸ்திவாரம்!'' என்று கூறுகிருன். இது, சினிமாவில் நடிக்க ஆர்வமுள்ள மாணவிகள்—பொதுவாகப் பெண்கள், தாய் தந்தையர்களை ஏமாற்றிவிட்டு வந்துவிடலாம் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதுபோல் இருக்கிறது. இம்மாதிரிக் காட்சிகளால் பிஞ்சு உள்ளங்கள் பாதிக்கப்படும். ஆகவே, நமது பட முதலாளிகளும் அதில் சம்பந்தப் பட்டவர்களும் இம்மாதிரியான காட்சிகளைச் சேர்க்காதிருக்க வேண்டுகிறேன்.

பிஞ்சு உள்ளங்கள் பிழைக்கட்டும். நம் பட முதலாளிகளின் கருணையில் வாலிப உள்ளங்கள் வீணுக்கப்படாமல் இருக்கட்டும்!

''காடோடி'', திருவாரூர்.

புஸ்தகப் பொழுது

பாரதி ஜயந்தி மலர்

கல்கத்தா பாரதி தமிழ் சங்கத்தினர் பாரதிஜயந்தி மலர் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர். சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் சம்பந்தமான போட்டோக்கள் மலர் முழுவதும் இருக்கின்றன. கி. வா. ஜகந்நாதன், அ. ஸ்ரீநிவாஸ ராகவன் ஆகியோரது கவிதைகளும் பலபிரபலஸ்தர்களது கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

சந்திரோதயம்

[ஆசிரியர்: சி. என். பி. சாமி; விலை: தனிப் பிரதி 3 அணா; கிடைக்குமிடம்: 133, பிராட்வே, சென்னை-1.]

நடுவில் சில காலம் நின்று போயிருந்த "சந்திரோதயம்". மாதம் இருமுறைப் பத்திரிகையாக மீண்டும் வெளி வருகிறது. சிறு கதை, சினிமா விமர்சனம், போட்டிப் பந்தயம், இவைகளுடன் கவர்ச்சிகர அட்டைப் படத்துடன் வெளியாகிறது.

சௌராஷ்டிர மணி
(தை மலர்)

கும்பகோணத்திலிருந்து வெளிவரும் சௌராஷ்டிர மணி ஒரு ரூபாய் விலையில் தை மலராக வெளிவந்திருக்கிறது. மலரிலே நிறையக் கதைகள், கட்டுரைகள், புகைப் படங்கள் ஆகியவைகள் இருக்கின்றன.

பாபு

[ஆசிரியர்: "நாதன்"; கிடைக்குமிடம்: பாபு பப்ளிகேஷன்ஸ், மரக்கடை ரோடு, சாலை, திருவனந்தபுரம்; விலை: தனிப் பிரதி 1 அணா.]

பெயரிலிருந்தே சிறுவர்களுக்கான மாதப் பத்திரிகை இது என்று தெரிகிறது. கதைகள், கேள்வி-பதில், விகடத் துணுக்கு ஆகியவை இதனுள் இருக்கின்றன.

கவிச் சொல் கேளீர்

[ஆசிரியர்: மா. வரதராஜன்; ("விமலன்") விலை: குறிப்பிடப்படவில்லை; கிடைக்குமிடம்: ஜெயந்தி பதிப்பகம், விஜயபுரம், தஞ்சாவூர் ஜில்லா.]

ஆசிரியர் இயற்றிய சில கவிதைகள் இப் புஸ்தகத்தில் அடங்கியுள்ளன. அனைத்தும் முத்தான கவிதைகள் என்று தயங்காமல் சொல்லலாம். கவிதைகளில் சொல்வளமும், பொருள் நிறைவும், கற்பனையும் பொருந்தியிருக்கின்றன. புஸ்தகத்தின் முன் பகுதியில் இக்கவிதைகளைப் பாராட்டி பல அறிஞர்கள் எழுதியுள்ளவைகளிலிருந்து சில பகுதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நாடகக் கலைக் களஞ்சியம்

[கிடைக்குமிடம்: நாடகக் கழகம், 14, மவுண்ட் ரோடு, சென்னை-2; விலை: ரூ. 1—0—0]

சென்ற பிப்ரவரி மாதம் 1ம் தேதி நாடகப் பெரியார் ப. சம்பந்த முதலியாரது அறுபதாவது ஆண்டு விழாவை நாடகக் கழகத்தினர் சிறப்பாகக் கொண்டாடியது நேயர்களுக்குத் தெரியும். இதை யொட்டி ஒரு அழகான மலரையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ப. சம்பந்த முதலியாரது மூவர்ணப் படம் பளிச்சென்று அட்டையை அலங்கரிக்கிறது. நாடகப் பெரியாரின் அறுபதாம் ஆண்டு விழா சமயத்தில் எடுத்த சில புகைப் படங்களும், கழகத்தின் போஷகர்கள், காரியதரிசி ஆகியவர்களது புகைப் படங்களும் இந்த மலரில் இடம் பெற்றுள்ளன. நாடகக் கழகத்தின் ஆரம்பம், அதன் வளர்ச்சி பற்றியும் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. டி. கே. சி., சி. என். அண்ணாத்துரை போன்றவர்களின் அரிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. நாடகாபிமானிகள் அனைவரும் படிக்க வேண்டிய உபயோகமான மலர் தான் இது.

அத்வைத விளக்கம்

[ஆசிரியர்: கே. கோபால கிருஷ்ணய்யர்; கிடைக்குமிடம்: கே. கோபால கிருஷ்ணய்யர், 27, தெற்குச் சித்திரை வீதி, மதுரை; விலைகள்; முதல் மூன்று பாகங்கள் - அணா நான்கு; நான்காம் பாகம்- அணா நான்கு; ஐந்தாம் பாகம் ரூ. 1—0—0.]

ஆஸ்திகர்கள் மிகவும் விரும்பிப் படிக்கக் கூடிய, படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை. முதல் மூன்று பாகங்களிலே புராணங்களின் மெய்ப் பொருள், உபநிஷத் ரகஸ்யம், ராம, கிருஷ்ண நாம மகிமை இவைகளைப் பற்றி சுருக்கமாகக் கூறியிருக்கிறார். நான்காம் பாகத்திலே

கீதா ரஹஸ்யத்தையும். ஐந்தாம் பாகத்திலே ஞான யோகத்தைப்பற்றியும் விவரித்திருக்கிறார் ஆசிரியர்.

காதல் நினைவு

[ஆசிரியர்: கோ. கந்தசாமி; விலை: 8 அணா; கிடைக்குமிடம்: வஸந்தா பதிப்பகம், 2, சிதம்பரசாமி 2வது தெரு, மயிலை, சென்னை-4.]

ஆசிரியர் எழுதிய இருபத்தொன்பது கவிதைகள் இப்புத்தகத்தில் உள்ளன. காதலன், காதலி, காலேஜ் குமாரி ஆகியவர்களின் நினைவுகளைக்கவிதையாக எழுதியிருப்பது நன்றாக இருக்கிறது. இந்தப் புத்தகத்திற்கு பாலபாரதி ச. து. சு. யோகியார் வாழ்த்துரையும், டி. கே. ஷண்முகம் முன்னுரையும் அளித்திருக்கின்றனர்.

வருஷாந்தர சங்கீத விழா மலர்

சென்னை திருவல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபையினர், தாங்கள் நடத்திய வருஷாந்தர சங்கீத விழாவை முன்னிட்டு ஒரு மலரை தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். நமது பத்திரிகை அச்சாகும் கமர்ஷியல் அச்சகத்தின் மானேஜர் எஸ். ஸ்ரீராமின் மேற்பார்வையில் தயாரான இம் மலர் சிறந்த முறையில் அச்சாகியிருப்பதில் வியப்பில்லை! அவர் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டு. பல அரிய கட்டுரைகளை மலரில் சேர்த்திருப்பதைப் பாராட்ட வேண்டும். கனம் பி. வி. ராஜமன்னார், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி போன்ற அறிஞர்களின் விஷயம் செறிந்த கட்டுரைகள் மலரில் இருக்கின்றன. நாடகம், சங்கீதம் இவைகள் பற்றி பல மேதாவிகளின் அபிப்பிராயத்தைத் தொகுத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. மொத்தத்தில், ஒரு ரூபாய் விலையுள்ள இம் மலர் கலா ரஸிகர்களுக்கு ஒரு விருந்தாகவே இருக்கிறது.

மட்டாவின் பஞ்சாங்கம்

விஜய வருஷப் பஞ்சாங்கங்கள் பல வந்துள்ளன. என்றாலும் கும்பகோணம் மட்டா சு. வெ. ராமகிருஷ்ண செட்டியார் வெளியிட்டுள்ள பஞ்சாங்கம் குறிப்பாக சிறப்பாக இருக்கிறது. அதிக ஆடம்பரம் இல்லாமல், முக்கியமான குறிப்புகளுடன், கச்சிதமாக இருக்கிறது இது. இந்தப் பஞ்சாங்கத்திற்கு விலை கிடையாது, செட்டியார் இதை பிரதி வருடமும், ஆயிரக்கணக்கானவர்களுக்குஇலவசமாகவிநியோகம் செய்து வருகிறார்.

புது வெள்ளம்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்கும் இடம்: அமுத நிலையம் லிமிடெட். சென்னை—18; விலை. ரூ. 3. பரிசுப் பதிப்பு ரூ. 5.]

சங்க இலக்கியங்கள் வரிசையில் ஏழாவதாக 'புது வெள்ளம்' வெளி வந்துள்ளது. சங்க காலத்தில் சேர மன்னர்கள் பதின்மரைப்பற்றி பத்து பத்துப் பாட்டுகளாக பத்துப் புலவர்கள் பாடிய நூறு பாட்டுகள் கொண்ட பதிற்றுப்பத்து என்ற நூலின் மூலத்தை டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் அவர்கள் 1904-ல் கிடைத்த மட்டில் தொகு

சூழ்நிலை காதலுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. ஆனால் சரோஜாவின் மனநிலை அதற்குபொருந்தியதாக இல்லையே; ஏன்? "ஜினேவா"வில் எம். ஜி. ராமச்சந்திரனும், பி.எஸ். சரோஜாவும் தோன்றும் காட்சி.

தியேட்டரிலிருந்து முதல் காட்சி பார்த்துவிட்டு வரும் புதுத் தம்பதி வெளியே வருகின்றனர்.

கணவன் :—"அடேடே! ஏராளமான ஜனங்கள் 'கியூ'வில் நிற்பதைப் பார்த்தால் நாம் இப்பொழுது பார்த்து விட்டு வரும் படம் நல்ல படமாய்த்தான் இருக்கும்போல் தோன்றுகிறதே!"

த்து வெளியிட்டார். இவற்றில் முதற் பத்தும் கடைப்பத்தும் கிடைக்கவில்லை. கிடைத்த எட்டுப் பத்தில் ஒவ்வொரு பத்திலிருந்தும் ஒரு பாட்டை எடுத்து எட்டு பாடல்களுக்கு விளக்கம் எழுதியிருக்கிறார் ஆசிரியர். மற்ற பத்தகங்களைப் போலவே இந்த நூலிலும் விரிவான முகவுரை உள்ளது. இதில் பதிற்றுப்பத்தைப் பற்றிய பல உபயோகமான செய்திகளும் சேரமன்னர்களைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

பாலை கௌதமனார் என்ற புலவர் பாடிய மூன்றாவது பத்தில் எட்டாவது பாட்டாக வரும் 'புது வெள்ளம்' என்ற இப்புத்தகத் தலைப்புடைய பாடல் இரண்டாவதாக விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. வெள்ளப்பூசல் தவிர வேறு எவ்வித பூசலுமில்லாத செல்வச் சிறப்புடைய நாடு சேரனுடையது என்று பொருள் பட இப்பாடல் பாடப்பட்டிருக்கிறது.

குழந்தை வைத்தியம்

[ஆசிரியை: டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி, ("லக்ஷ்மி") எம். பி. பி. எஸ். விலை: ரூ. 3-4-0; கிடைக்குமிடம்: இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை—4]

பல நாவல்களும், சிறு கதைகளும் எழுதியுள்ள "லக்ஷ்மி"யை வாசகர்கள் பலருக்கு சிறந்த ஆசிரியை என்ற வகையில்தான் தெரியும். அவர் சென்னையில் அனுபவமிக்க, கைராசியுள்ள ஒரு லேடி டாக்டர். பிரசவக் கேசுகளிலும், குழந்தை வைத்தியத்திலும் விசேஷப் பயிற்சியும் திறமையும் பெற்றவர்.

நம் நாட்டிலே மற்ற நாடுகளைவிட சிசு மரணம் அதிகம். இதற்குக் காரணம், குழந்தை வளர்ப்பு சம்பந்தமான பல அரிய விஷயங்களை நம்மவர்கள் தெரிந்து கொள்ளாதது தான். அது அவர்கள் குற்றம் என்று கூற மாட்டேன்; அத்தகைய நூல்கள் தமிழில் இல்லாதிருப்பதுதான் காரணம். ஆனால் இனிமேல் அதைக் காரணமாகக் கூற முடியாது; "குழந்தை வைத்தியம்" என்ற இந்த சிறந்த புஸ்தகம் வெளிவந்து விட்டது.

குழந்தை தாய் வயிற்றிலிருந்து வெளிப் படுவது முதல் வளர்ந்து வாலிபப் பருவம் அடையும் வரையில் அவர்களுக்கு வரக்கூடியநோய்கள், அவைகள் வராமல் தடுக்கும் மார்க்கங்கள்—வந்து விட்டால் வைத்தியம் செய்யும் முறை—இவைகள் அனைத்தும் இந்தப் புஸ்தகத்திலே இருக்கின்றன. ஆசிரியை, சாதாரணப் படிப்புள்ள தாய்மார்களும் புரிந்து கொள்ளும் விதம் எளிய நடையிலே எழுதியிருக்கிறார். ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய புத்தகம் இது. ஏனெனில் குழந்தை இல்லாத வீடு ஏது?

வீரத்தேவன் கோட்டை

இது படிக்காதவர்களுக்கு : பாழடைந்து கிடந்த வீரத்தேவன் கோட்டை பற்றிய கதையை கதாசிரியர் சொல்கிறார்:

“சோழ நாட்டு ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த வீரத்தேவன் தன் பாண்டிய நாட்டு நண்பன் இருளப்பனுடன் கொள்ளிடக் கரையை அடைகிறான். திருவிழா காலமானதால், ஏராளமான கடைகளும் ஜனத்திரளும் காணப்படுகிறது. ஒரு மரத்தடியில் ஒரு கிழவியிடம் இரு பெண்கள் குறி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். பெண்களில் கருப்பாயுள்ள பவளவல்லியும் வீரத்தேவனும் ஒருவரையொருவர் கண்டதும் காதல் கொள்ளுகின்றனர்.

‘வீரத்தேவனும் கிழவியிடம் குறிகேட்கிறான். கிழவி, “அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷம் மட்டும் உன்மீது வீசியிருக்காவிட்டால் நீ பிச்சை எடுக்க வேண்டியவன்” என்று கூறுகிறாள். இதைக் கேட்டதும் வீரத்தேவன் கோபமுற்று, கிழவியை அடிக்கப் போகிறான். இருளப்பன் அவனைத் தடுத்து நிறுத்துகிறான்.

“தன் மாளிகை அடைந்ததும் தாயார் மங்களாம்பிகையிடம் வீரத்தேவன் இந்த சம்பவத்தைக் கூறுகிறான். அவள் நடுங்கிப்போகிறாள். ஒரு கிழவி காரணமாகவே தன் கணவன் மாண்டதாயும், ‘இந்தக் கிழவி ஒரு சூனியக்காரியாய் இருப்பாள்; நீ அவள் வழிக்குப் போகாதே’ என்றும் மகனிடம் கூறி, வாக்குறுதி பெறுகிறாள்.

பல நாட்களுக்குப் பிறகு பவளவல்லியும் வீரத்தேவனும் மீண்டும் சந்திக்கின்றனர். அன்றைய தினம் அரண்மனையில், குறி சொன்ன கிழவி மங்களாம்பிகையை சந்திக்கிறாள். கிழவியிடம் உள்ள ஏதோ ஒரு ரகஸியமான ஓலைச் சுவடிக்குப் பயந்து கொண்டு மங்களாம்பிகை அவளுக்குப் பணம்கொடுத்து அனுப்புகிறாள்.

பவளவல்லியின் பாட்டன், “ஒரு ஸ்திரீ காரணமாக, உன் மாமன் பாண்டித்துரையையும், அவன் மனைவியையும் வீரத்தேவனின் தகப்பன் சிவஞானத் தேவன் கொன்று விட்டான். நான் பழிவாங்குவதற்குள் சிவஞானத் தேவனை வேறு யாரோ கொன்று விட்டனர். அதனால் அப்பழியை நான் வீரத்தேவன்மேல் தீர்த்துக் கொள்ளப் போகிறேன்”—என்று குடும்ப ரகஸியத்தைக் கூறுகிறார். “சுந்தரத் தேவன்” என்று சொல்லிக்கொண்டு தன்னைக் காதலிப்பவனே வீரத்தேவன் என்ற உண்மையை, அவன் தனக்குப் பரிசளித்த மோதிரத்தின் மூலம் அறிகிறாள் பவளவல்லி.

இனிமேல்...முன்பே படித்தவர்களுக்கு :

ஐந்தாம் அத்தியாயம்

13 4145

லக்ஷ்மி

அன்று ஒருவரும் தூண்டிக் கேட்கவில்லை. டிபனுக்குப் பின் கதாசிரியர் தாமாகவே மேலே தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார். பவளவல்லிக்கு அன்று இரவு முழுவதும் நித்திரை வரவேயில்லை. ‘எப்பொழுது விடிந்து அந்திப் பொழுது விரைவில் வரும்?’ என்று அவள் துடித்துக் கொண்டு காத்திருந்தாள். மறுநாள் மாலை வழக்கம்போல் கொள்ளிடக் கரை நாவல் மரத்து மேடை மீது தன் காதலன் வரவைக் குறித்துக் காத்திருந்த சமயம், அவள் உள்ளத்திலே ஒரே ஒரு அவாதான் சுழன்று சுழன்று அலைபாய்ந்து கொண்டிருந்தது. ‘பாட்டனின் பரம வைரியான வீரத்தேவனுக்கும் அவள் காதலன் சுந்தரத் தேவனுக்கும் எந்த விதமான சம்பந்த

மும் இல்லாது இருக்க கடவுள் அருள் புரிய வேண்டும்' என்பது தான் அவளுடைய அந்த சிறு அவா!

கொள்ளிடக் கரையில் தெரிந்த நீண்ட சாலைமீது வண்டியொன்று வேகமாக வருகிற சப்தம் கேட்டது. பவளவல்லியின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளத் துவங்கியது. "ஒரு சமயம், அவளது அன்பன், பாட்டனின் பரம வைரியான வீரத் தேவனுக்கு உறவினனாக இருந்து விட்டால்!" என்று எண்ணியமாத்திரம் அவள் உடல் அச்சத்திலே சிலிர்த்தது. பாட்டன்தான் சொன்னாரே! கொலையாளிகள் களவு செய்து கொண்டு போன ஆபரணங்களை யாரோ ஒரு தட்டான் விலைக்கு வாங்கினான் என்று? சுந்தரத்தேவனின் பெற்றோர்கள் அந்தப் பச்சைக் கல் மோதிரத்தை, அந்தத் தட்டானிடம் விலைக்கு வாங்கியிருக்கக் கூடுமல்லவா? என்று தனக்குள் ஒரு கணத்தில் பல ஆக்ஷேபணைகளையும் சமாதானங்களையும் கூறிக் கொண்டாள்.

மிகவும் உரிமையுடன் அருகில் வந்து மேடைமீது அமர்ந்துகொண்ட வீரத்தேவன், தன் காதலியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். "பவளம்! ஏன் முகவாட்டமுற்றிருக்கிறாய்! என்ன நேர்ந்தது" என்று மிகவும் கவலையுடன் விசாரித்தான்.

"ஒன்றுமில்லை! ஒரு சிறு சந்தேகம்! அதைத் தெரிந்து கொள்ள ஒரு கேள்வி கேட்க ஆவலாக இருக்கிறேன். தாங்கள் அதைத் தவறாக எண்ண மாட்டீர்கள் என்று முன் கூட்டி உத்தரவாதம் அளித்தால் கேட்கத் துணிவேன்" என்றாள், திகில் நிறைந்த மெல்லிய குரலில். பவளவல்லியின் முகம் பிரதிபலித்த கலக்கமும், குரலில் தொனித்த அச்சமும், வீரத்தேவனுக்குக் குழப்பத்தை உண்டுபண்ணின. "எந்த விதமான கேள்விகளையும் நீ தாராளமாகக் கேட்கலாம். உனக்கு அந்த உரிமை உண்டு" என்று பரிவுடன் பதிலுக்குப் பகர்ந்தான் அவன்.

பச்சைக் கல் மோதிரத்தை விரல்களால் வருடிக் கொண்டு பவளவல்லி மிகவும் தாழ்வான குரலில் "இந்த மோதிரம்

உங்கள் குடும்பத்தின் பரம்பரை சொத்து என்றீர்களே ! இதைப் பார்த்தால் எங்கள் பாண்டிய நாட்டுத் தட்டார்களின் கைவேலையைப் போல் காண்கிறது. இது எங்கே செய்யப் பெற்றது என்ற விவரம் உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினாள்.

வீரத்தேவன் பதிலுக்குக் கைகொட்டி கடகட வென்று சிரித்தான். "உனது கேள்வி சிலப்பதிகாரத்தில் சிலம்பை விற்கப்போன கோவலனிடம் பொற்கொல்லன் கேட்டது எனக்கு நினைவுறுத்துகிறது. இந்த மோதிரம் எங்கே செய்யப் பெற்றது ! யாரால் ? எனறெல்லாம் எனக்கு விவரம் தெரியாது. ஒன்று மட்டும் உறுதி சொல்ல முடியும். அதை நான் யாரிடமிருந்தும் கவர்ந்து கொண்டு வந்துவிடவில்லை. எங்கள் குடும்பத்து நகைகள் குவிந்து கிடக்கும் பேழையினின்று ஆராய்ந்து உனக்குப் பரிசளிக்க இதைத் தேடி எடுத்து வந்தேன். பாண்டிய நாடு, சோழ நாடு என்று ஏன் இன்னமும் வேற்றுமைப்படுத்தி நீ பேச வேண்டும் ? நம் இருவர் உள்ளமும் ஒன்று கலந்த பின்பு இந்த வேற்றுமைக்கு இடம் இன்னமும் இருக்கிறதா, என்ன ? பேதைப் பெண்ணே ! நீ என்ன விபரீதமான கேள்விகளைக் கேட்கப் போகிறாயோ என்று ஒரு நிமிஷம் நான் கலங்கிப் பதறிப் போய்விட்

டேனே?'' என்று கூறிவிட்டு நகைத்தான்.

எதேச்சையாக அவன் மறுபுறம் திரும்பும் பொழுது, அவனது வலது கன்னத்திலே லேசாகக் காணப்பெற்ற அந்த சிறு காய வடுவைக் கண்ணுற்றுள் பவளவல்லி. அச்சத்திலே அவள் உடல் வியர்த்தது. சில விநாடிகள் பேசும் சக்தியை இழந்த பதுமையாக அவள் உட்கார்ந்திருந்தாள்.

"இன்னும் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். எந்தக் கேள்விகளுக்கும் இதோ உன் அடிமை பதிலளிக்க சித்தமாகக் காத்திருக்கிறான்" என்று பரிகாசமாக மொழிந்த வீரத்தேவன் அவளது கரத்தைப் பற்றி, அந்தப் பச்சை மோதிரத்தை ஆராய்ந்து அழகு பார்க்கத் தொடங்கினன்.

தன் கரத்தை அவனது பிடியினின்று விடுவித்துக் கொண்ட பவளவல்லிக்கு, திடீரென்று கொஞ்சம் துணிவு ஏற்பட்டது. "சுந்தரத் தேவன் என்பது உங்கள் உண்மைப் பெயர் தானே!" என்று சிறிது கோபத்துடன் கேட்டாள். வீரத்தேவன் மீண்டும் கடகட வென்று நகைத்தான். "பவளம்! என் ஆருயிர் பவளம்! உனக்கு இன்று ஏதோ சித்தப் பிரமை ஏற்பட்டிருக்கிறது போல் காண்கிறது. சற்று முன் நான் அளித்த மோதிரத்தைப் பற்றி சந்தேகப் பட்டாய். இப்பொழுது என் தாய் எனக்களித்த பெயரைப் பற்றியே சந்தேகம் கொள்கிறாய்! இன்னும் சிறிது பொழுதில் நான் உன் மீது கொண்டுள்ள அன்பையும் நீ சந்தேகித்தாலும் நான் வியப்படைய மாட்டேன். உன் மன சஞ்சலத்தின் காரணம் எனக்குப் பெரும் புதிராக இருக்கிறது. சுந்தரத் தேவன் என்பது எனது தந்தை வழிப் பாட்டனின் பெயர். என் பாட்டனின் பெயரைத் தன் வாயால் உச்சரிக்க மனம் கூசி,என் தாயார் வேறு ஒரு செல்லப் பெயரால் என்னை அழைப்பது வழக்கம். என் உண்மைப் பெயரை விட எனது செல்லப் பெயர்தான் அதிகப் பிரசித்தம் அடைந்து விட்டிருக்கிறது. இங்குள்ள அநேகருக்கு சுந்தரத் தேவன் என்றால் யார் என்றே தெரியாது. ஆனால், வீரத்தேவன் என்றால் தெரியாத காக்கை, குருவிகூடக் கிடையாது என்று நிச்சயமாகச் சொல்வேன்" என்று கூறி, மேலே ஏதோ பேச நினைத்த அவன் திக்பிரமையுடன் நிறுத்தினன்.

பவளவல்லியின் கண்களிலே நிறைந்து கன்னங்கள்மீது முத்துக்களைப் போல் உருண்ட கண்ணீரைக் கண்டதும், அவனுக்கு ஏற்பட்ட பிரமிப்பை வர்ணிக்கவே முடியாது. "பவளம்! உன் மனம் நோக நான் என்ன சொல்லி விட்டேன். ஏன் இந்தக் கண்ணீர்!" என்று கலவரத்துடன் வினவினன்.

கன்னங்களிலே வழிந்த கண்ணீர்த் தாரையைத் துடைக்கத் தன் கையை நீட்டிக் கொண்டு நெருங்கினன். தீயை நெருங்கி விட்டவள்போல் பவளவல்லி விருக்கென்று துள்ளி எழுந்து, சற்றுத் தொலைவில் போய் நின்று கொண்டாள். ஆத்திரம், கோபம், ஏமாற்றம், துயரம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளுக்கும் ஒரு சமயம் வசப்பட்டிருந்ததனால் அவளால் சட்டென உத்தரவு அளிக்கக்கூட வில்லை.

"தேவரே! பாண்டிய நாட்டினின்று இங்கே வர புறப்படும் அன்று நான் எவ்வளவு ஆனந்தப் பட்டேன். புதுப் புனல் திருநாள் அன்று மகிழ மரத்தடியிலே முதல் முதலாக தங்களைச் சந்தித்த பொழுது எவ்வளவு மகிழ்ச்சி கொண்டேன்! சோழவளநாடும் அந்த மகிழ மரத்து சந்திப்பும் என் வாழ்க்கையின் சோக கட்டத்தின் ஆரம்பம் என்பதை முன்கூட்டி அறியும் சக்தி மட்டும் எனக்கிருந்திருந்தால்......உம்! அதையெல்லாம் பற்றி இப்பொழுது பேசிப் பயன் என்ன? தேவரே! என்வரை இந்த அன்பு ஒரு அழகிய கனவாக,என்றும் என் வாழ்விலே மறக்க முடியாத அமர இன்பமாக நீடித்து இருக்கும். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு, விம்மிக்கொண்டு தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு வேகமாகக் கரையை நோக்கிச் சென்றாள்.

அவளது கண்ணீர், பேச்சு, இவைகளின் தாத்பர்யத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியாத வீரத்தேவன், ஆச்சர்யமும், திக்பிரமையும் ஒருங்கே எய்தி, சிறிது நேரம் வாளா நின்று விட்டான். பவளவல்லி மிகவும் விரைவாக, மறுபுறத்து சாலையை நோக்கிச் செல்வதை உணர்ந்ததும், திடீரென்று ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் வேகமாக அவளைப் பின் பற்றி நடந்தான். "பவளம்! நில்!

உன் மனக் கலக்கத்தை விவரமாகப் பூராவும் எடுத்துக் கூறாது ஏதேதோ பிதற்றிவிட்டு நீ பிரிந்து செல்வதை நான் அனுமதிக்க மாட்டேன். உனக்கு ஏன் இத்துயரம்! என் மீது ஏற்பட்ட இந்த வெறுப்புக்குக் காரணம் என்ன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். நில்!'' என்று அதட்டினான்.

பவளவல்லி, தயங்கிக் கொண்டு ஒரு கணம் நின்றாள். கண்ணீர் நிறைந்த கண்களால் அவனை ஏறிட்டு மிகவும் இரக்கமாகப் பார்த்தாள். ''வீரத்தேவரே! விவரமாக சொல்வதற்கு ஏதும் இருக்கவில்லை. இதுதான் நாம் கடைசி முறையாக சந்திப்பது, நான் இங்கே நின்று தங்களுடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பதை பொன்னம்பலத் தேவர் கண்டாரானால், தங்களுக்கு எத்தகைய ஆபத்து நேரும் என்பதை என்னால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாது'' என்றாள் துயரத்துடன்.

பொன்னம்பலத் தேவர் என்ற பெயரைக் கேட்டதுமே, வீரத்தேவனின் முகம், சினத்தினால் கடுமையாக மாறியது. ''நமது தொடர்பில் பொன்னம்பலத் தேவருக்கு என்ன சம்பந்தம்? பேதைப் பெண்ணே! பொன்னம்பலத் தேவர் என்ற பெயர் எனக்கு எவ்வளவு கோபத்தை உண்டாக்கும் என்பதை நீ அறிய மாட்டாய்! அந்தக் கிழட்டுப் பிணத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?'' என்று உக்கிரமாக அதட்டினான்.

பவளவல்லி நிதானமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். கண்களிலே தளும்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''தேவர் அவர்களே! அவருக்கும் நமது அன்புத் தொடர்புக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. உங்கள் குல பரம வைரி பொன்னம்பலத்தேவரின் அருமைப் பேத்தி நான்'' என்று கூறிவிட்டு, அவள் அதற்குமேல் பேசவிரும்பாதவள் போல் வேகமாகச் சென்று சாலைக்குள் புகுந்து மறைந்து விட்டாள்.

சிலைபோல் அசைவற்று நின்றுகொண்டிருந்த நண்பன் தோள்மீது இருளப்பன் அன்புடன் தன் கரத்தை வைத்துக் குலுக்கினான். ''நண்பா! அன்றே நான் சொன்னேன் அல்லவா? இந்தப் பாண்டிய நாட்டுப் பைங்கிளி, உங்கள் நாட்டுப் பெண்களைப் போன்றவள் அல்ல என்று.

கவிதை வடிவழகி...
காவியத்தின் பண்புடையாள்

அவள் விரும்புவது..

கே.டி.ஆர்

☆ கோபுர மார்க் பன்னீர்
☆ சந்தனாதி, அரைக்கீரைவிதை தைலம்
☆ பொன்னாங்கண்ணி தைலம்
☆ ஜெகன்மோகனா பத்தி

K.T.R

வாசனாதி திரவியசாலை
விஜயபுரம், தஞ்சாவூர் மாவட்டம்.

ஊடல் படலம் இப்பொழுதே ஆரம்பமாகிவிட்டதா? பிணங்கிக்கொண்டு செல்லும் அணங்கின் பின்னால் ஓடிச் செல்வது ஆண்மைக்கு அழகல்ல என்று கருதுகிறாய் போலும்'' என்று பரிகசித்தான். நண்பன் அதற்கு ஏதும் பதிலளிக்காது நிற்பதை உணர்ந்ததும் இருளப்பன் திகைப்புடன் திரும்பி அவன் முகத்தை உற்று நோக்கினான். வீரத்தேவனின் களை பொருந்திய சுந்தரவதனம், சாம்பியிருந்தது. பரிகாசம் மிதந்தாடும் அவனது இரு கண்களும், கோபாவேசத்தில் சிவந்திருந்தன.

இந்த சம்பவம் நடந்து பதினைந்து தினங்கள் உருண்டோடி மறைந்தன. அன்று இரவு போஜனத்திற்குப் பிறகு, பவளவல்லி, தங்கள் இல்லத்தின், முற்றத்திலே, தரை மீது வந்து உட்கார்ந்து கொண்டாள். கூடத்திலே ஒரு கோரைப் பாய் மீது படுத்திருந்த பொன்னம்பலத் தேவர், குறட்டை விட்டுக் கொண்டு இன்பமானதொரு நித்திரையில் ஆழ்ந்திருந்தார். சில தினங்களாக அவரது அருமைப் பேத்தி பவளவல்லி கொள்ளிடத்துக்கு நீர் எடுத்து வரச் செல்லும் பழக்கத்தையே நிறுத்திவிட்டிருந்தாள். அதனால் தம் மனக்கவலை குறைந்த அவர் நிம்மதியாக நித்திரை செய்தார் போலும். இருண்ட வானத்திலே சிதறிக் கிடந்த எண்ணற்ற தாரகைகளை வேடிக்கை பார்த்த வண்ணம், முற்றத்தின் திறந்த வெளியில் அமர்ந்திருந்த பவளவல்லிக்கு உறக்கம் வர மறுத்தது. பாண்டிய நாட்டினின்று வந்தது முதல் நடந்த பல்வேறு காரியங்களையும் சிந்தித்துப் பார்த்தவண்ணம் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள். அருகே யாரோ நடமாடும் சப்தம் மெல்லியதாகக் கேட்கவே, திடுக்கிட்டு அச்சத்துடன் மிரண்டு கொண்டு எழுந்தாள். மாடத்திலே மினுக்கிட்டு எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கைக் கையில் எடுத்து, சப்தம் வந்த திக்கை நோக்கித் திரும்பினாள். கையில் கத்தியும், கம்புமாக, தாழ்வாரத்து இருளில் நின்று கொண்டிருந்த நான்கு முரட்டு மனிதர்களைக் கண்டதும், அவள் திகில் தாளாது, "தாத்தா! தாத்தா" என்று வாய் விட்டுக் கூப்பிட்டாள்.

எல்லாம் மின்னலைப் போல் நடந்தன. ''யாரது?'' என்று தேவர் அதட்டிக் கொண்டு தூக்கத்தினின்று எழுந்து உட்கார்ந்தார். மடார் என்று யாரோ கம்பால் அவர் தலை மீது ஓங்கி ஒரு போடு போடவே, பொன்னம்பலத் தேவர் மயக்கமுற்று சாய்ந்துவிட்டார்.

"ஐயோ! கள்ளர்கள்! வாருங்கள் வந்து உதவுங்கள்'' என்று கூக்குரலிட்டு அக்கம்பக்கத்தவர்களை உதவிக்கு அழைக்க பவளவல்லி முயற்சித்தாள். ஆனால், அவள் வாயைத் திறக்கவொட்டாது, அந்த முரடர்களில் இருவர், அவள் வாயில் துணியைப் பந்தாகச் சுருட்டி அடைத்து, அவளது கைகளையும், கால்களையும் பலமான கயிறுகளால் அசையவொட்டாது பிணைத்து விட்டார்கள். கொஞ்ச நேரத்தில் அவள் தான் ஒரு குதிரை வண்டியிலே பிரயாணம் செய்வதை உணர்ந்தாள். என்ன நேருமோ என்ற திகிலிலும், சோர்விலும் அவளுக்குத் தலை சுற்றியது. கண்கள் இருண்டன. பவளவல்லி முடிவில் மயக்கமடைந்து விட்டாள்.

மீண்டும் அவளுக்கு உணர்வு வந்தபொழுது, பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது. முன்பின் பார்த்திராத ஒரு பிரம்மாண்டமான அறையிலே, பஞ்சணை ஒன்றின் மீது தான் படுத்துக் கிடப்பதை அறிந்ததும், அதிசயத்துடன் எழுந்து உட்கார்ந்து, தன்னைச் சுற்றிலும் ஆராய்ந்து உற்று கவனித்தாள். சுவற்றின் மீது அழகிய சித்திரப் படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. முகம் தெரிவது போன்று பளபளவென்று அறையின் பளிங்குத் தரை மின்னியது. படுக்கை அருகே சிறிய முக்காலி ஒன்றின் மீது ஒரு வெள்ளி கூஜாவும், வெள்ளிக் கிண்ணம் ஒன்றும் தயாராக வைக்கப்பெற்றிருந்தன. படுக்கையினின்று எழுந்து நின்ற பவளவல்லி, கூஜாவைத் திறந்து அதற்குள் என்ன இருக்கிறதென்று ஆராயக் குனிந்தாள்.

சடக்கென்ற ஓசையுடன் கதவு திறக்கப்பெற்றது. அறைக்குள் மிகவும் பணிவாக நுழைந்தாள் ஒரு பணிப்பெண். ''அம்மா! சீக்கிரம் காலைக் கடனை முடித்துக்கொண்டு தாங்கள் தயாராகக் காத்திருக்க வேண்டும் என்று ராணி உத்தரவிட்டிருக்கிறார். காலை பூஜைக்குப் புறப்படுமுன், ராணி உங்களைக் காண இங்கே வருவார்'' என்றாள்.

பவளவல்விக்கு எல்லாம் ஒரே அதிசயமாக இருந்தது. ''ராணியா? என்னைக் காணவேண்டுமா!'' என்று பிரமிப்புடன் பதிலுக்குக் கேட்டாள். ''ஆமாம் அம்மா! ராணி இன்னும் கொஞ்சம் நேரத்திலே தங்களுடன் பேச இங்கு வருவார். தங்களுக்குத் தேவையான பொருள்களை உடனுக்குடன் கொண்டு வந்து கொடுக்கும்படி சின்னராஜா கட்டளை இட்டிருக்கிறார். தங்களுக்குத் தேவை என்ன என்று கூறினால்'' என்று பணிவுடன் நிறுத்தினாள் பணிப்பெண். தான் காண்பது யாவும் கனவல்ல, நனவுதான் என்று உணர்ந்து கொண்ட பவளவல்லிக்கு குழப்பமும் கலவரமும் அதிகரித்தன. ''எனக்கு ஒன்றும் தேவையில்லை. நீ இங்கிருந்து போய்த் தொலைந்தால் அதுவே பெரும் புண்ணியம்'' என்று சீறி விழுந்தாள் அலுப்பாக.

பற்பல எண்ணி, சஞ்சலத்துடன், பவளவல்லி தனியே அறை நடுவே நின்றுகொண்டிருந்த சமயம், அறையின் வெளித் தாழ்ப்பாளை யாரோ கழற்றும் சப்தம் கேட்டது. நெஞ்சு பட படக்க, மூச்சுத் தடுமாற, கிலியுடன் பவளவல்லி, கதவின் பக்கம் திரும்பினாள். வெள்ளைக் கலையுடுத்து, நெற்றியில் பட்டையாக விபூதியம், கழுத்திலே ருத்திராக்ஷ மாலைகளும் அணிந்த சிவப்பழமான கோலத்திலே உள்ளே வந்து நின்ற வயோதிக மாதை ஆச்சர்யத்துடன், வைத்த கண் வாங்காது அவள் விழித்துப் பார்த்தாள். உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை, ஏற இறங்க பவளவல்லியை அசட்டையாக உற்று நோக்கிவிட்டு, மங்களாம்பிகை அம்மாள் முடிவில் இடி இடியென்று தனது முத்துப்பற்கள் தெரியக் கோர நகை செய்தாள். ''குழந்தாய்! உன் ரஸனை உணர்ச்சி இவ்வளவு மட்டரகமாக இருக்குமென்று கனவிலும் கருதவில்லை. அனலுக்கு அபிஷேகம் செய்தது போன்று காணப்படும் இந்தக் கறுப்பி மேல்தான் உன் கருத்து லயிக்க வேண்டுமா! தாழம்பூவை நிகர்த்த மேனி நிறமும், தந்தப் பதுமைகள் போன்ற அழகும் உள்ள பெண்கள், நம் உறவினர்களிலே எண்ணற்றவர்கள் உன்னை மணக்கக் காத்திருக்கையில், இந்தப் பாண்டிய நாட்டுக் கறுப்புக் காட்டேரியைக் கண்டா நீ சித்தம் கலங்கிப் போனாய்?

வேடிக்கையாக இருக்கிறது, உன் ரஸனை உணர்ச்சி! ஒரு சமயம் நீ இவளைப் பட்டப் பகலில் உற்று கவனித்தது இல்லையோ என ஐயுறுகிறேன். இதோ வந்து நல்ல வெளிச்சத்திலே, பொன்னம்பலத் தேவரின் குலவிளக்கை, சற்று நிதானமாக உற்றுப் பார்'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டு நகைத்தாள்.

தனது சூழ்நிலையை ஒருவாறு ஊகித்துக் கொண்டுவிட்ட பவளவல்லி, அவமானத்தினால் உடல் குன்றிப் போனாள். அவள் நெஞ்சு பதை பதைத்தது. துயரம், தொண்டையை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் பொங்க, தரையைப் பார்த்துக் கொண்டு அவள் வாளா நின்றாள்.

"குழந்தாய் வீரத்தேவா! நீ உள்ளே வரலாம். அழகுதான் குறைவு என்றால் இந்தப் பாண்டிய நாட்டுப் பிசாசிற்குப் பணிவும் குறைவாகத்தான் இருக்கிறது. நான் வந்து காணப்போவதாக முன் கூட்டியே தெரிவித்தும், முகத்தைக் கூடக் கழுவாது, புளியமரத்துக் காட்டேரிபோல் தலைவிரிகோலமாக இவள் நிற்கும் கோலத்தை வந்து கவனி'' என்றாள் சீற்றத்துடன் மங்களாம்பிகை.

தரையையே பார்த்துக் கொண்டு நின்றாலும், பவளவல்லிக்கு அதுசமயம் உள்ளே அறைக்குள்ளே மெல்ல வந்த மனிதன் யார் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. கொள்ளிடக்கரைமீது நாவல் மரத்து மேடை மீது எவ்வளவோ நாட்கள், இன்பமாக வார்த்தையாடுகையில், நாணமுற்று தலையைக் குனிந்து தரையை நோக்கும் போதெல்லாம், கண்களால் கண்டு களித்த அழகிய அந்தப் பாதங்களை மீண்டும் காண நேர்ந்த போது, அவளது உள்ளமும் உடலும் இன்பத்தினால் சிலிர்த்து போயின.

"வீரத்தேவா! எனக்கு பூஜைக்கு நேரமாகின்றது. நான் செல்லவேண்டும். ஆனால் குழந்தாய்! நான் போகுமுன் ஒரு வார்த்தை சொல்லி விட்டுச் செல்ல விரும்புகிறேன். இதுநாள் வரை என் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டும் காரியங்கள் எத்தனையோ நீ செய்திருக்கிறாய்! ஆனால் இன்று நீ செய்துள்ள காரியத்தினால் உவகையிலே பூரித்துப் போய்விட்டேன் நான்.

"கர்வம் பிடித்த கிழட்டுப் பிணம் பொன்னம்பலத் தேவரின் குலவிளக்கை, எனக்கு பணிப்பெண்ணாகக் கொண்டு வந்து இங்கே நீ அடைத்து வைத்த காரியம் எத்தனை மகிழ்ச்சியைக் கொடுக்கிறது தெரியுமா? அந்தக் கிழட்டுப் பிணத்தின் தலையைக் காலால் இடறி உதைக்க வேண்டும் என்று வன்மம் கொண்டிருந்த எனக்கு, அவனது அருமைப் பேத்தியின் கூந்தலை என் கால்களில் போட்டு மிதிக்க சந்தர்ப்பம் கிடைத்தது மிகவும் ஆறுதலாக இருக்கிறது'' என்று உக்கிரமாகக் கூறிவிட்டு, மிகவும் மிடுக்காக, அறையினின்று அப்பால் சென்றாள்.

பவளவல்லியின் உடல் பயத்திலே கிடுகிடுவென்று நடுங்கியது. மழை தாரை போல் கண்ணீர் பிரவாகமெடுத்து கன்னங்களில் வழிந்து ஓடியது. தன் காதலன் முகத்தை இரக்கமாகப் பார்த்து இருகைகளையும் கூப்பி, "அன்பரே! தங்களை யொத்த வீர ஆண் மகன் செய்யும் காரியமா இது! தங்கள் மீது நான் கொண்டுள்ள களங்கமற்ற அன்பிற்கு இதுவா பரிசு? கொள்ளிடக் கரையில் என்னுடன் வார்த்தையாடுந் தோறும், அளித்த உறுதி மொழிகள் யாவும் கற்பனையா? என்னை இவ்வாறு அவமானப் படுத்துவது தர்மமாகுமா? யோசித்துப் பாருங்கள். வீரத்தேவரே! உங்களை நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் மீது அன்புகொண்ட பவளவல்லி என்ற உரிமையில் நான் வேண்டவில்லை. மானத்துடன் மதிப்பாக வாழ ஆசைபெறும் ஒரு பேதைப் பெண் என்ற முறையில் வேண்டிக்கொள்ளுகிறேன். என்னை ஏதும் துன்புறுத்தாது என் பாட்டனிடம் திரும்பக் கொண்டு சேர்த்து விடுங்கள்'' என்று கண்ணீருடன் விம்மி அழுது கொண்டு அவனது காலடியில் விழுந்தாள். (தொடரும்)

கலாசார தூதுகோஷ்டி

அகில சீன சமாதான கவுன்ஸிலின் அழைப்பின் மேல், ஒரு கலாசார தூது கோஷ்டி சென்னையிலிருந்து இம்மாதம் 18-ம் தேதி கிளம்பப் போகிறது. இந்த தூதுகோஷ்டியினர் நான்கு வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்களாம். இந்த தூதுகோஷ்டியின் தலைவர் டைரெக்டர் கே. சுப்ரமண்யம். இந்த தூது கோஷ்டியில் சினிமா உலகப் பிரமுகர்கள் பலர் இருப்பார்கள்.

சென்னை யாருக்கு?

(26.ம் பக்கத் தொடர்ச்சி)

கார் நக்ஷத்திர நடிகர் அர்ஜுனன் இல்லத்தை அடைகிறது. அங்கு ஏகப்பட்ட கூட்டம். என்ன என்று விசாரிக்க, நன்கொடை வாங்கிப் போக வந்திருக்கும் கூட்டம் என்று அவருக்குத் தெரிய வருகிறது. தின்னையா உள்ளே நுழைகிறார். அவரைப் பார்த்த அர்ஜுனன் தன்னால் இந்த சமயம் எதையும் செய்ய முடியாது என்று சொல்ல, தான் நன்கொடைக்காக வரவில்லை என்று, தான் வந்த காரியத்தையும் சொல்லுகிறார் தின்னையா. அர்ஜுனன் நன்கொடைக்காக வந்திருப்பவர்களை எல்லாம் அனுப்பி விட்டு, தின்னையாவிடம் வந்து உட்காருகிறார்.

"எந்தப் படத்திலும் நீங்கள் இந்த மாதிரிப் பாத்திரத்தைத் தாங்கி நடித்ததில்லை. இந்தப் பாத்திரத்தில் நடித்த பிறகு உங்களுக்கு மதிப்பும், வருமானமும் அதிகமாகும். இது என்னுடைய முதல் படம். உங்கள் முழு ஒத்துழைப்பும் தேவை. இந்தப் படத்தில் உங்களுக்குப் பணத்திற்குப் பதிலாக உங்களுக்குப் பிரியமான ஜில்லாவை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று மூச்சு விடாமல் கூறி முடித்தார் தின்னையா. அர்ஜுனன் சென்னை மீது ஆசைகொண்டு கனகச்சிதமாகப் பேசி. சென்னை உரிமையைக் கேட்க, இல்லை யென்று சொல்லாது தின்னையாவும் ஒப்புக்கொண்டு ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்படுகிறார்.

டைரெக்டர் நித்யகண்டம் பங்களாவில் போய் நிற்கிறது தின்னையாவின் கார். வராந்தாவில் ஏராளமான கூட்டம். அத்தனை பேரும் கதாசிரியர்கள் என்றும், கதை செலக்ஷனுக்காக வரச் சொல்லப்பட்டவர்கள் என்றும் விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிறார் தின்னையா. டைரெக்டர் நித்யகண்டம், 'சிகாரு'டன் வெளியே வரவே, தின்னையா தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். காத்திருந்த கதாசிரியர்களை அடுத்த வாரம் வரச் சொல்லிவிட்டு, தின்னையாவை உள்ளே அழைத்துச் செல்லுகிறார் நித்யகண்டம். தான் வந்த காரியத்தைத் தின்னையா

மலபார் புக்கே டால்கம் பௌடர்

பிரபல ஜெர்மானிய நிபுணர்களுடன் கலந்து பல வருஷ காலம் ஆராய்ச்சி செய்த பின்பே இந்த பௌடரை நாங்கள் சிறந்த முறையில் தயாரிக்கிறோம்

இதன் நீடித்து நிற்கும் நறுமணம் யாவரையும் கவர்ந்து விடும்

இது உங்கள் சருமத்திற்கு குளிர்ச்சியையும், வழவழப்பையும், மினுமினுப்பையும் கொடுக்கிறது.

RATHOD TRADING Co.,

21, Tholasingam St,

Sowcarpet :: Madras—1.

இலவச சாம்பிளுக்கு இந்தக் கூப்பனை வெட்டி, விலாஸத்துடன் அனுப்பவும்.

பெயர். ....

விலாஸம் ....

....

"GUNDOOSI"

சொல்லவே, தனக்கு அதுவரையில் அறு பது படங்கள் இருப்பதாகவும், தன்னுடைய மேற்பார்வை மட்டுமதான் தர முடியுமென்றும், தன் அஸிஸ்டெண்டு தான் வேலை செய்ய முடியுமென்றும் மளமளவென்று கூறி முடிக்கிறார் நித்ய கண்டம்.

"அதெல்லாம் முடியாது, ஸார்! இந்தப் படத்திற்கு நீங்களே இருந்து எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டு, பரிபூரணமாக வேலை செய்ய வேண்டும். இது என்னுடைய முதல் படமாக இருப்பதால் உங்களுக்குப் பணத்திற்குப் பதிலாக ஏதாவது ஒரு ஜில்லாவைத் தருகிறேன்" என்று தின்னையா கூறிய வார்த்தைகள் டைரெக்டரை யோசனை செய்யும்படி வைத்தன.

"நாளைக்குச் சொல்லுகிறேனே" என்றார் டைரெக்டர்.

"இன்று நிறைந்த அமாவாசை. ஒப்பந்தம் இன்றைக்கே ஆகவேண்டும்" என்று நெருக்கிப் பிடித்தார் தின்னையா. சென்னைமீது கண்ணை வைத்த டைரெக்டர், "நான் வரவேண்டுமென்றால் சென்னையைத் தரவேண்டும்" என்றார். தின்னையாவும் மறுக்காது கொடுத்து விட்டார். ஒப்பந்தம் முடிகிறது. பயணம் சொல்லிக்கொண்டு, அங்கிருந்து கிளம்பி நேராக கதாசிரியர் நஞ்சப்பா வீட்டிற்குப் போனார் தின்னையா.

நஞ்சப்பா வீட்டின் கதவும், ஜன்னல்களும் மூடப்பட்டிருந்தன. ஆனால், உள்ளே கோலாகலமான சத்தம் கேட்டது. தின்னையா கதவைத் தட்டவே, "யார்" என்ற குரல் உள்ளே இருந்து ஒலித்தது.

"நான்தான்புரொட்யூஸர் தின்னையா" என்றதும், கதவு திறக்கப்பட்டது. நஞ்சப்பா தின்னையாவை வரவேற்றார்.

"இப்போது என்ன கதை எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார் தின்னையா.

"'ரொமான்ஸ்' என்ற கதையைத் தழுவி எழுதி வருகிறேன்" என்று பதில் அளித்தார் நஞ்சப்பா.

"மிஸ்டர் நஞ்சப்பா! நீங்கள் இதுவரை எழுதிய கதைகளை எல்லாம் மிஞ்ச வேண்டும் என் படத்திற்கு நீங்கள் எழுதும் கதை. நான் எடுக்கும் படங்களுக்கெல்லாம் கதை, வசனம், பாட்டு நீங்களே எழுதவேண்டும். இது ஆரம்பப் படமாக இருப்பதால் அதிகமாக செலவிட முடியாது. 'மணி மார்க்கெட்' டைட்டாக இருப்பதால் தங்களுக்கு நான் பணம் தர முடியாது. அதற்குப் பதிலாக ஒரு நல்ல ஜில்லாவாகக் கேளுங்கள். உங்களுக்கு மட்டும் தருகிறேன்." என்று மொழிந்தார் தின்னையா.

"நான் உள்ளூரில் இருப்பதால் எனக்குச் சென்னை வேண்டும்" என்றார் கதாசிரியர் நஞ்சப்பா.

"கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாத குணம் படைத்தவன் நான். ஆகையால் உங்கள் ஆசை கெடாது சென்னையைத் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று உரைத்து, ஒப்பந்தத்தையும் முடித்துக் கொண்டு விடுகிறார் தின்னையா.

ஏறினார் காரில் தின்னையா. பறந்தது கார் 'டுலெட் கபே'யை நோக்கி. கபேயில் சென்று அதன் முதலாளியைச் சந்தித்து, தன் படம் முடியும் வரையில் காப்பி, டிபன், சாப்பாடு சப்ளை செய்ய வேண்டுமென்றும், அதற்காக அவர் விருப்பப்படியே சென்னை அவருக்குக் கொடுப்பதாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்.

படம் ஷூட்டிங் ஆரம்பமாயிற்று. எல்லோருடைய ஒத்துழைப்பையும் கொண்டு, தின்னையா மூன்று மாதத்திற்குள் படத்தை முடித்துவிட்டார். "நிலைக்காது" என்று படத்திற்கு நாமகரணம் சூட்டப்பட்டது. எல்லோரும் உரிமை மோகங் கொண்டு, மற்ற கம்பெனிகளுக்குச் சாக்குப் போக்குச் சொல்லி, தங்கள் முழுத் திறமையையும் நேரத்தையும் செலவழித்து இடைவிடாது வேலை செய்ததால் படம் மூன்றே மாதத்தில் முடிவது சாத்தியமாக இருந்தது. ஒவ்வொருவரும் சென்னை தமக்குக் கிடைத்திருப்பதால், ஒரு லட்சத்துக்குக் குறையாத வருமானம் வரப்போவதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர்.

படம் முடிவடைந்ததும், படத்தில் வேலை செய்த அனைவருக்கும் ரதிதேவி வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. பூ மாலைகளையும், புகழ் மாலை

புளிமூட்டை ராமஸ்வாமி, முத்துலக்ஷ்மி, அஞ்சலிதேவி—இவர்கள் சம்பந்தப்பட்ட இக் காட்சியை ஜெயந்தி புரொடக்ஷன்ஸார் ''பொன் வயலி''ல் காணலாம்.

களையும் ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொண்டனர்.

முதன் முதலில் பாங்க் ஏஜண்ட் பேச எழுந்தார். ''நண்பர்களே! இந்தப் படத்திற்கு நான் பணப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, இடையூறு எதுவும் நேராமல், நல்ல பெயர் வாங்கிக்கொண்டேன். ஒவ்வொருவரும் இந்தப் படத்திற்காகக் கொடுத்த ஒத்துழைப்பைப் போல் ஒவ்வொரு படத்திற்கும் கொடுக்க வேண்டும். இந்தப் படத்திற்கு பணம் உதவி செய்ததற்காக எங்கள் பாங்குக்கு சென்னை நகர உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த சமயத்தில் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்'' என்று பேசி முடித்து விட்டு உட்கார்ந்தார்.

'சென்னை தனக்கு' என்று எண்ணிக் கொண்டிருந்த ஒவ்வொருவரும் மிரள மிரள விழித்தனர். ''நான் இதை ஆட்சேபிக்கிறேன். சென்னை எனக்கு'' என்றார் 'டு லெட் கபே' முதலாளி.

உடனே டைரெக்டர் எழுந்து, ''நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், இந்தப் படம் முடிப்பதற்கு நான் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. ஆகையால் எனக்குள்ள உரிமையை அறியாது நண்பர்கள் இருவரும் பேசியதைப் பற்றி நான் வருந்துகிறேன். சென்னை நகர் எனக்கே உரியது'' என்று பேசிவிட்டு உட்கார்ந்தார்.

இதைக் கேட்டதும் கதாநாயகி எழுந்து, ''பல கஷ்டங்களை அனுபவித்தவள் நான். ஆகையால், சென்னை எனக்கே தவிர வேறு எவருக்குமில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றாள். அவ்விதமே கதாநாயகனும், கதாசிரியரும்,

ஸ்டுடியோ முதலாளியும் உரிமை முழக்கம் செய்தனர்.

பாங்க் ஏஜண்ட் எழுந்து, "தயவு செய்து கேளுங்கள். முதலாவதாக சென்னை யார் ஒருவருக்கு உரிமை எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவருக்கே தவிர, நீங்கள் ஒவ்வொருவரும் 'சென்னை எனக்கே, சென்னை எனக்கே' என்று நடுத் தெருவில் நின்று கூச்சலிடுவதில் பிரயோசனமில்லை. இதோ பாருங்கள் என்னுடைய ஒப்பந்தம்" என்றார்.

எல்லோருக்கும் கோபம் மேலிட, தின்னையாவை ஆளுக்கு ஒரு பக்கம் அடிக்க ஆரம்பித்தனர். "நான் இன்னும் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்த போதிலும் கேட்பவருக்கு இல்லை என்னுமல் கொடுப்பதே என் கொள்கையாகும்" என்று அமைதியாக மொழிந்தார் தின்னையா.

இதற்குள் ஹோட்டல் முதலாளி, 'சென்னை யாருக்கடா! சென்னை யாருக்கு- அயோக்கியப் பயலே; இருப்பது ஒரே சென்னை. அதை எத்தனை பேருக்குக் கொடுப்பது" என்று ஆத்திரமேலிட்டவராய் அறைந்தார். தின்னையாவின் முன் பற்கள் நான்கு உதிர்ந்தன. வாயில் இரத்தம் கொட்டியது. இரத்தத்தைக் கண்ட ஏஜண்ட் எழுந்து ஓடி போலீஸுக்குத் தகவல் கொடுத்தார்.

இரண்டு லாரிகள் நிறைய போலீஸ் படை வந்து சேர்ந்தது. ரதிதேவியின் பங்களாவிற்குள் போலீஸ் லாரிகள் சென்று எல்லோரையும் ஏற்றிக் கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றன. போலீஸ் ஸ்டேஷனில் ஒவ்வொருவரும் 'சென்னை எனக்கே' என்று இன்ஸ்பெக்டரிடம் தங்கள் தங்கள் ஒப்பந்தத்தைக் காண்பிக்க, மோசடி கேஸ் என்று பதிவு செய்து, தின்னையாவை உள்ளே அடைத்து விட்டு, மற்றவர்களை நீதி மன்றத்திற்கு வரும்படி சொல்லி அனுப்பினார்கள் போலீஸார். கடைசிவரையில் சென்னையை விடமாட்டேன் என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டு போனார்கள்.

மார்ச் மாதம் 28ம்தேதி நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. "தன் கையில் பணமில்லா திருக்கும் போது பிறரை மோசம் செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் போலிக் கம்பெனியை ஆரம்பித்து, மற்றத் தொழிலாளிகளைக் கேவலப் படுத்தியது முதல் குற்றம். ஒருவருக்கு ஏற்கெனவே எழுதிக் கொடுத்த சென்னை நகர விநியோக உரிமையை மற்றவர்களுக்கும் எழுதிக் கொடுத்து ஏமாற்றித் தன் காரியத்தை சாதித்துக் கொண்டது இரண்டாவது குற்றம். முதல் குற்றத்திற்கு ஐந்து வருடமும், இரண்டாவது குற்றத்திற்கு ஆறு வருடமும் தின்னையா என்பவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது. சட்டப்படி சென்னை நகர விநியோக உரிமை முதன் முதலில் மூலதனம் முடக்கிய 'பெனிபிட் பேங்கு'க்கே சேர வேண்டியது' என்று தீர்ப்புக் கொடுத்தார் நீதிபதி.

தின்னையாவை போலீஸார் விலங்கிட்டு லாரியில் ஏற்றிக் கொண்டு போகும் போது அவர் கலகலவென்று சிரித்து மற்றவர்களைப் பார்த்து, "சென்னை யாருக்கு? யாருக்கப்பா சென்னை!" என்று கேட்டுக் கொண்டே, பிலிம் பெட்டிகளை ஏற்றிக் கொண்டு போகும் பாங்கர் காரைச் சுட்டிக் காட்டி, "சென்னை யாருக்குச் சொந்தமோ, அவர்கள் அதோ கொண்டு போகிறார்கள். 'சென்னை எனக்கு, சென்னை எனக்கு' என்று இனிமேல் கூச்சல் போடாதீர்கள்" என்று சொன்னார்.

"வாழப் பிறந்தவளி"ல், வில்லன் வேஷத்திற்கென்றே பிறந்த பாலய்யா.



ரோஹிணி பிக்சர்ஸார் தமிழிலும் தெலுங்கிலும் தயாரித்துவரும் "புரடக்ஷன்-நெ. 9" படத்தில் பிரதம பாகத்தில் நடிக்கிறார் இந்த ஜமுனா.

"வாழப் பிறந்தவள்" (டி. ஆர்.) ராஜகுமாரியின் ஒரு தோற்றம் இது.

டைரெக்டர் பிரஸாத்

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

றன. "பரதேசி" படம் வெற்றியடைய வில்லை யெனினும், படத்தின் தரம் உயர்ந்ததாக அமைந்திருப்பதாய் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

கிருஷ்ணு பிக்சர்ஸாரின் "மருமகள்" தமிழ்-தெலுங்குப் படங்களும், "தாசி" தெலுங்குப் படமும் வெவ்வேறு நபர்களின் டைரெக்ஷனில் தயாரிக்கப்பட்டவை என்றாலும் அப்படங்கள் இவரது மேற்பார்வையிலேயே தயாரிக்கப்பட்டவை. அப்படங்களை முறையே டைரெக்ட் செய்த யோகானந்தாவும், ரங்கநாத தாஸும் இவரிடம் உதவியாளராக இருந்து பயிற்சி பெற்றவர்களே. "பல்லட்டூரு" தெலுங்குப் படத்தை டைரெக்ட் செய்த டி. பிரகாஷ் ராவும் இவரது சிஷ்யர்களில் ஒருவர் தான். ராஜ்யம் பிக்சர்ஸாரது அடுத்த படமும் இவரது மேற்பார்வையிலேயே தயாராகுமாம். டைரெக்ஷனைவிட மேற்பார்வை என்பது இன்னும் பொறுப்பான வேலை என்பதை அவர் உணர்ந்து பணியாற்றுகிறுர்.

பிரஸாத் தற்பொழுது, பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸாரின் "பெற்ற மனம்" தமிழ்—தெலுங்குப் படங்களையும், மனோஹர் பிக்சர்ஸின் "மனோஹரா" தமிழ்-தெலுங்கு-ஹிந்தி மூன்று பாஷைப் படங்களையும் டைரெக்ட் செய்வதில் ஈடுபட்டிருக்கிறுர். "பெற்ற மனத்"தில் ஒரு முக்கிய கதாபாத்திரமாக நடிக்கவும் செய்கிறுர்.

இவை தவிர, விஜயாவின் "கல்யாணம் பண்ணிப் பார்" ஹிந்திப் படத்தையும் டைரெக்ட் செய்ய ஒப்பந்தம் இருக்கிறது. இவ்வளவு வேலைகளை வைத்துக் கொண்டிருக்கும் அவர் சோம்பேறியாக இருக்க முடியுமா? சதா சுறுசுறுப்பாகவே இருக்கிறுர். நாள் பூராவும் வாஹினிக்கும் நெப்டியூனுக்கும் பறந்து கொண்டிருக்கிறுர். அவகாசம் கிடைக்கும்பொழுது, படங்களை மேற்பார்வையிடும் இவர், தமது தோட்டத்தையும் மேற்பார்வையிடுகிறுர்.

பிரஸாத்துக்கு இரண்டு மகன்களும் ஒரு பெண்ணும் இருக்கின்றனர். அவரது மூத்த மகன் ஆனந்த், பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸின் "பெற்ற மனத்"தில் தந்தையிடமே உதவியாளராக இருந்து வருகிறுர். மற்ற இருவரும் கல்வி கற்று வருகின்றனர்.

பிரஸாத்தின் பங்களாவில், வரவேற்பு அறையில், ஒரு அலமாரியில் பள பள வென்று மின்னிக் கொண்டு பல வெள்ளிக் கோப்பைகள் காட்சியளிக்கின்றன. அனைத்தும் அவருடைய பெயருக்கும் புகழுக்கும் கிடைத்த சன்மானங்கள் தாம். "துரோகி". "கல்யாணம் பண்ணிப் பார்" போன்ற படங்களின் வெள்ளி விழாக் கொண்டாட்ட சமயம் பலரால் அவருக்குப் பரிசளிக்கப்பட்டவைகள்.

அவர் வெள்ளை உள்ளம் படைத்தவர் என்பதை அவருடன் பழகிய சில நிமிஷங்களுக்குள்ளேயே நான் தெரிந்து கொண்டேன். "என் தந்தை இன்ஸால் வெண்ட் பேர்வழி" "நான் 'கேட் கீப்பராக' வேலை பார்த்தேன்"—என்று இப்படி யெல்லாம் உண்மையை ஒளிக்காது கூறும் மனிதரைப் பற்றிப் பின் எப்படித் தான் நினைப்பது? பிரஸாத் ஒரு டைரெக்டர்; நடிகர்; காமிராமென்: இவைகளுடன் 'எடிட்டிங்' வேலையிலும் பயிற்சி உள்ளவர்.

"படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் கதைதான். படத் தொழிலில் இன்று ஏற்பட்டுள்ள மந்த நிலைக்கு, மணி மார்க்கெட் ஓரளவு நெருக்கடியாக இருப்பது காரணமாக இருந்தாலும், அதிகமான படங்கள் வெளி வருவதே முக்கிய காரணம். படங்களை 'டப்' செய்வது நல்லதல்ல."—இவைகள் பிரஸாதின் மனப்பூர்வமான அபிப்பிராயங்கள் ஆகும்.

கடைசியாக, வழக்கம்போல "இந்தத் துறையில் உங்கள் லட்சியம் என்ன?" என்று கேட்டேன். "உபயோகமான நல்ல படங்களைத் தயாரிக்க விரும்புகிறேன்" என்று கூறினுர் அவர். இதுவரை அவர் டைரெக்ட் செய்து வெளி வந்துள்ள படங்களில் அந்த லட்சியத்தை நாம் ஓரளவு காண முடிவதிலிருந்து அது அவரது மனப்பூர்வமான எண்ணம் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

நாட்டிய முத்திரைகள்

அ. ரா. கிருஷ்ணமூர்த்தி

[சென்ற மாதத் தொடர்ச்சி]

அபிநய தர்ப்பணத்தில் விவரிக்கப்பட்டுள்ள இருபத்தி எட்டு அசம்யுதக் கைகளிலும், நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப் பட்டுள்ள இருபத்தி நான்கு அசம்யுதக் கைகளிலும் 23 கைகளின் பெயர்கள் பொதுவாக உள்ளன. அபிநய தர்ப்பணத்தில் உள்ள அர்த்த பதாகை, மயூரம், சந்திர கலா, சிம்ஹ முகம், திரிசூலம் முதலிய ஐந்தும் நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படவில்லை; ஊர்ணநாபம் என்று வேறு ஒரு முத்திரை இருக்கிறது.

சம்யுத ஹஸ்த (இரட்டைக் கைகள்) வரிசையில் அபிநய தர்ப்பணத்தில் அஞ்சலி, கபோடம், கர்கடம், ஸ்வஸ்திகம், தோளம், புஷ்பபுடம், உத்ஸங்கம், சிவலிங்கம், கடகவர்த்தனம், கர்த்தரிஸ்வஸ்திகம், சகடம், சங்கம், சக்ரம், சம்புடம், பாசம், கிலகம், மத்ஸ்யம், கூர்மம், வராஹம், கருடம், நாகபந்தம், கட்வம், பெருண்டம், அவஹித்தம் என இருபத்தி நான்கு ஹஸ்தங்களும் இரண்டு கைகளாலும் காட்டப்பட வேண்டியவை என சொல்லப் பட்டிருக்கிறது. அவஹித்தம் என்ற கடைசி முத்திரையைத் தவிர்த்து, சிலர், 'மொத்தம் 51 முத்திரைகளே உள்ளன' என்றும் சொல்கின்றனர். இரட்டைக் கை முத்திரைகளெல்லாம் அநேகமாக ஒற்றைக் கைகளால் செய்த முத்திரைகளையே, சேர்த்து செய்வது போல வருகின்றன.

பதாகைக் கைகளை உள்ளங்கைகள் பதியும்படி ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்து (கைகூப்பி வணக்கம் தெரிவிப்பது போல்) பிடித்தால் **அஞ்சலி** முத்திரையாகிறது. வணக்கம் செலுத்துவது, என்ற பொருள்பட வரும் இடங்களில் இந்த முத்திரையை உபயோகிக்க வேண்டும். இந்த ஹஸ்தத்தை தலைக்கு மேல் (சிரமேற் குவித்து) காட்டினால் தேவதைகளை வணங்குவது என்றும், முகத்துக்கு நேராகக் காட்டினால் குருவுக்கு வணக்கம் செலுத்துவது என்றும், மார்புக்கு நேராகக் காட்டினால் பிராமணனுக்கு வணக்கம் செலுத்துவது என்றும் பொருள்படும். தாழ்மை, தாளத்தை கைதட்டி அளவிடுதல். தியானம் முதலியவைகளையும் இம் முத்திரை குறிக்கும்,

கைகளின் அடி, மேல், பக்கங்கள் மட்டும் ஒன்றாகச் சேரும்படி வைத்தால் **கபோட** முத்திரையாகும். வணக்கம் செலுத்துதல், மூத்தவர்களுடன் சம்பாஷித்தல், பிரமாணம் செய்தல், சொல்வதை தாழ்மையோடு ஆமோதித்தல், பனை. பாக்கு, தென்னை முதலிய மரங்கள், வாழைப்பூ, குளிர்ச்சி, தேன் முதலியவைகளை இந்த ஹஸ்தத்தால் குறிக்கலாம்.

இரு கைகளின் விரல்களையும் வரிசையாகக் கோர்த்துக் கொண்டால் **கர்கட** முத்திரையாகும். (விரல்கள் வெளிப்புறமாக இருப்பதே நல்லது.) தொகுதி, பருமன், சங்கு ஊதல், கைகளை முறுக்குதல், நீட்டுதல், மரக் கிளையை கீழே இழுத்தல், கைகால்களை விறைப்பாக நீட்டுதல், கொட்டாவி விடுதல், கனமாக மூச்சை இழுத்தல், நண்டு முதலியவைகளை இம் முத்திரை குறிக்கும்.

இரண்டு பதாகைக் கைகளை மணிக்கட்டில் ஒன்றாகச் சேர்த்தால் **ஸ்வஸ்திகம்**

என்ற ஹஸ்தமாகிறது. (சிலர் இந்த முத்திரைக்கு ஒரு கையின் நுனி மேல் நோக்கியும், மற்றொரு கையின் நுனி கீழ் நோக்கியும் இருக்கவேண்டும் என்பர்.) முதலையைக் குறிக்க இந்த முத்திரை உபயோகப்படும். சச்சரவு, புகழ்தல், பயந்த சுபாவமுடைய பேச்சுகள் முதலியவைகளையும் இந்த முத்திரையால் குறிக்கலாம்.

நாட்டிய ஆரம்பத்தின் போது இரு பதாகைக் கைகளைத் துடைகளின் மேல் வைத்துக் கொள்வது தோள ஹஸ்தம் எனப்படும். தோல்வி, குடிமயக்கம், விலாஸம் முதலியவைகளை இம் முத்திரையால் குறிக்கலாம்.

இரு சர்ப்ப சிரஸ்க்கைகளை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகச் சேர்த்துப் பிடித்தால் புஷ்பபுட ஹஸ்தமாகிறது. தேவதைகளுக்கு ஆலத்தி ஆராதித்தல், நீர் அருந்தல், பழங்கள் உண்ணல், தேவதைகளுக்கு சமர்ப்பித்தல், மாலை நேரம், சந்தியா அர்க்ய தானம், மந்த்ர புஷ்பம், பழங்கள், நீர் முதலிய அர்த்தம் தரும் பதங்களை இந்த முத்திரையால் விளக்கலாம்.

மிருக சீர்ஷக் கைகளை மறு கைகளின் தோள்களுக்கு நேராகப் பிடித்தால் உத்ஸங்க ஹஸ்தமாகிறது. தழுவுதல், கைகளின் அணிகலங்கள், இன்னும் இதுபோன்ற ஆபரணங்கள், சிறுவர்களின் படிப்பு, நல்லொழுக்கம், அடக்கம் முதலியவைகளை இம் முத்திரையால் குறிக்கலாம்.

இடது கையால் அர்த்த சந்திர முத்திரை பிடித்து, அதன் மேல் வலது கையால் சிகர முத்திரையைப் பிடித்தால் சிவலிங்கத்தைக் குறிக்கும் சிவலிங்க ஹஸ்தமாகிறது.

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



"சத்திய சோதனை"—ஆறுதலளிக்கும் படம்

கர்ணாமிருதமான பாட்டுகள்

விடாமல் விருந்துச் சாப்பாடே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு நடுவில் ஒரு நாள் கிடைக்கும் பத்தியச் சாப்பாடுபோல் இருக்கிறது "சத்திய சோதனை". சமீப காலமாக சமூகப் படங்களையே திரும்பத் திரும்பப் பார்த்து வந்த ரஸிகர்களுக்கு "சத்திய சோதனை" ஆறுதல் அளிக்கும் படம்.

எச். எல். என். சிம்ஹா எழுதியுள்ள கதை இது. புராணம், கிராமியம் இரண்டையும் கலந்து இக் கதையைப் புனைந்திருக்கிறார். கதை சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. இறுதியில் விஜயன் பாம்பு கடித்து மரணமடைவதைத் தவிர்த்திருக்கலாம். 'புத்தி திருந்திய விஜயனுக்கு அதுதானா வெகுமதி?' என்று கேட்கவே தோன்றுகிறது. வசனத்தை பி. டி. சம்பந்தமும், எஸ். டி. சுந்தரமும் எழுதியிருக்கிறார்கள். வசனம் படம் முழுவதும் சர்வ சாதாரணமாகத்தான் இருக்கிறது. "உஷார்", "நிர்த்தோஷி" போன்ற தமிழல்லாத பதங்களைத் தவிர்த்திருக்கலாம்.

இப் படத்திற்கு ஐந்து பேர்கள் பாட்டுகளை எழுதி யிருக்கின்றனர். எல்லாமே கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. கர்நாடக மெட்டுப் பாட்டுகள் இப் படத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. டி. எஸ். பகவதி பண்டரிபாய்க்காகப் பாடியுள்ள அந்த இரண்டு பாட்டுகளும் கர்ணாமிருதமாய் இருக்கின்றன.

சத்யமாக ஹொன்னப்பா நடித்திருக்கிறார். அவரது தோற்றத்தில் ஒரு கவர்ச்சியோ, நடிப்பில் ஒரு உணர்ச்சியோ எதுவுமில்லை. அவர் பாடும் பாட்டுகளும் இனிமையாக இல்லை. (வில்லன்) விஜயனாக வரும் டி. எஸ். பாலய்யா இப்படத்தில் சோபிக்கவில்லை. காரணம், கதாபாத்திரம் அவருக்கு ஏற்றதல்ல. சாது சதானந்தராக, குப்பி வீரண்ணா வந்து போகிறார் அவ்வளவுதான்.

ஹாஸ்ய பாகத்தைப் பூர்த்தி செய்ய வரும் ராதா கிருஷ்ணன், பங்காரு இருவரது நடிப்புமே சுகமில்லை. அவர்களுக்கு அதிக சந்தர்ப்பமும் இல்லை.

சாந்தியாக நடிக்கும் பண்டரிபாய் நன்றாக நடித்திருக்கிறார். இதுதான் அவர் நடிக்க ஆரம்பித்த முதல் தமிழ்ப் படம். ஆகவே, தமிழ் உச்சரிப்பு சில இடங்களில் சரியாக இல்லை. பவானியாக ஜெயம்மா நன்றாகவே நடித்திருக்கிறார். அவரது தோற்றம்தான் சகிக்கவில்லை. அவருக்கு செய்யப்பட்டுள்ள மேக்-அப் அவரை பயங்கரமாக மாற்றி விட்டிருக்கிறது. இப்படத்தில் கிருஷ்ணகுமாரியின் நடிப்புத் திறமை குறித்து ஒன்றும் சொல்வதற்கில்லை.

டைரெக்ஷன் சர்வ சாதாரணம். பல இடங்களில் விறுவிறுப்பே இல்லை. கதையின் காலமோ புராண காலம். ஆனால் படத்தில் பவர் லைட் வருகிறது; கிராப் புத் தலையர்கள் வருகிறார்கள். கடைசியில் விஜயன் மரணத்தைக் குறித்து யாருமே கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. விஜயன் சித்திரம் எழுதும்போது, பலகையில் சாந்தி ஊஞ்சலாடும் காட்சியைக் காட்டியிருப்பது நல்ல அம்சம். ஆனால் அவன் படம் அப்படி வரையாது வேறு விதமாக வரைவதுதான் தவறு. இப்படத்தின் நீளம் 14,368 அடிகள்தான் என்பதும், ஆபாசம் எங்குமே இல்லை என்பதும் இப்படத்தில் குறிப்பிடத்தக்க சிறந்த அம்சங்கள்.

ஸ்டுடியோவைப் பொருத்த ஒளி-ஒலிப் பதிவு, இவைகள் குற்றம் சொல்ல முடியாத முறையில் இருக்கின்றன. காட்சி ஜோடனைகளும் நன்றாக இருக்கின்றன. மொத்தத்தில் "சத்திய சோதனை" ஆபாசமில்லாத சாதாரணப் படம்.

—"ஜாம்பவான்"

ஸ்வஸ்திக முத்திரைக்குப் பதாகைக் கைகளைக் காட்டுவது போல், இரு கைகளாலும் கடகாமுக முத்திரையைக் காட்டினால் **கடகவர்த்தன** ஹஸ்தமாகும். முடிசூட்டு விழா, தொழுதல், திருமணம், ஆசிர்வதித்தல், விசாரம், வீர ரசம், சமாதானப் படுத்துவது, முதலியவைகளை இம் முத்திரை குறிக்கும்.

இதைப் போலவே கர்தரி முக முத்திரைகளை இரு கைகளாலும் காட்டினால் மரங்கள், மரக் கிளைகள், குன்றுகளின் உச்சி முதலியவைகளைக் குறிக்கும் **கர்தரி ஸ்வஸ்திக** முத்திரையாகிறது.

பீனா ராய்

[30ம் பக்கத் தொடர்ச்சி]

பால்:—ஹாலிவுட்டில் நீங்கள் சந்தித்த நக்ஷத்திரங்கள் யார் யார் என்று சொல்ல முடியுமா?

பீனு:—ஆன் ஷெரிடன், க்ளென் கார்ட், ஸ்டீவர்ட் க்ராங்கர், ஜீன் ஸிம்மன்ஸ், ஸூஸன் ஹேவர்டு, க்ரீர் கார்ஸன், டேவிவ் டேர் ஆகியவர்கள். இவர்களை யெல்லாம் விட என் அபிமான நக்ஷத்திரத்தைச் சந்தித்திருந்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

பால்:—அது யார், உங்கள் அபிமான நக்ஷத்திரம்?

பீனு:—இன்க்ரிட் பெர்க்மென்.

பால்:—இந்திய ஸ்திரீகளின் உடையான புடவையை ஹாலிவுட்டில் மிகவும் புகழுகிறார்கள் என்பது உண்மைதானா?

பீனு:—ஆம், புடவை மட்டுமின்றி ரவிக்கையையும் கூடத்தான்.

பால்:—உடைகளில் உங்களுக்குப் பிடித்தவை எவை? என்ன நிறம்?

பீனு:—எனக்குப் புடவையும் ரவிக்கையும் பிடித்த உடைகள். நிறத்தைப் பொறுத்த வரை வெள்ளையும் சிவப்பும் எனக்குப் பிடித்தவை.

பால்:—உங்களுக்கு எந்த மாதிரி கதா பாத்திரமாக நடிப்பதில் விருப்பம்?

பீனு:—நடிகர் என்றால் தம் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கத் தெரிய வேண்டும். ஆனால் நான் உணர்ச்சியான, சோக பாகங்களை விரும்புகிறேன்.

பால்:—நீங்கள் இந்தத் தொழிலிலிருந்து விலகி விட நினைப்பதாகக் கூறப்படுவது உண்மையா?

பீனு:—கிடையாது. ஏனெனில் நடிப்பு என்னுடன் ஒன்றாகி விட்டது.

பால்:—மணமான ஸ்திரீ படங்களில் நடிக்க வேண்டுமா?

பீனு:—ஒரு நடிகை அவள் கல்யாணத்திற்குப் பிறகு தான் நன்கு நடிக்கிறாள் என்பது என் அபிப்பிராயம். அது தொழிலுக்கே ஒரு நல்ல அறிகுறி என்று நிச்சயமாகக் கூறுவேன்.

பால்:—பிரேம்நாத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பீனு:—பால்ராஜ், உங்கள் கேள்வியின் அர்த்தம்?

பால்:—அவரிடம் என்னென்ன சிறந்த குணங்களை நீங்கள் காண்கிறீர்கள்?

பீனு:—ஓஹோ! அவர் ஒரு இலட்சிய கணவர் என்பதை நான் கண்டு கொண்டேன்.

பால்:—காதல் மணத்தையும் அதன் வெற்றியையும் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பீனு:—மணம் சந்தோஷகரமாக இருப்பது பரஸ்பரம் காதலர்களிடை உள்ள ஆழ்ந்த காதலைப் பொறுத்திருக்கிறது.

பால்:—நீங்கள் இப்பொழுது எங்கு வசிக்கிறீர்கள்?

பீனு:—பம்பாயில் தான்.

பால்:—அது எனக்குத் தெரியும்; ஆனால் எங்கே என்று கேட்கிறேன்.

பீனு:—என் கணவருடன்.

பால்:—அவர் இருப்பிடம் எங்கே?

பீனு:—சாகர் மந்திர், சிவாஜி பார்க், பீச்.

பால்:—படப் பிடிப்பு வேலை இல்லாத சமயங்களில் உங்களுக்குப் பொழுது எப்படிப் போகிறது?

பீனு:—என் கணவருக்கு சிசுருஷைகள் செய்வேன், வீட்டு வேலைகளைக் கவனிப்பேன்.

பால்:—அவகாசம் கிடைக்கும் போது டென்னிஸ் ஆடவோ, நீச்சலுக்கோ நீங்கள் போவதில்லையா?

பீனு:—ஏன், சமயம் கிடைக்கும்போது நான் விளையாடப் போவது உண்டு.

பால்:—வீட்டில் சமையற்காரன் இருக்கிறான் என்று நினைக்கிறேன்.

பீனு:—ஓ! ஒருவன் இருக்கிறான்; எனக்கு சந்தர்ப்பமே கிடைப்பதில்லை என்று வருத்தமாகக்கூட இருக்கிறது.

பால்:—பிரேம்நாத் சைவ உணவு சாப்பிடுகிறவர் ஆயிற்றே. ஆகவே, நீங்கள் அவருக்காகத் தனியே சமைத்தாக வேண்டும், இல்லையா?

பீனு:—தேவையில்லை. ஏனெனில், கல்யாணத்துக்குப் பிறகு நானும் சைவ உணவுக்கு மாறிவிட்டேன். தவிர 'அஹிம்ஸை' தான் எங்கள் கூட்டுக் கொள்கை.

பால்:—நீங்கள் எப்படி பில்ம் தொழிலில் பிரவேசித்தீர்கள்?

பீனு:—கிஷோர் ஸாஹு, "காளி கட்" என்ற படத்தைத் தயாரித்து வந்த போது, கதாநாயகியாக நடிக்க ஒரு புது முகத்தைத் தேடிக் கொண்டிருந்தார். தமது முயற்சிக்காக லக்னௌவுக்கு வந்தார். என்னை அந்தப் பாத்திரத்திற்குத்

தேர்ந்தெடுத்தார். இதுதான் நான் இத் தொழிலில் பிரவேசித்த விதம்.

பால்:—படத் துறையில் பிரவேசிக்க நினைக்கும், படித்த, ஆர்வமுள்ளவர்களுக்கு — பெண்களுக்கு—நீங்கள் கூற விரும்பும் புத்திமதி என்ன?

பீனு:—நக்ஷத்திர பதவியை அடைவது மிகவும் கடினம். கஷ்டத்தையும் சிரமத்தையும் சமாளிக்கக்கூடிய பொறுமையும் முயற்சியும் உள்ளவர்கள் மட்டுமே இந்த அரிய கலையிலே தொண்டு செய்ய முன் வர வேண்டும்.

பால்:—வதந்திகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பீனு:—எப்படிப்பட்ட வதந்திகள்?

பால்:—கௌரவமான குடும்பப் பெண்களுக்கு படத் தொழில் ஏற்றதல்ல என்ற விஷயம்.

பீனு:—நீங்கள் கூறுவது சரியல்ல. இன்று நிலைமையே மாறிவிட்டது. பழைய நம்பிக்கை அடியோடு போய் மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. இன்று நம்மிடையே, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சில பெண்கள் நடிகைகளாக இருந்து வருவதே அதற்கு அத்தாட்சி. அவர்களுக்கு என் ஆத்மார்த்தமான ஆசி.

பிரேம்:—பால்ராஜ்! மன்னிக்க வேண்டும். நானும் பீனுவும் ஏழு மணிக்கு ஒரு விருந்துக்குப் போகவேண்டும். எங்களுக்கு விடை கொடுப்பீர்களா!

பால்:—போக வேண்டுமென்றால் சரி. நீங்கள் வந்து உதவியதற்கு நானும், லிப்டன்ஸ் ரஸிகர்களும் உங்களுக்கு ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறோம். ரஸிகர்கள் பேட்டியை மிகவும் ரஸித்திருப்பார்களென நினைக்கிறேன்.

பீனு:—ரஸிகர்களுக்கும், உங்களுக்கும் எனது நன்றி.

பால்:—பிரேம்நாத்! உங்கள் பேட்டித் தேதியை மறந்துவிட வேண்டாம்.

பிரேம்:—கண்டிப்பாக அன்று இங்கு வந்து விடுகிறேன்.

[நீங்கள் மேலே வாசித்தது, பிரபல லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டில் ஒலிபரப்பப்பட்ட பேட்டி.]

வாழ்த்துகிறோம்

ஜம்பு புரொடக்ஷன்ஸ், ஜம்பு பிக்சர்ஸ் இவைகளின் உரிமையாளரான எஸ். பி. எல். லக்ஷ்மணன் செட்டியார், தமது மகன் சிரஞ்சீவி பழனியப்பனின் திருமணத்தை வெகு கோலாகலமாக நடத்தினர். காரைக்குடியில் நடைபெற்ற இந்த விவாகத்திற்கு பட உலகப்பிரமுகர்களும், பல தனவந்தர்களும் வந்திருந்தார்கள். காரைக்குடி டி. ஆர். எம். ராமசாமி செட்டியாரின் புத்திரி சௌ. முத்துருக்மணிதான் மணமகள். கல்யாணத்தன்று குமாரி வைஜயந்திமாலாவின் நடனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்னை, நியூடோன் ஸ்டுடியோவின் மானேஜிங் டைரெக்டர் ஆர். எம். ராமநாதன் செட்டியார், தம் புத்திரி சௌ. உமையாளை, தேவகோட்டை. எஸ்டி. எம். ஆர். வி. ஆர். முருகப்ப செட்டியார் மகன் சிரஞ்சீவி வீரப்பனுக்கு மணம் செய்து கொடுத்தார். இந்த விவாகம் சென்ற மாதம் 2-ம் தேதி தேவகோட்டையில் சிறப்பாக நடைபெற்றது.

பல படங்களில் அருமையாகப் பின்னணி கீதம் பாடியிருக்கும், டி. எஸ். பாகீரதி, சென்ற மாதம் 2-ம் தேதி, சிரஞ்சீவி பி. ஸ்தாணு சுப்ரமண்யனைத் தம் வாழ்க்கைத் துணைவராக அடைந்தார். கோடம்பாக்கத்தில் நடைபெற்ற இந்த விவாகத்திற்கும், வரவேற்புக்கும் பட உலகப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர்.

சிறந்த அமெச்சூர் நடிகரான, டாக்டர் வி. ராமமூர்த்தி தமது குமாரன் சிரஞ்சீவி அஜீத் குமாரின் ஆண்டு நிறைவை சென்ற மாதம் 9-ம் தேதி கொண்டாடினர். பிரபல அட்வகேட் வி. ஸி. கோபாலரத்னம் தமது பேரனின் அப்த பூர்த்தியை முன்னிட்டு அன்று இரவு, தம் பங்களாவில் ஒரு நேர்த்தியான விருந்தை அளித்தார்.

"புவிப்பித்தன்" என்ற புனை பெயர் கொண்ட எழுத்தாளர் வி. கேசவன், சௌ. சுதர்சனவல்லியை, சென்ற மாதம் 9-ம் தேதி தமது வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார் குடந்தையில்.

"தினமணி" உதவி ஆசிரியரான சிரஞ்சீவி வை. சுப்ரமண்யம், சௌ. சகுந்தலாவை, கீழ்த் திருப்பதியில் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். சென்ற மாதம் 20ம் தேதி, தமது விவாகத்தை யொட்டி, மறுநாள் சென்னையில் நண்பர்களுக்கு வரவேற்பு அளித்தார்.

மணமக்கள் அனைவருக்கும் "குண்டூசி"யின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



காரைக்குடியில் கோலாகலமாய் 30-தேதி நடந்தேறிய இந்தத் திருமணத்திற்கு பிரபலஸ்தர்களும், தனவந்தர்களும் வந்திருந்தனர்,

சென்னையில் கலை விழாக்கள்

கடந்த ஏப்ரல் மாதம், சென்னையிலுள்ள கலா ரஸிகர்களுக்கு ஒரு அதிருஷ்டமான மாதம் என்றுதான் கூற வேண்டும். அவர்களுக்கு சென்ற மாதத்தில் நடைபெற்ற இரண்டு கலை விழாக்களின் மூலம் பல நாடக, நடன, சங்கீத நிகழ்ச்சிகளைக் காணும், கேட்கும் அதிருஷ்டம் கிடைத்தது.

திருவல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி சபையினர் சென்ற மாதம் வருடாந்திர சங்கீத விழாவைக் கொண்டாடினர்கள். இந்த விழாவின் நிகழ்ச்சிகள் அனைத்தும் கலா மண்டபத்திலே நடந்தன. மூன்றும் தேதி இந்த விழாவை ''கல்கி'' ஆசிரியர் ஆரம்பித்து வைத்தார். முதல் மூன்று நாட்கள், ''மனிதன்'', ''கள்வனின் காதலி'', ''ரத்த பாசம்'' ஆகிய நாடகங்களை டி. கே. எஸ். நாடக கோஷ்டியினர் நடித்தார்கள்.

மூன்று நாடகங்களுமே, சிறந்த நடிப்புத் திறனுக்கு எடுத்துக் காட்டுகளாக இருந்தன. ''ரத்த பாசம்'' கதையிலே புதுமை எதுவுமில்லை என்றாலும் ஷண்முகம்–பகவதி இவர்களின் அற்புதமான நடிப்பினால் நாடகம் சிறப்படைந்தது. ஷண்முகம் அசல் 'பிக்பாக்கெட்'டாகக் காட்சி அளித்தார் இந்த நாடகத்தில். ''கள்வனின் காதலி''யில் இன்ஸ்பெக்டர் மனைவியாக வந்த ராஜம் சக்கை போடு போட்டு, அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றார். ''ரத்த பாசத்''தில் மனைவியாகவும், ''கள்வனின் காதலி''யில் கல்யாணியாகவும் நடித்த டி. ஏ. ஜயலக்ஷ்மியின் பாகம் சோபிதமாக இல்லை. ''மனிதனி''ல் 'பிரண்டா'க வந்து வெளுத்துக் கட்டிய ராமசாமியின் நடிப்பு, ''கள்வனின் காதலி''யில் சோபிக்கவில்லை.

11ம் தேதி ''துப்பறியும் சாம்பு'' நாடகம் நடந்தது. ''தேவன்'' எழுதிய இந்த நாடகத்தை வழக்கம் போலவே இம்முறையும் திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் நன்கு நடித்தார்கள். இனிவரும் நாடகங்களிலாவது இவர்கள் பாட்டுகள் பாடாமலிருக்க வேண்டும். மற்றொன்று, சாம்புவை அவன் மனைவி ''அது,இது'' என்று அஃறிணையில் பேசுவதாக உள்ளதை கண்டிப்பாக அகற்றியாக வேண்டும்.

12ம் தேதி, கங்குபாய் ஹங்கல் என்ற ஹிந்துஸ்தானி பாடகியின் கச்சேரி நடைபெற்றது. 13ம் தேதி நடைபெற்ற வைஜயந்திமாலாவின் பரத நாட்டியக் கச்சேரி நன்கு பரிமளித்தது. மார்வாரி நடனம் தான் அனைத்திலும் சிறப்பாக இருந்தது.

18ம் தேதி, லலிதா – பத்மினி – ராகினி சகோதரியரது இந்திய நடனங்கள் நடைபெற்றன. இவர்களது நடனங்கள் வழக்கம்போல் ஜன ரஞ்சகமாக இருந்தன. மயில் நடனம்ஆடிய சிறுமிகளுக்கு உடை விஷயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். மயில் தோகையைக்கொண்டு உடை தயாரிக்கச் செய்தால் சிறப்பாக இருக்கும். இவர்களது 'பார்த்தஸாரதீயம்'என்ற நடன நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. சௌகரியமாக இடவசதிகள் செய்திருந்த காரிய தரிசிகளான ஸ்ரீ ராமும், எம். ஜி. பார்த்தசாரதியும் பாராட்டுதலுக்கு உரியவர்களே.

தமிழ் இசைச் சங்கத்தினர், தங்களது பத்தாவது தமிழ் இசை விழாவைக் கோலாகலமாக நடத்தினர்கள். புதிதாக இச் சங்கத்திற்கென கட்டப்பட்டுள்ள அண்ணாமலை மன்றத்தில் இந்த வருஷக் கச்சேரிகள் நடைபெற்றன. இந்த இசை விழாவை, சென்ற மாதம் 15ம் தேதி, நமது மாகாண முதல் அமைச்சர் ராஜாஜி துவக்கி வைத்தார். அவர் துவக்கி வைத்துப் பேசுகையில், ''பக்திக்கு இசையே அன்று, இசைக்கு பக்தியல்ல'' என்பதை முக்கியமாகக் குறிப்பிட்டு, தமிழ் இசைக்கு ராஜா ஸர் செய்துள்ள தொண்டைப் பாராட்டினர். எம். எம். தண்டபாணி தேசிகர் முதலில் பிரார்த்தனை கீதம் பாடினர். தலைமை வகித்த ரா. பி. சேதுப்பிள்ளை, மக்கள் வாழ்க்கையில் தமிழ் இசையின் பங்கு பற்றிக் குறிப்பிட்டார்.

இசை விழா 15ம் தேதி முதல் 19ம் தேதி முடிய ஐந்து தினங்கள் நடைபெற்றன. ஐந்து நாட்களும் மாலையில் வாய்ப்பாட்டுக் கச்சேரியும், முதல் நாள் தவிர மற்ற நாட்களில் இரவில் நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றன.

16-ம் தேதி கர்நாடக சங்கீத வித்வான் கலாநிதி செம்மங்குடி ஸ்ரீனிவாஸ அய்யர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

மர்ம மாலா

பனிமலர் ஸ்டுடியோஸ் முதலாளி பரமசிவம் எவ்வளவோ தூரம் வருந்திக் கேட்டுக் கொண்டும்கூட, பிரபல நக்ஷத்திரம் வகுளமாலா,அன்றைய இரவு அவரது வீட்டில் "மீண்ட வாழ்வு" படப்பிடிப்பு சுகமாக முடிந்தமைக்காக நடைபெறும் விருந்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டாள். பரமசிவம் மீண்டும் ஒருமுறை வற்புறுத்திச் சொல்லவே, வகுளாவின் கண்களில் கண்ணீர் கசியலாயிற்று. அது நடிப்புக் கண்ணீரல்ல, நிஜக் கண்ணீர் என்பதை உணர்ந்து கொண்ட பரமசிவம், "சரி! உங்கள் இஷ்டம்! அதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை! மன்னித்து விடுங்கள்!" என்றவாறே தம்முடைய சுழல் நாற்காலியை விட்டு எழுந்தார்.

வகுளாவும் தன் கண்களில் தளும்பிய நீரைத் துடைத்தபடியே, கை கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டு ஆகிவிட்டது. உடனே அவள் முகத்தில் அசாதாரணமானதொரு பரபரப்புத் தென்பட்டது. அவசர அவசரமாக முதலாளியின் அறையை விட்டு வெளியேறினாள்.

அன்று, படப்பிடிப்பு ஒன்றும் இல்லாததனால் 'ரிஹர்சல் ஹாலில்' உட்கார்ந்துகொண்டு, வம்பாக்ப் பேசிப் பொழுதை ஓட்டிக்கொண்டிருந்த டைரெக்டர் சிவராம், உதவி டைரெக்டர் பூஷணம், காமிராமென் கைலாஸம், பிரபல நடிகன் ரவிகுமார், கதாசிரியர் கங்காதரன், ஆகிய ஐவரும் முதலாளியின் அறையிலிருந்து கலங்கிய கண்களுடன் வெளிப்பட்ட வகுளாவைக் குறிப்பாகப் பார்த்து, தமக்குள் ஏதேதோ ஜாடையாகப் பேசி நகைத்துக் கொண்டனர். அவர்கள் நகைத்த ஒலி மாலாவின் காதுகளில் நன்கு விழுந்தது. ஆயினும் அவள் அதைப் பொருட் படுத்தாமல் விடுவிடுவென்று ஸ்டுடியோவிற்கு வெளியே வந்து, தனது காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

"நான் தான் சொன்னேனே, மிஸ்டர் பூஷணம்! இன்று விருந்திற்கு வகுளா கண்டிப்பாக வரமாட்டாள் என்று!" என உதவி டைரெக்டரை நோக்கி வெற்றிப் பெருமிதத்துடன் கூறினார் டைரெக்டர் சிவராம்.

"தாங்கள் சொன்னது சரிதான்! ஆனால், அதன் காரணம்?"

"காரணமா! இன்று புதன்கிழமையல்லவா! அதனால் தான்!"

"புதன்கிழமையானால், அதற்கும் மாலாவுக்கும் என்ன சம்பந்தமாம்!"

"நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது ஸார்! நம்முடன் இவ்வளவு கர்வமாகவும் அலக்ஷியமாகவும் நடந்து கொள்ளும் வகுளா, பிரதி வாரமும் புதன் கிழமையன்று இரவு எட்டுமணிக்குமேல் தனது பங்களாவில் தங்குவதில்லை. சரியாக எட்டரை மணிக்கு அவள் பங்களாவை விட்டுப் புறப்பட்ட கார் மறுநாள் காலையில் தான் திரும்ப வருகிறது! இதை நான் எத்தனையோ தடவைகள் பார்த்துவிட்டேன்!" என்றுஅடித்துப்பேசினார் உதவி டைரெக்டர் பூஷணம்.

"அப்படியா! ஒரு பெண்ணுக்கு தன்னந் தனியாக இரவு வேளையில் வெளியே என்ன வேலையிருக்கும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சினிமா படக் கதாசிரியர் கங்காதரன்.

"ஏன்! ஆயிரம் வேலைகள் இருக்கும்! உமது கற்பனைக்கு எட்டவில்லையோ! இந்த வகுளா என்ன, முற்றும் துறந்த சன்னியாசிக் கட்டையா? கழுத்தில்

தாலியில்லையென்றாலும், காதலன் எவனாவது இருக்கமாட்டானா? இல்லையென்றால்...உம்?...பார்க்கலாம்!" என்று பெருமூச்சு விட்டான் வகுளாவின் ஜோடி ரவிகுமார். வகுளாவிடம் அவன் முயற்சி செய்து ஏற்பட்டிருந்த தோல்வி அவனுக்கு ஒரே எரிச்சலை மூட்டியது.

"அவளைப் பார்த்தால் அப்படியொன்றும்கெட்டவளாகத் தோன்றவில்லையே?" என்றார் பூஷணம்.

"கெட்டவர்கள்தான் அதிகமாக வேஷம் போடுவார்கள்!" இது ரவியின் சூடான பதில்!

"இருக்கலாம்! அவளுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு மர்மம் மறைந்திருக்கிறது. அதை நாம் எப்படியாவது முயன்று கண்டுபிடிக்க வேண்டும்!" என்று முடிவாகக் கூறி, சம்பாஷணைக் கொரு முற்றுப் புள்ளி வைத்தார் டைரெக்டர் சிவராம்.

முதலாளி பரமசிவத்திற்கும், வகுளா தம் அழைப்பை மறுத்தது மிகவும் வேதனை அளித்தது. 'வகுளா ஒவ்வொரு புதன் கிழமை இரவும் எங்கேயோ சென்று விட்டு, மீண்டும் மறுநாள் காலையில் தான் திரும்புகிறாள்' என்பது அவரும் அறிந்த விஷயம்தான். இதைப்பற்றி அவரும் அவளிடம் எத்தனையோ முறை கேட்டிருக்கிறார். ஆனால், அவள்தான் பதில் சொல்லியதில்லை.

"மன்னிக்கவேண்டும். அதைப்பற்றி தயவு செய்து என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள்!" என்றவாறே அங்கிருந்து மெள்ள நழுவி விடுவாள் அவள்.

'சொந்த விஷயம் ஏதாவது இருக்கும்! அதைப்பற்றி நாம் வற்புறுத்திக் கேட்டு அவள் வருந்தச் செய்வானேன்!' என்று எண்ணிய பரமசிவம், அதைப்பற்றிக் கேட்பதை அடியோடு விட்டு விட்டார்.

ஆனால், இன்று தம் கம்பெனி டைரெக்டர் உட்பட அனைவரும் வகுளாவைப் பற்றிப் பேசிய கேலிப் பேச்சுக்களை மறைவிலிருந்து கேட்ட பொழுது அவரது இதயத்தை என்னமோ செய்வது போலிருந்தது.

தமது ஒழுங்கான நிர்வாகத்தில் நடைபெறும் ஸ்டுடியோவில் உள்ள பிரபல நடிகையைப் பற்றிப் பலரும் அவதூறாகப் பேசுவது அந்த நடிகைக்கு மட்டுமல்ல, தம் ஸ்டுடியோவுக்கே அது இழிவு எனக் கருதினார் பரமசிவம்.

வகுளா மட்டும் இல்லாவிட்டால் தம் பனிமலர் ஸ்டுடியோவின் படங்கள் இவ்வளவு வெற்றிகரமாக ஓடி பணப்பெட்டியையும், ரசிகர்களின் உள்ளத்தையும் நிரம்ப வைத்திருக்காது என்பதை நன்கு உணர்ந்தவர் பரமசிவம். ஆகவே, சகல விதத்திலும் வகுளாவை கௌரவித்தே

நடத்தி வந்தார் ' தம்மால் கௌரவிக்கப் படும் ஒரு நக்ஷத்திரம் இப்படிப் பலர் வாயிலும் புகுந்து புறப்படும்படியாக அந்த நக்ஷத்திரத்தின் வாழ்க்கையில் என்னதான் மர்மம் புதைந்திருக்கும்! அதை எப்படியாவது கண்டு பிடித்து விட வேண்டும்!' என்ற ஒரு எண்ணம் அவருக்கும் உண்டாயிற்று. வகுளாவின் வாழ்க்கையில் ஏதாவது குறையிருந்தால்



அதைப் பூர்த்தி செய்து விடலாம் என்றும் எண்ணியது முதலாளி பரமசிவத்தின் பரந்த உள்ளம்.

* * *

தனது பங்களாவிற்கு வந்த வகுளா நேராகத் தனது உடுப்பு அறைக்குள் சென்றாள். பத்து நிமிஷங்களுக்குப் பின் வெளி வந்த வகுளாவைப் பார்த்தவர்கள் "இவள் தான் பிரபல நடிகை வகுளமாலா" என்றால், 'இல்லை' என்று சத்தியம் கூடச் செய்வார்கள். அப்படி மாறியிருந்தது வகுளாவின் தோற்றம்.

இடையில் சாதாரணமான தொரு பழைய நீல பட்டுப் புடவை. கனகாம்பர கலரில் ஒரு சோளி. மூக்கில் மின்னும் மூக்குப் பொட்டு, இரண்டொரு நகைகள்; கோதி முடியப்பட்ட கூந்தல்: நெற்றியில் மங்களகரமான குங்குமப் பொட்டு—இவைகளுடன் ஒரு சாதாரண எளிய குடும்பத்தின் குலவிளக்குப்போலப் பிரகாசித்தாள் வகுளா.

இரண்டு கூடைகள் நிறைய பழ வகைகள், இதர தின்பண்டங்கள் அடங்கிய பெட்டிகள்—யாவையும் டிரைவர் எடுத்துக் காரினுள் வைத்துவிட்டு, மரியாதையுடன் ஒதுங்கி நிற்க, காரின் உள்ளே ஏறி உட்கார்ந்து கொண்டாள் வகுளா. நகரின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டது வகுளாவின் 'ப்யூக்'.

சுமார் அரை மைல் தூரம் சென்று டவுனின் எல்லைப் புறத்தைத் தாண்டியவுடன் வீரகேரளம்பூர் போகும் பிரிவு ரஸ்தாவில் திரும்பியது கார். அதே சமயத்தில் பக்கத்துச் சாலையிலிருந்து வந்த மற்றொரு டாக்ஸியும், வகுளாவின் காரைப் பின் தொடரலாயிற்று. அந்த டாக்ஸியை முதலாளி பரமசிவமே ஓட்டி வந்தார். தமது சொந்தக் காரிலேயே பின் தொடர்ந்தால் வகுளா அடையாளம் கண்டு கொள்வாள் என்று, டாக்ஸி ஒன்றை வாடகைக்குப் பிடித்துகொண்டு தமது தோற்றத்தையும் கூடுமானவரையிலும் மாற்றிக் கொண்டிருந்தார் ஸ்டுடியோ முதலாளி பரமசிவம்.

நகரத்திலிருந்து சுமார் இருபதுமைலில் இருக்கும் அழகிய சிற்றூரான வீரகேரளம்பூரில் உள்ள 'பூந்தோட்டம்' என்னும், ஆசிரமம் போன்றதொரு சோலைக்குள் புகுந்து, அதன் நடுவில் இருந்த வீட்டினெதிரே நின்றது வகுளாவின் கார்.

முதலாளி பரமசிவமும் தமது காரைப் பக்கத்திலிருந்த ஒரு சந்தில் நிறுத்தி

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சூராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஸோல் ஏஜண்டுகள்: B. பாலபட்டாபி (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) - - கோயமுத்தூர்.

விட்டு, இறங்கி வந்து 'பூந்தோட்ட'த்தின் மதில்மேல் ஏறிக் குதித்து, மெள்ள அந்த வீட்டின் பக்கவாட்டிலுள்ள ஜன்னலருகில் வந்து மறைவாக நின்று கொண்டு, ஜன்னல் திரைக்கு இடைவெளியால் உள்ளே நடப்பதை கவனிக்கலானார்.

* * *

வகுளா காரிலிருந்து இறங்கியதும், அழகே உருவான இரு குழந்தைகள் ''அம்மா வந்துட்டா, அம்மா வந்துட்டா!'' என்று ஆனந்த ஆரவாரம் செய்துகொண்டு ஓடியே வந்து வகுளாவின் கால்களைக் கட்டிக் கொண்டன. உடனே வகுளா இருவரையும் அணைத்து உச்சி முகர்ந்த பின், கீழே விட்டாள். உடனே ரமா-பாலன் இருவரும் தமது அன்னையின் இரு கரங்களையும் அன்புடன் பற்றியவாறே உள்ளே அழைத்துச் சென்றனர்.

''கல்யாணீ! வந்தாயா!'' என்று விசாரித்தவாறே, மன்மதனை யொத்த ஒரு ஆடவன், தனது கைகளுக்கிடையிலிருந்த ஊன்றுகோல் டக் டக் என்று ஒலிக்க, நொண்டி நொண்டி நடந்து வந்தான். அவனைக் கண்டதும் கல்யாணி என்ற வகுளா ஓடிச் சென்று அவனது தடிகளை வாங்கி ஒருபுறமாக வைத்துவிட்டு, தன் கையால் அவனை அணைத்தபடியே அங்கிருந்த சோபா ஒன்றில் அவனை அமர்த்திவிட்டு, அன்புடன் அவன் நெற்றியில் புரண்டு விழுந்த கிராப்பு சுருளைத் தன் அழகிய கரத்தினுல் ஒதுக்கினுள்.

''கல்யாணி! உலகில் மொத்தம் நாலு யுகம் என்பார்கள்! எனக்கோ ஒவ்வொரு புதன்கிழமையும் வருவதற்குள் ஏழு யுகங்கள் கடந்து விடுகின்றன! கல்யாணி! இந்த நொண்டியால் உனக்கு எவ்வளவு சிரமம், பார்த்தாயா?'' என்ருன்.

இதைக் கேட்ட கல்யாணி, ''தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள்! மகாப் பாவி நான்! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளாமலிருந்திருந்தால் தங்களுக்கு இந்த கதியே நேர்ந்திருக்காது. அதை மறந்து விட்டு, எனக்காகக் கவலைப்படுகிறீர்களே! எனக்கு உங்களைவிட உலகில் எது தான் பெரிது!'' என்றவாறே சாத்துக்குடிப் பழமொன்றை உரித்து சுளைகளைக் கணவனிடம் கொடுத்தாள்.

உணர்ச்சியினால் அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

"உம்! பெற்ற தந்தையே இரக்கமில்லாமல் அடித்துத் துரத்தி விட்டார்! முழு அனாதையாக உன்னிடம் வந்தேன்! வந்தது முதல் எனக்கு சிசுருஷை செய்யத்தான் உன்னைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேனே யன்றி, என்னால் உனக்குக் கடுகளவாவது சுகம் உண்டா! கல்யாணி!"

"போதும்! பெரியவர்களை ஒன்றும் சொல்லாதீர்கள்! தம் சொல்லை மீறி என்னை மணம் புரிந்து கொண்டதினால் உள்ள கோபமே அவரை அப்படிச் செய்யத் தூண்டியது! எல்லாம் நம் விதிதான்!" என்றவாறே, சமையல்கார அம்மாள் கொண்டு வந்து வைத்த பாலை எடுத்துத் தன் கையாலேயே ஆற்றி அவன் வாயில் வார்த்தாள்.

இச்சமயத்தில் யாரும் எதிர்பார்க்காத அதிசயம் ஒன்று நடந்தது. ஜன்னலருகே நின்று கொண்டிருந்த பரமசிவம் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் தம்மை மறந்து நேராக உள்ளே ஓடி வந்தார்.

"அப்பா பிரபாகர்! என்னை மன்னித்துவிடப்பா! இந்தப் பாவியை மன்னித்துவிடு!" என்று கதறியபடியே அவர், கல்யாணியின் கணவனை ஒரு சிறு குழந்தையைப்போல கட்டிக்கொண்டு தேம்பினார்.

திடீரென்று தனது முதலாளியை அவ்விடத்தில் கண்ட வருளா திகைத்து விட்டாள். அவரது செய்கையோ அவளை மேலும் திகைப்புறச் செய்தது. பிரபாகரனோ "அப்பா! அப்பா!" என்றபடியே குலுங்கக் குலுங்க அழுதான்.

பரமசிவம் சாதாரணமாக இருந்த காலம் அது. அவருக்குப் பிரபாகரன் பிரபாவதி என்ற இரு குழந்தைகளை மட்டும் தன் ஞாபகமாக அளித்துவிட்டு பொன்னாடு சென்று விட்டாள் அவரது மனைவி தர்மாம்பாள். குழந்தைகள் இருவரையும் நன்றாக வளர்த்து, ஆளாக்கினார் பரமசிவம். உரிய காலத்தில் பிரபாவதிக்கு விவாகம் செய்வித்தார். மகன் திருமண விஷயமாக அவர் திட்டமிட்ட பொழுதுதான், பிரபாகரன் தனது கருத்தை வெளியிட்டான்.

பொப காடி பெடில்
என்பது மெக்ஸிகோவில் உள்ள
எரிமலை என்று பலருக்குத்
தெரியாது



EPOCH

ஆனால்
போனிக்ஸ்
என்றால் குளிர்ச்சிதரும்
மிகச்சிறந்த மின்சார விசிறிகள்
என்பது அனைவருக்கும் தெரியும்

RM.S.7

EWI LTD

RM.S.&CO.,LTD., 16.BROADWAY MADRAS.1.

கிளை: 5.மேலக்கோபுரவாச மதுரை.

''மணந்தால் கல்யாணியைத் தவிர வேறு ஒரு மங்கையையும் மணக்க மாட்டேன்!'' என்ற தம் புத்திரனின் பிடிவாதம் பரமசிவத்தைத் திடுக்கிட வைத்தது.

தம் அன்பு மகனின் பிடிவாதம் அவருக்கு ஒரேயடியாக ஆத்திர மூட்டியது. பிரபாகரனோ, காதல் மயக்கத்தில் தந்தையின் சினத்தையும்—அவரது சொத்தையும் லட்சியம் செய்யாமல், தன்னை மீறிய ஒரு துணிச்சலில் பேசாமல் ஒரு கோவிலில் எளிய முறையில் கல்யாணிக்குத் தாலியைக் கட்டி விட்டான்.

கோவிலில் இருந்து கல்யாணியுடன் திரும்பியபிரபாகரன் ('நிலவரம்' அறிவதற்காக, கல்யாணியை வாசலில் காரிலேயே உட்கார்த்தி விட்டு) தான் மட்டும் மெதுவாக உள்ளே நுழைந்தான்.

மகனைக் கண்டதும் அவரது எரிச்சல் அதிகமாயிற்று. 'தம் வார்த்தையை மீறி தமக்கு அவமானம் தேடித் தந்த பிள்ளையைக் கொன்றால்தான் என்ன!' என்ற ஆத்திரத்தில், ''அயோக்கிய நாயே! வீட்டினுள் அடியெடுத்து வைக்க உனக்கு அவ்வளவு துணிச்சலா! பெற்ற தகப்பனை விட உனக்கு எவள் உயர்த்தியாகப் போனாளோ, அவளுடனேயே போய் விடு!'' என்று இரைந்தபடியே மேஜை மேல் இருந்த இரும்பு 'ரூலரை' எடுத்து மகனை நோக்கி வீசி எறிந்தார்.

அவ்வளவுதான்! 'டங்'கென்று பிரபாகரன் காலில் மோதிய அந்தத் தடி தன் கடமையைச் செவ்வனே செய்து அவனது கால் எலும்பை முறித்தது.

''ஐயோ!'' என்று அலறியபடியே ஒரு கையால் காலைப் பிடித்த வண்ணம், நீர் நிறைந்த கண்களுடன் தந்தையை ஒரு முறை ஏற இறங்க நோக்கி விட்டு, நொண்டியபடியே வெளியே வந்து, காரில் ஏறிக் கொண்டான் அவன்.

அன்றுடன் அப்பன்—மகன் பந்தமும் அறுந்தது.

மகனின் பிரிவுக்காகப் பரமசிவம் கலங்கவில்லை. தமது ஏராளமான செல்வத்தை முடக்கி, ஒரு சினிமாக் கம்பெனியை ஆரம்பித்தார். நல்ல வேளையும் கூடியது. பணம் அள்ள அள்ளக் குறையாத விதத்தில் சேர்ந்தது. பணம் சேர்க்கும் வெறியில் அவர் சில காலம் ஒன்றையும் பொருட்படுத்தாமலிருந்தார்.

வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட பிரபாகரனுடன், கல்யாணி நேராக பட்டணம் வந்தாள். டாக்டர்கள் பிரபாகரனின் காலைப் பரிசோதித்துவிட்டு இனி அவன் 'நொண்டி'தான் என்று பயங்கரத் தீர்ப்பளித்து விட்டனர்.

சில குழந்தைகளுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் குடும்பம் நடத்தலானாள் கல்யாணி. காலப் போக்கில் அவளுக்கும் குழந்தைகள் பிறக்கவே, கிடைக்கும் வரும்படி போதவில்லை.

இருவருமாக யோசித்து, முடிவில் பிரபாகரன் சம்மதத்துடன், கல்யாணி வகுளமாலாவாக மாறி, சினிமாவில் நடிக்க ஆரம்பித்தாள். அவளது அழகுக்கும், குரலுக்கும், நடிப்புக்கும், அங்கே நல்ல மதிப்பு இருந்தது. அதைக் கண்ட பரமசிவம் சும்மா இருப்பாரா ? வகுளாவைத் தம் ஸ்டுடியோவின் நிரந்தர நடிகையாக அமர்த்திக்கொண்டார்.

'விவாகமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயானவள் — ஒரு நொண்டியின் மனைவி'—என்ற விஷயங்கள் சினிமா வட்டாரத்தில் பரவினால், வகுளாவின் புகழும் மதிப்பும் குறைந்துவிடும் என்று அஞ்சிய பிரபாகரன், தன்னை அவளிடமிருந்து பலவந்தமாகப் பிரித்துக் கொண்டான். இதைப்பற்றி வகுளா அவனிடம் எவ்வளவு மன்றாடியும் அவன் கேட்கவில்லை. அவனது நிர்ப்பந்தத்தின்படி வகுளா வீரகேரளம்பூரில் ஒரு அமைதியான இடத்தில் அழகு வீடு ஒன்று கட்டி அங்கே தன் அன்புக் கணவனையும் ஆசைக் குழந்தைகளையும் வைத்துவிட்டு, நகரத்தில் மிஸ். வகுளாவாகப் பிரபலமடைந்தாள்.

* * *

விவரமெல்லாம் பிரபாகரன் வாய் மூலம் அறிந்துகொண்ட பரமசிவம் மிகவும் வருந்தினார். துக்கித்தார். தன் மாமனார்தான் பரமசிவம் என்பதை உணர்ந்த கல்யாணி மிகவும் ஆச்சரியத்துடன் ஆனந்தம் அடைந்தாள். மாமனாரை நமஸ்கரித்து அவரிடம் மன்னிப்புக் கோரினாள்.

மகனையும் மருமகளையும் மனமுவந்து ஆசிர்வதித்த பரமசிவம் பேரக் குழந்தைகளுடன் விளையாடி ஒரே ஆனந்த பரவசமாக மாறினார்.

பனிமலர் ஸ்டுடியோவின் 'மீண்ட வாழ்வு' படம்தான் வகுளா கடைசியாக நடித்த படம். அப்புறம்தான் அவள் கல்யாணியாக மாறிவிட்டாளே!

பிரம்ம லோகம்

ரோஹிணி பிக்சர்ஸின், பெயரிடப்படாத, அவர்களது "புரொடக்ஷன் நெ. 9" அவர்களது ஸ்டுடியோவில் வளர ஆரம்பித்து விட்டது. இப்படம் ஒய். ஆர். ஸ்வாமியின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. பிரபல மராத்தியக் கதை ஒன்றைத் தழுவிய இக்கதையின் வசனங்களை பி. ஹனுமந்தராவ் எழுதியுள்ளார். என். டி. ராமராவ், "சௌகார்" ஜானகி, ஜம்னு, தங்கவேலு ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். இப்படத்தின் சங்கீத டைரெக்ஷனை டி. ஏ. கல்யாணம் ஏற்றிருக்கிறார்.

சண்டிராணி

பரணி பிக்சர்ஸின்–(தமிழ்–தெலுங்கு–ஹிந்தி) மூன்று பாஷைப் படமான "சண்டிராணி" படம் முக்கால் பகுதிக்கு மேலேயே தயாராகிவிட்டதாம். மூன்று படங்களிலும் பிரதம பாகத்தில் நடிக்கும் பானுமதியே டைரெக்ட் செய்து வருகிறார். பானுமதியுடன் கூட, என். டி. ராமராவ், எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி, வித்யாவதி, குமாரி துளசி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இப்படங்கள் அவர்களது சொந்த ஸ்டுடியோவான பரணியில் தயாராகி வருகின்றன.

பழிக்குப் பழி

சீக்கிரம் திரைக்கு வரக் கூடிய படங்களில் "பழிக்குப் பழி" என்பது ஒன்றாக இருக்கும். இது தமிழாக்கப்பட்டுள்ள ஒரு ஆங்கிலப் படம். வசனங்களை டி. எம். யு. பதியும், பாட்டுகளை மருதகாசியும் எழுதியுள்ளனர். இப்படத்தில் வசந்த குமாரி, ஜிக்கி, ராஜா ஆகியவர்களின் அருமையான பாட்டுகளைச் சேர்த்திருக்கிறார்கள். திரச் செயல்கள் நிறைந்த ஒரு கதையாம் இது. இப்படத்தை, ஜே. ஆர்தர் ராங்க் பில்ம் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (இந்தியா) லிட், ஸ்தாபனத்தார் வெளியிடுகின்றனர்.

பரோபகாரம்

சோபா பில்ம்ஸின் "பரோபகார"மும், சீக்கிரமே திரைக்கு வரக்கூடும் என்று தெரிகிறது. வாஹினி ஸ்டுடியோவில் முற்றுப் பெற்றுவரும் இப்படத்தை, கமால் கோஷ் டைரெக்ட் செய்வதுடன் ஒளிப் பதிவையும் அவரே செய்து வருகிறார். தமிழ்ப் படத்தின் வசனங்களை "உதய குமார்" எழுதியிருக்கிறார். ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, ராமசர்மா, முக்கமாலா. ஸி. வி. வி. பந்துலு, ரேலங்கி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

மனிதனும் மிருகமும்

ரேவதி ஸ்டுடியோவில் அவர்களது "மனிதனும் மிருகமும்" வேம்பு டைரெக்ஷனில் படமாகி வருகிறது. இப்படத்தின் கதை வசனங்களை எஸ். டி. சுந்தரம் எழுதியிருப்பதுடன், டைரெக்ஷனிலும் உதவி வருகிறார். பராசக்தி கணேசன், கே. சாரங்கபாணி, பத்மினி, ராஜம், நந்தாராம், கண்ணப்பன் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து

ஒரே விலை விற்பனை

ராதா சில்க் எம்போரியம்

பெரிய தெரு :: கும்பகோணம்

வருகின்றனர். சமீபத்தில் கே. சாரங்கபாணி சம்பந்தப்பட்டகாட்சியொன்று படமாகியது. இப்படத்தின் வளர்ச்சியில், பிரபல (காகிதம்–உலோகத் தகடு வியாபாரியான) அம்பலவாணன் செட்டியாருக்கும் பங்கு உண்டு எனத் தெரிகிறது.

பெற்ற மனம்

ஒரு ஆபீஸரின் மனைவி, ஏற்கெனவே அவளுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு டாக்டரால் விஷம் கொடுக்கப்படுகிறாள். ஆனால், அந்த வீட்டு வேலைக்காரி சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்படுகிறாள். இந்தக் கட்டம் சமீபத்தில், வாஹினி ஸ்டுடியோவில் பிரஸாத் ஆர்ட் புரொடக்ஷன்ஸின் "பெற்ற மனம்" படத்திற்காகப் படமாகியது. இக்காட்சியில் ஆபீஸர் மனைவியாக குமாரி துளசியும், வேலைக்காரியாக புஷ்பவல்லியும் நடிக்கின்றனர். இது தமிழ்–தெலுங்கு இரு பாஷைகளிலும் படமாகி வருகிறது. எல். வி. பிரஸாத் டைரெக்ஷனில். அவர் இப்படத்தில் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்கவும் செய்கிறார். மற்றும் பராசக்தி கணேசன், ராஜேந்திரன், பி. கே. சரஸ்வதி, சாவித்திரி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.



"என்னங்க? என்றைக்கும் இல்லாமே இன்றைக்கு ரொம்ப சந்தோசமா யிருக்கீங்க? ஏதாவது பெரிய கேசு பிடிச்சீங்களோ?"
"அதில்லேங்க! இன்றைக்குத்தான் புதுசா மைதீன் புகையிலையை போட ஆரம்பிச்சேங்க! அதிலேருந்து, மனசு ரொம்ப சந்தோசமா யிருக்குங்க!"
Advt

பொன் வயல்

ஜூன் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில், ஜெயந்தி புரொடக்ஷன்ஸாரின் "பொன் வயல்" ஒன்றாக இருக்குமாம். சென்ற மாதம் சேலத்திற்கருகில் இப் படத்திற்கென சில வெளிப்புறக் காட்சிகள் படமாயின. டி. ஆர். ராமச்சந்திரன், அஞ்சலி தேவி, கே. சாரங்கபாணி, மைனாவதி, மனோஹர், புளிமூட்டை, முத்துலக்ஷ்மி முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. டி. கே. டைரெக்ட் செய்து வருகிறார்.

முயற்சி

சீக்கிரமே திரைக்கு வரக்கூடிய படமாக இருக்கும் ஸி. ஸி. புரொடக்ஷன்ஸாரது "முயற்சி". மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகியுள்ள இப்படத்தில் நரசிம்மபாரதி, வி. கே. ராமசாமி, ரேவதி, லக்ஷ்மிப்பிரபா ஆகியோர் நடித்து முடித்திருக்கின்றனர்.

ஜாதகம்

ஆர். என். ஆர். புரொடக்ஷன்ஸின் "ஜாதகம்" படப் பிடிப்பு சென்ற மாதம் 23ம் தேதி, ஏவி. எம். ஸ்டுடியோவில் ஆரம்பமாகி விட்டது. இப்படம் தமிழ்—கன்னடம் இரு பாஷைகளிலும் படமாக்கப் படுகிறது. ஆர். நாகேந்திர ராவ் படங்களை டைரெக்ட் செய்கிறார். பாலசந்திரன், சூரியகலா, கே. ஆர். செல்லம், கே. சாரங்கபாணி, விகடம் கிருஷ்ணமூர்த்தி, நாகேந்திர ராவ் இதில் நடிக்கின்றனர்.

காலத்திற்கேற்ற நவினம்!
கருத்தமைந்த கதைப்போக்கு!!
சிந்தனையைத் தூண்டும் சிங்காரநடை!!!

எழுதியவர்:
ய. லக்ஷ்மிநாராயணன்

"காதலியை அடையத் துடிக்கும் வாலிபன் ஒருவன்—கட்டிய மனைவியைப் பறிகொடுத்த மற்றொருவன்—இவர்களைப் பிணைத்து, இன்பத்தின் எல்லையைக் காணத் துடிக்கும் இளங்குமரி ஒருத்தியைச் சோதிக்கும் மனோதத்துவ சம்பவங்கள் நிறைந்த காதல் கதை! "இன்பம் எங்கே?" என்று பேத்தித் திரிந்த பேனு வீரன் போர்ச்சுகல் கவிஞன் "ரூயரிக்"கின் மனோரதத்தை அடிப்படையாகக் கொண்ட இளிமை நிறைந்த கதை"

விலை ரூ. 1—8—0

விவரங்களுக்கு:

ஆனந்தா புத்தகாலயம்

44, முல்லாசாயபு வீதி, சென்னை—1.

1. நீங்கள் ஏதாவது மறந்து விட்டீர்களா?

ஆமாம் சார், நீர். நெ. 59, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணியில் உள்ள தர்மதாஸ் கடைக்குப் போகவில்லை போலும்.

2. அங்கே என்ன இருக்கிறது தெரியுமா?

அது ஒரு ஜவுளிக் கடை. அங்கே ஒரு குடும்பத்திற்குத் தேவையான எல்லாவிதமான ரெடிமேட் உடைகளும், நிறைய ஷர்ட்டிங்ஸ், கோட்டிங்ஸ், சூட்டிங்ஸ், பனியன்ஸ், சாக்ஸ், கைக்குட்டைகள், டைகள், இவை தவிர பெண்களுக்குத் தேவையான வித விதமான சேலைகள், கோயம்புத்தூர், சேலம், மதுரை, புல்லம்பேடு, பெங்களூர், உய்யூர், கொள்ளேகால், காஞ்சிபுரம் சில்க் புடவைகளும், பருத்திப் புடவைகளும், மற்றும் கலியாணத்திற்கு வேண்டிய அதி அற்புதமான பெனாரஸ் சேலைகளும், இதர விதமான ஜார்ஜட்டுகளும், பாவாடைகளும் கிடைககும்.

3. அது எங்கே?

தர்மதாஸ்

59, பைகிராப்ட்ஸ் ரோட்
சென்னை—5.

மேல்கண்ட விலாசத்திற்கு இதுவரை விஜயம் செய்து கண்டிரா விட்டால் இப்போதே ஒரு முறை சென்று பாருங்கள். அல்லது

2/200, தங்கசாலை வீதியில் இருக்கும்

ராயல் ஸ்டோருக்கு

விஜயம் செய்யுங்கள்.

குறிப்பு:—வழக்கமாய் எங்களிடம் வாங்குபவர்களுக்கு கடனைவும் பொருள் வழங்கப்படும்.

படத்திற்கொரு நடிகன் பாரதி

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு நாடகங்களை நடத்துவதற்காகப் புறப்பட்டது.

வள்ளியம் குன்றம் சபாவில் பாரதி மிகுந்த செல்வாக்குப் பெறலானார். கம்பெனி முதலாளியான ஜமீன்தார், வித்வான் செல்லம் ஸ்வாமிகள், தர்மாஞ்சலு நாயுடு ஆகிய மூவரும் அவர் விஷயத்தில் அசாதாரணமான அக்கரை எடுத்துக் கொண்டனர். அவர்கள் காட்டிய சிரத்தையின் விளைவாகவே பாரதி நடிப்பிலும், பாட்டிலும் துரிதமாய் முன்னேறிப் புகழ் பெற்று வந்தார். கம்சன், பரதன், அபிமன்யு, சத்தியவான் போன்ற வேஷங்கள் அவருக்குப் பேர்போன வேஷங்களாகும். அதுவும் அவர் பரதன் வேஷத்தில் தோன்றிவிட்டால் தியேட்டரில் அழாதவர்களே இருக்க முடியாதாம். ஆதலால் இந்த நாடக நோட்டீஸ்களில் கம்பெனிக்காரர்கள்! "இந்த நாடகத்தின் போது அழாதவர்களுக்கு ரூ. 50 இனாம்!" என்று விளம்பரப்படுத்துவது வழக்கமாம்!

இவ்வளவெல்லாம் இருந்தும் பாரதி வள்ளியம் குன்றம் கம்பெனியில் வெகு காலம் நிலைத்திருக்கவில்லை. அவர் அச்சமயம் இணையற்ற கம்பெனியாகக் கருதப்பட்டுவந்த புளியமாநகர் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் போய்ச் சேர்ந்தார்.

புளியமாநகர் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி பல ஊர்களுக்குச் சென்று நாடகங்களை நடத்தி நாடகாபிமானிகளின் பேராதரவைப் பெற்றது. பாரதி அந்தக் கம்பெனியில் பெரும்பாலும் ஸ்திரீ வேஷங்களிலேயே தோன்றி நடனமும் ஆடிவந்தார். நாள் தவறினாலும் அவரது நடனம் தவறாது.

இக் கம்பெனி உன்னத நிலையில் இருந்தபோது — அதாவது, இரண்டாவது யுத்தம் ஆரம்பமாவதற்கு சற்று முன்பாக—மலாயா, பினாங்கு முதலிய தூர நாடுகளுக்குச் சென்று நாடகங்களை நடத்திவரப் புறப்பட்டது. பாரதியும் அக் கம்பெனியுடன் சென்றார்.

இவர்கள் பினாங்கில் நாடகங்களை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் இரண்டாவது உலக மஹாயுத்தம் ஆரம்பமாகிவிட்டது. நாடக கோஷ்டியினர் இந்தியா திரும்பிவிடத் தீர்மானித்தனர். ஆனால், அதற்கான கப்பல் வசதியில்லாமல் சில தினங்கள் தவித்துக் கொண்டிருந்தனர். கடைசியில் அதற்கும் வழி ஏற்பட்டது. சீனாவிலிருந்து பழுது பார்ப்பதற்காக இந்தியா வந்த ஒரு கப்பலில் இக்கோஷ்டியினருக்கு இடம் கிடைத்தது. சென்னை மண்ணில் கால் வைத்த அன்றே கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் 'செத்தோம்; பிழைத்தோம்' என்று தம்தம் ஊர்களுக்குப் பிரயாணமானார்கள். பாரதி மதுரையை அடைந்தார்.

சொந்த ஊர் அடைந்ததும் பாரதி தம் காலத்தை சுகமாக கழிக்க விரும்பினார். அவ்வப்போது யாராவது ஸ்பெஷல் நாடகங்களுக்கு அழைக்கும் போது போய் நடிப்பார். அந்த சமயத்தில்தான் அவர் இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்ட ஸ்டேஜ் டான்ஸ்களில் கலந்து கொண்டது. அக்காலத்தில் ரதிபாய்—

புத்திரி ஜெயமணி



புத்திரன் ஜெயசந்திரன்

கமலாபாய் என்ற இரு நடன மணிகளின் கோஷ்டி இது மாதிரியான நடனங்களில் பிரசித்தமாக விளங்கியது. அந்தக் கோஷ்டியில் பாரதி சேர்ந்து கொண்டு நடனம் ஆடிவந்தார்.

நரசிம்ம பாரதியும், அவரது மனைவி இந்திராவும்.

இப்படியாக, இரண்டு வருஷ காலத்திற்குள் மதுரைப் பக்கங்களில் அவருடைய பெயர் பிரசித்தமாகி விட்டது. பெயர் பிரபலம் அடைவதற்கும் சினிமாச் சந்தர்ப்பம் அவரைத் தேடி வருவதற்கும் பொருத்தமாயிருந்தது. எம். எஸ். சுப்புலக்ஷ்மி பிரதம பாகத்தில் நடித்த "மீரா" படத்தில் கிருஷ்ணன் வேஷத்தில் நடிப்பதற்கு வசீகரமான முகமுடைய ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துடன் பிரபல கேமிராமென் ஜித்தன் பானர்ஜியும் மற்றும் சிலரும் மதுரைக்கு வந்திருந்தனர். அவர்கள் பாரதியையே இவ்வேஷத்திற்குத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், பிறகு 11,000 அடி கட்டுப்பாடு காரணமாக 'கிருஷ்ணன் வேஷமே வேண்டியதில்லை' என்று படத் தயாரிப்பாளர்கள் தீர்மானித்து விட்டனர். அதனால் பாரதிக்கு சிறுகளத்தூர் சாமாவுக்கு சிஷ்யனாக (ஒரு துண்டு வேஷத்தில்) தலையைக் காட்டவும், கோஷ்டிப் பாட்டில் தம் குரலைச் சேர்த்துக் காட்டவும் ஒரு சாமான்யமான சந்தர்ப்பம் மட்டுமே கிடைத்தது.

"மீரா" படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது பாரதி டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமியை சந்திக்க நேர்ந்தது. ஸ்ரீ. சாமி அவரை ஜூபிடரில் சேர்த்து வைத்தார். ஜூபிடரில் "வால்மீகி", "ஸ்ரீ முருகன்", "கஞ்சன்" ஆகிய மூன்று படங்களில் பாரதி நடித்தார், இவை முடிந்ததும் அவர் பக்ஷிராஜாவின் "கன்னிகா" படத்தில் நடித்தார். இந்த நான்கு படங்களிலும் பாரதிக்கு பிரமாதமான பெயர் என்று கூறமுடியாது.

"நல்ல முக அழகு பெற்ற பாரதியை கிருஷ்ணன் வேஷத்தில் நடிக்கச் செய்தால் மிக சோபிக்கும்" என்று ஜூபிடர்காரர்கள் வெகு நாளாக எண்ணிக்கொண்டிருந்தனர் போலும். "கன்னிகா" படம் முடிந்ததும் பாரதியை அவர்கள் தம் "அபிமன்யு" படத்தில் கிருஷ்ணனாக நடிக்கச் செய்தனர். பிறகு "கிருஷ்ண விஜய"த்திலும் அவரையே கிருஷ்ணனாக்கி வைத்தனர். இவ்விரண்டு படங்களிலும் பாரதியின் வேஷமும் நடிப்பும் நன்கு சோபித்தது.

மேற்சொன்ன படங்களுக்குப் பிறகு பாரதியின் முகாம் கோவையிலிருந்து சேலத்திற்கு மாறியது. மாடர்ன் தியேட்டர்ஸின் "பொன் முடி"யில் அவர் கதாநாயகனாக நடித்தார். மாதுரியம், அவரும் காதல் கட்டங்களில் கொஞ்சம் தாராளமாகவே நடித்திருந்தார்கள். இப்படத்தின் மூலம் சினிமா உலகில் பாரதியின் மதிப்பு ஒரு படி உயர்ந்தது. அதன் விளைவாக, அவருக்கு "திகம்பர சாமியார்" படத்தில் நடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இத்துடன் அவர் சேலம் முகாமை முடித்துக் கொண்டு சென்னையை அடைந்தார்.

சென்னையில் அவரை "என் தங்கை" வரவேற்றாள். பிறகு அவர் "மாப்பிள்ளை" ஆனார். இவ்விரண்டு படங்களிலும் பாரதியின் நடிப்பு போற்றக்கூடியதாய் அமைந்துவிட்டது. அதுவும் "மாப்பிள்ளை"யில் அவர் ஒரு டாக்டராகத் தோன்றி, அடக்கமாகவும் அழகாகவும் நடித்திருக்கிறார்.

பாரதி நடித்த "மதன மோஹினி," யும், "குமாஸ்தா"வும் சில வாரங்களு

ங்கு முன் வெளிவந்து ஓடிக்கொண்டிருக் கின்றன. இவ்விரண்டு படங்களிலும் அவரது நடிப்பு பிரமாதமாயில்லை.

தற்போது பாரதி. "முயற்சி". "சோபா". "புது யுகம்", "பூமாலை", "பூகம்பம்", "சந்தேகி". "அனுதை" ஆகிய ஏழு படங்களில் நடித்து வருகிருர்.

நாடக நாட்களில் கொஞ்சகாலம்முனி சாமி தேவர் என்பவரிடம் ஆரம்ப சிக்ஷை பெற்று, பிறகு தாமாகவே பாடிப் பாடி தம் சங்கீதத்தை விருத்தி செய்துகொண் டார் பாரதி. மதுரை பக்கங்களில் அந் நாட்களில் அவர் சில கச்சேரிகளைச் செய் திருக்கிருர். சமீபத்தில்கூட ஏழெட்டு மாதங்களுக்குமுன் அவர் திருவள்ளூரில் ஒரு கல்யாண வீட்டில் கச்சேரி செய் தார். இவ்வளவு இருந்தும் அவர் சினிமா வில் புகழ் பெறுவதற்கு சங்கீதத்தை ஆதாரமாகக் கொள்ளாமல் விட்டுவிட் டார். "மீரா", "வால்மீகி", "கஞ்சன்", "கிருஷ்ண விஜயம்" ஆகிய படங்களில் மட்டும் அவர் குரலைக் காட்டியிருக்கிருர்.

பாரதியின் தாய் பாஷை சௌராஷ் டிரம். தமிழ் பாஷையை நன்ருகப் பேச வும், படிக்கவும், எழுதவும் தெரியும். ஹிந்தி, தெலுங்கு ஆகிய பாஷைகளை அவர் தற்போது பயின்று வருகிருர்.

பாரதியின் சகோதரர் நன்னுசாமி மதுரை நிட்டிங் கம்பெனியில் ஊழியம் செய்துவருகிருர். பாரதியின் தாய் தந்தை இருவரும் காலமாகிவிட்டனர். தற்போது சென்னையில் குடியேறியிருக் கும் பாரதிக்கு 1949ம் வருஷத்தில் திரு மணம் நடந்தேறியது. அவரது மனைவி இந்திரா அவருக்கு ஜெயமணி, ஜெயசந் திரன் என்ற இரு செல்வக் குழந்தைகளை ஈன்றளித்திருக்கிருர். மூத்த பெண் ஜெய மணிக்கு தற்போது 3 வயது ஆகிறது.

பாரதி இதுவரை ஒரு டஜன் படங்களு க்குமேல் நடித்துவிட்டார். படத்திற்குப் படம் அவர் நடிப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது; இருந்தபோதிலும், இன்னமும் சினிமா உலகம் அவரைச் சரி வரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அவ ருக்கு நல்ல சந்தர்ப்பங்களும், உத்ஸாக மிக்க ஆதரவும் நிறையக் கிட்டுமானல், "பாட்டிற்கு ஒரு புலவன் பாரதி" என்று மக்கள் புகழ் பாடுவதேபோல் "படத் திற்கு ஒரு நடிகன் பாரதி" என்று நாம் பெருமையோடு புகழ்ந்து பேசும் காலம் சீக்கிரமே ஏற்படலாம்.

குட்இயர் படக்காட்சி

குட்இயர் டயர் அண்டு ரப்பர் கம் பெனி ஆப் இந்தியா லிமிடெட் ஸ்தாப னத்தாரால் சென்ற பிப்ரவரி மாதம் 26-ம் தேதி சென்னை கன்னிமரா ஹோட் டலில் நடத்தப்பட்ட படக் காட்சிக்கு சென்னையில் அநேக தொழில் பிரமுகர் களும், நிர்மாண என்ஜினியர்களும், பத் திரிகையாளர்களும் விஜயம் செய்திருந் தனர். விஜயம் செய்தவர்களை கம்பெனி யின் சார்பாக அதன் பொதுஜனத் தொடர்பு அதிகாரியும் விளம்பர மானே ஜருமான ஏ. பி. எம். டேய்லர் வர வேற்று, இந்தியாவிலேயே கைதேர்ந்த தொழிலாளர்களால் செய்யப்படும் 'குட் இயர் ப்ளேயோபோம்' மற்றும் இயந்திர சாதனங்களுக்கான ரப்பர் பண்டங்களை "சுலபமாகச் செல்வது" "மலையைக் கடப்பது எப்படி?" ஆகிய இரண்டு கலர் படங்களால் விளக்க வைத்து, அதன் பயனையும் எடுத்துரைத்தார். இப்பண்டங்கள் தயாரிக்கப்படும் இலா காவின் மானேஜரான கே. ஹெச். ஜான்ஸ்டன் சென்னை சட்ட சபையின் நாற்காலிகளுக்கு ப்ளேபோபோம் குஷன் கள் பொருத்தப்பட்டுள்ளதையும். சிந் திரி ரசாயன சாலையில் குட்இயர் கன் வேயர் பெல்டிங் உபயோகிக்கப்படுவதை யும் குறிப்பிட்டார். காட்சியின் முடிவில் டேய்லர், "குட்இயர்" என்ருல் டயர் களுக்குப் பிரசித்தமானது என்று உல கம் முழுவதும் தெறியும்; ஆனல் தற் போது நாம் பார்த்த இரண்டு படங்களி லிருந்து எவ்வாறு ரப்பர் கோடிக்கணக் கான மக்களுக்கு நன்கு சேவை செய்ய முடியுமென்றும். எவ்விதங்களில் நம் நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்திக் குப் பயன்படக் கூடுமென்ற வழிகளைக் கண்டுபிடிப்பதுதான் நமது கம்பெனி யின் நிரந்தரமான நோக்கமென்றும் குறிப்பிட்டார்.

134145

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1.

ஒரு மர்மம் கேளுங்கள்!
"எங்கப்பா எப்பொழுதும் சிடு சிடு என்று இருக்கிறார்டா?"
"எங்கப்பா அப்படியில்லேடா? எப்பொழுதும் சந்தோஷமாகவே இருக்கார்டா!"
?
அப்படியானால் உங்கப்பா N. V. S. பட்டணம் பொடி போடுபவராகத் தான் இருக்கவேண்டும்.
N.V. ஷண்முகம் கம்பெனியார்
NVS
த. பெ. 555. வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

விரைவில் வருகிறது !

பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்

பெற்ற தாய்



G.வரலக்ஷ்மி • நாகேஸ்வர ராவ் • M.N.நம்பியார்
T.D.வஸந்தா • K.R.செல்லம்

ஸ்டூடியோ:
பிரகாஷ்

டைரக்ஷன்
பிரகாஷ் ராவ்

G.H.RAO

விநியோகஸ்தர்கள்: ஏவிஎம் லிமிடெட். மதராஸ்.2